
நைலான் கயிறு
சுஜாதா
விசா பப்ளிகேஷன்ஸ் * நைலான் கயிறு * சுஜாதா

# நைலான் கயிறு

சுஜாதா

விசா பப்ளிகேஷன்ஸ்
புதிய எண் 16 ப.எண் 55,
வெங்கட்நாராயணா ரோடு
தி.நகர், சென்னை - 600 017
தொலைபேசி : 4342899, 4327696
தொலைநகல் : 91-44-4341539

முதற் பதிப்பு : செப்டம்பர், 1971
ஆறாம் பதிப்பு : செப்டம்பர், 1991
ஏழாம் பதிப்பு : டிசம்பர், 1993
எட்டாம் பதிப்பு : அக்டோபர் 2000 (விசா வெளியீடு)
ஒன்பதாம் பதிப்பு : செப்டம்பர் 2007
உரிமை : ஆசிரியருக்கு

வெளியீடு : விசா பப்ளிகேஷன்ஸ்

NYLAN KAIYIRU

by

SUJATHA

*Paper used* : 11.6 Cream wove

*Pages* : 144

*Price* : 40/-

***Available at :***

THIRUMAGAL NILAYAM
New No : 16, Old No : 55
Venkatnarayana Road,
T. Nagar, Chennai - 600 017
✆ : 4342899, 4327696
Fax : 91 - 44 - 4341559

*கிடைக்குமிடம் :*

திருமகள் நிலையம்
புதிய எண் : 16, பழைய எண் : 55,
வெங்கட்நாராயண ரோடு,
தி. நகர், சென்னை - 600 017
தொலைபேசி : 4342899, 4327696
தொலைநகல் : 91 - 44 - 4341559

*Typeset by* : Saguram Graphics Chennai - 24

*Printed at* : உதயம் ஆப்செட்ஸ், செ-2

# முதல் நாவல்

நைலான் கயிறு என்னுடைய முதல் நாவல். இது குமுதம் இதழில் 14 வாரங்கள், 1968ல் வெளி வந்தது. இந்தக் கதையின் அமைப்பில் இப்போது இதை நோக்கும் போது பல திருத்தங்கள் செய்யலாம் எனத் தோன்று கிறது. செய்யவில்லை. காரணம் இதை எழுதும்போது இருந்த என் இளமையும் தமிழில் புதியதாக பல முயற்சிகள் வசன நடையில் செய்து பார்க்க வேண்டும் என்கிற ஆர்வமும் இப்போது எனக்கு இல்லை. இடைப்பட்ட நாட்களில் எத்தனையோ சுகதுக்கங் களைப் பார்த்து விட்டேன். உலகத்தைத் திருத்தும் உத்தேசத்தைக் கைவிட்டு விட்டேன். நைலான் கயிறு ஒரு தலை முறையினரைப் பல விதங்களில் மாற்றி யிருக்கிறது அல்லது பாதித்திருக்கிறது என்பது எனக்குத் தெரிய வந்தது.

நைலான் கயிறு ஓர் ஆரம்பம். இது பல வேறு வடிவங்களில் ஏன் ஒரு படக் கதையாகக்கூட வெளி வந்து விட்டது. முப்பது வருஷம் கழித்தும் மறுபதிப்புத் தேவைப்படுவது எனக்குப் பெருமையே.

- சுஜாதா

அன்புள்ள வாசகர்களுக்கு, வணக்கம்.

புதிய பதிப்புகளாக சுஜாதாவின் புத்தகங்களை வெளியிடும் உற்சாகம் எங்களுக்குக் கொஞ்சம் கூட குறையவில்லை. அவருக்குப் பெருகியுள்ள வாசகர் வட்டம் ஒரு தனி மதிப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக் கிறது. தன் பலத்தை உணர்ந்து எழுத்தில் சில புதுமை களைச் செய்து வருகிறார். வாசகர்களில் பல லட்சம் பேர்ஆர்வமுடன் படித்து வியப்படைகின்றனர். 1971ல் வெளியிட்ட முதல் பதிப்பு தொடர்ந்து எட்டாவது பதிப்பாக வந்து இன்றும் வாசகர்களால் விரும்பப் படுகிறது.

உங்கள்

விசா பப்ளிகேஷன்ஸ்

# நைலான் கயிறு

*சுநந்தாவின் டயரியிலிருந்து...*

18.09.65

எனக்கு இன்று பதினெட்டு வயசாகிறது. எத்தனை மாறி யிருக்கிறேன்! போன வருஷம் தைத்த ப்ளவுஸ் எல்லாம் பிடிக்கிறது. உயரமாக வளர்ந்திருக்கிறேன். கண்ணாடிக்கு முன்னாலே வித விதமா டிரஸ்லேயும் அன்டிரஸ்லேயும் நின்று என்னையே பார்த்துக்கறபோது வெட்கமாகவும் இருக்கிறது. தொடர்ந்து பார்த்துக் கொள்ள ஆசையாகவும் இருக்கிறது. ரேடியோ சிலோன் கேட்டு அலுத்துப் போய் விட்டது. வராந்தாவில் உட்கார்ந்து ஆண்களைப் பார்த்து ஒவ்வொருவருக்கும் 'மார்க்' போட்டுக் கொண்டிருக்கிறேன். எல்லாரையும் 'அவ'ரோடு ஒப்பிட்டுப் பார்க்கிறேன். இந்த ஒரு வாரத்திலே என் உடம்பிலே புதுசா ரத்தம் ஓடுகிறாற் போலத் தெரிகிறது! எதுக்கோ விதவிதமாக அலங்காரம் செய்து கொள்கிறேன்.

என் அருமை சுநந்தா! நீ ஒரு பைத்தியம். எப்படிப்பட்ட பைத்தியம்? எழுதாதே! அந்த வார்த்தையை உபயோகிக்காதே!

அவர் கொடுத்த புஸ்தகத்தைப் படிக்க ஆரம்பித்து விட்டேன்... ரகசியமாக!

## நட, ஓடாதே! 1

*இடம்* : பம்பாய், மகாத்மா காந்தி ரோடு.
*நேரம்* : இரவு ஏழு முப்பத்தாறு.

**அ**வன் நடந்தான் சற்றுத்தூரம். தெரு ஓரத்தில் மிதந்து சென்று கொண்டிருந்த டாக்ஸியைத் தடுத்து நிறுத்தி தானே கொடியை மடக்கிக் கதவைத் திறந்து உட்கார்ந்து கதவைச் சாத்தினான். "பெட்டர் ரோட்!"

டாக்ஸி பவாய் வளைந்து ஒன்று, இரண்டு, மூன்றாவது கியருக்கு வந்து, வேகம் பிடித்து, வேகம் குறைந்து, சிவப்பு விளக்கில் தயங்கி, அம்பர் விளக்கில் நழுவி, பச்சை விளக்கில் விரைந்து 'ஜாஸ்' சங்கீதம் போல் பறந்தது.

சத்தியமாக அவன் செய்யப்போவதை எதிர்பார்க்க மாட்டீர்கள். என்ன செய்தான்? சொல்லலாம். ஃப்ளை ஓவரைத் தாவியதும் பெட்டர் ரோடில் டாக்ஸியை வேகம் குறைக்கச் சொன்னான். பதினைந்து மாடி, பத்து மாடி, ஒன்பது மாடிக் கட்டிடங்களைப் பார்த்துக் கொண்டே வந்தவன், ஒரு கட்டிடத்தின் முன் நிற்கச் சொன்னான். இறங்கினான். ஐந்து ரூபாய் கொடுத்தான். சில்லறை வாங்க மறுத்தான். நடந்தான்.



வலுவான மெதுவான ராஜஸ நடை. தான் செய்யப் போவதில் ஒரு பிடிவாதமும் திருப்தியும் அவசியமும் ஆணவமும் தோன்றும் நடை.

'திவோலி கார்டன்ஸ்' என்கிற நெட்டையான கட்டிடத்தின் முன் நின்றான். அதன் புறவாயிலில் பரீட்சை ரிஸல்ட் போலிருந்த பெயர்ப் பலகைகளில் ஒரு பெயரைத் தேடினான். ஐந்தாவது மாடியின் மூன்றாவது பகுதிக்கு எதிரே இருந்தது அவன் தேடிய பெயர்.

காத்திருந்த லிஃப்டில் நுழைந்து ஐந்தை அழுத்தினான். அவனை அணைத்து மூடி, மேல் நோக்கி விரைந்தது லிஃப்ட்.

ஐந்தாவது மாடியில் லிஃப்ட்டின் காற்றுக் கதவுகள் மென்மையாகப் பிரிய, எதிரே ஓர் ஆள் வருவதைப் பார்த்தான். உடனே லிஃப்ட்டில் 6-ஐ அழுத்தினான். மறுபடி மூடின கதவுகள். ஆறாவது மாடியில் வெளிவந்த அவனை ஒருவரும் பார்க்கவில்லை. தன் கைக் கடியாரத்தை ஒரு முறை பார்த்தான். இருபத்தைந்து செகண்ட் தயங்கினான். அருகில் இருந்த மாடிப் படிகளில் மெதுவாக ஐந்தாவது மாடிக்கு இ
ற
ங்
கி
னா
ன்.

**இ**ப்பொழுது ஐந்தில் ஒருவருமில்லை. ஃப்ளோரஸெண்ட் வெளிச்சத் தண்மையில் மெதுவாக மெதுவாக நடந்தான். எதிரே தூரத்தில் கடல் இருள். அதன் இரைச்சல் மிக மெலிதாகக்

கேட்டது. வேறு சப்தங்கள் இல்லை. ஒரே மாதிரியாக இருந்த கதவுகளில் பொறித்திருந்த எண்களின் பித்தளைப் பிரகாசங் களைக் கவனித்துக் கொண்டே சென்றான். 500 அவனுள் 501 மெதுவாக ஒரு 502 பதற்றம் ஏற்பட்டது 503!

ஃபார்மைகா கதவில் ஜி.என். கிருஷ்ணன் என்ற பெயர்ப் பலகை. அதன் அருகில் நீலவட்டம். அதன் நடுவில் வெண் பொத்தான். அதைக் கட்டை விரல் பதிய அழுத்தினான். உள்ளே சங்கீதமாக 'டிங் டங்' என்றது மணி. தயங்கினான். கைகளைத் துடைத்துக் கொண்டான். மறுபடி அழுத்தினான்.

டிங் டங்!

கதவு திறந்தது. திறந்தவன் நம் கதாநாயகன் இல்லை. பார்க்கப்போனால் ஒன்று இரண்டு மூன்று என்று ஐந்நூறு வரை எண்ணுங்கள். அதற்குள் திறந்தவன் இறந்து போவான்.

அவனுக்கு வயது முப்பதிருக்கும். மெலிந்த தேகம். கவர்ச்சியான முகம். ரசிக்கக்கூடிய சன்னமான வழுக்கை, பூப் போட்ட சட்டை. வாயில் சிகரெட் தொங்க "எஸ்?" என்றான். அந்த 'ஸ்'ஸில் நீலப்புகை உதட்டில் விளையாடியது.

ஆனால் உடனே வந்தவனை அடையாளம் கண்டு கொண்டான். "ஓ மை காட்? குட் ஓல்ட் ஜே! வாட் எ ப்ளெஸண்ட் ஸர்ப்ரைஸ்! உள்ளே வா, உள்ளே வா."

வந்தவன் கூடச் சிரித்தான். "பார்த்து ரொம்ப நாளாகி விட்டதல்லவா?"

"வருஷங்கள்! வருஷங்கள்! உட்கார். என்ன சாப்பிடு கிறாய்? காஃபி அல்லது அதைவிடச் சுரத்தாக ஏதாவது வேண்டுமா?"



"நான் காப்பி சாப்பிட வரவில்லை. கிருஷ்ணன், உன்னிடம் ஒரு..."

"உட்கார் முதலில், ஒரு நிமிஷம்." உள்ளே கெட்டில் சப்தமிடுகிறது. கிருஷ்ணன் உள்ளே சென்றான்; வந்தவன் சுற்றுமுற்றும் பார்த்தான். பார்த்ததில் ஒரு நோக்கமிருந்தது. சுத்தமான பணக்கார அறை. கீழே லினோலியம். செங்கல் சிவப்பில் நடுவே கம்பளம். மடங்கிப் படுக்கையாகக் கூடிய சோபா. கண்ணை உறுத்தாத டிஸ்டெம்பர் நீலச்சுவரில் ஒரே ஒரு சித்திரம். ஸெஸான் சித்திரம் ஒன்றின் பிரதி. இடது பக்கம் அகல மாக 'சினிமாஸ்கோப்பில்' ஒரு ரேடியோ கிராம், ஃப்ரிஜ். இடது பக்க அறை திறந்திருந்தது. அதில் தெரிந்த படுக்கை ஓர் ஆசாமிக்குச் சற்று அகலமான படுக்கை. வார்னிஷ் பளபளக்கும் குள்ள மேஜையில் அமெரிக்க செய்திப் பத்திரிகை ஒன்று. திரைகள். விளக்குகள். வெளிச்சம் மென்மையாக வழியும் விளக்குகள்.

கிருஷ்ணன் வந்தான். "வாட் வில் யூ ஹாவ்? விஸ்கி?"

"நான் குடிப்பதில்லை."

"எனக்குப் பர்மிட் இருக்கிறது. சட்டத்துக்கு உட்பட்ட மயக்கம். லோ ப்ளட் பிரஷர்! ஹா! ஹா!" என்று சுதந்தரமாகச் சிரித்தான்.

வந்தவன் சிரிக்கவில்லை.

"கிருஷ்ணன், அது என்ன ரேடியோகிராமா?"

"ஆமாம். என்னிடம் நிறைய இசைத்தட்டுக்கள் இருக்கின் றன. எல்லாம் மேல் நாட்டு இசை. வாத்திய இசை பிடிக்குமா?"

"பிடிக்கும்."

"வைக்கட்டுமா?"

"வை."

ரிக்காட் ப்ளேயரின் கதவைத் திறந்து அழகழகான வர்ண ஜாக்கெட்டுகள் அணிந்த இசைதட்டுக்களைக் கட்டாக எடுத்து அவன் முன் வைத்தான். "நீ தேர்ந்தெடு. நான் பேசுகிறேன். நிச்சயமாக உனக்கு விஸ்கி வேண்டாமா? பம்பாயில் கிடைப்பது அபூர்வம். ஸ்காட்ச்!" என்றான்.

"நிச்சயமாக வேண்டாம்."

"சரி... நான் ஒன்று கலந்து கொள்கிறேன். உனக்காக பெர்கொலேட்டரில் காஃபி வைத்திருக்கிறேன். தயாராகிவிடும்." ரெப்ரிஜிரேட்டரைத் திறந்து சாராய பாட்டிலை எடுத்து ஒரு சுத்தமான கண்ணாடியில் இரண்டுவிரல் அளவுக்கு ஊற்றிக் கொண்டான். சோடா கலந்தான். ஸோபாவில் உட்கார்ந்தான். "என்ன ஜே! பேசவே மாட்டேன் என்கிறாயே?"

"கிருஷ்ணன், நீ யாரையாவது எதிர்பார்க்கிறாயா?"

"இன்னும் ஒரு மணி நேரத்துக்கு இல்லை."

"கதவு சாத்தியிருக்கிறதா?"

"ஆமாம்... ஐ ஸே என்ன இது, ஜேம்ஸ் பாண்ட் வேலையா?"

"இல்லை" என்றான் இசைத் தட்டுக்களைத் தொடாமல் மேலாகப் பார்த்துக் கொண்டே.

"எத்தனை நாள் கழித்துப் பார்க்கிறோம்! உன் தங்கை எப்படி இருக்கிறாள்?"

அவன் இதற்குப் பதில் சொல்லவில்லை. "இந்த ரிகார்ட் போடேன்." என்றான். எல்லாவற்றிக்கும் மேலே இருந்த இசைத் தட்டு அது.



'நட - ஓடாதே!' என்கிற 'வென்சர்ஸ்' கிதார் வாத்ய கோஷ்டியின் இசைத்தட்டு அது. அகலமான, பக்கத்துக்கு ஆறு பாட்டுப் பதிந்த இசைத்தட்டு.

"உனக்கு வென்சர்ஸ் பிடிக்குமா? குட்!"

கிருஷ்ணன், ரிகார்ட் ப்ளேயரின் அருகில் சென்று அதைத் திறந்து. அதன் மத்தியில் இசைத்தட்டைப் பொருத்தி அதன் 'ஆட்டோ' என்கிற ஸ்விட்சைத் தட்டி விட்டான். அதன் மெஷின் மூளை, ஆணையிட்டபடி செயல்பட ஆரம்பித்தது. அதன் 'கார்ட்ரிட்ஜ்' விலகிக் கொண்டது. இசைத்தட்டை அணைத்திருந்த பேக்லைட் கரம் விலகிக் கொண்டது. மெத் தென்று சுழன்று கொண்டிருந்த நடுத்தட்டில் விழுந்தது. கார்ட்ரிட்ஜ் மெதுவாக அதன் ஆரம்ப ஓரத்தை அணுகி முத்த மிட்டுச் சுவை பார்த்து அதன் மிக மெல்லிய வரிவடிவப் பதிவு களைச் சங்கீதமாக்கியது. வெடித்தது எலக்ட்ரிக் கிதார். டபிள் பேஸ்கள் கீழேயிருந்து புறப்பட்டுத் துடித்தன. அவைகளுடன் ஜாஸ் டிரம்கள் சேர்ந்து கொண்டன. கிருஷ்ணன் வந்து உட் கார்ந்தான்.

வந்தவன், "இன்னும் கொஞ்சம் பலமாக வை" என்றான்.

"இன்னுமா?"

"ஆமாம். எனக்கு உரத்த சங்கீதம் பிடிக்கும்."

கிருஷ்ணன் மறுபடி அதனருகில் சென்று குனிந்து ப்ளாஸ் டிக் குமிழைத் திருப்பினான்.

கிதாரின் ஜி கம்பிகள் அதிர்ந்தன. பலத்த சங்கீதத்தில் அவன் கிருஷ்ணனைப் பின்னாலிருந்து அணுகினான்.

கிருஷ்ணன் பேஸ் ட்ரிபிள் குமிழ்களைச் சரிசெய்து கொண்டிருக்க, அணுகியவன் பையிலிருந்து ஒரு கயிற்றை

எடுத்தான். இரண்டரை அடி நீளமுள்ள கட்டைவிரல் பரிமாண மிருக்கும் நைலான் கயிறு அது.

அரை செகண்ட் செயலில் கயிற்றை அவன் கழுத்தில் இரண்டு சுற்றுச் சுற்றி இறுக்கக்க்கினான்.

என்ன அருமையான சங்கீதம்! துடிக்கும் உதிரும் அதிரும் கிதார் கம்பிப் பின்னல்கள்! இசையின் மத்தியில் கிருஷ்ணன் திணறித் திணறித் திணறிச் செய்த வினோத சப்தங்கள் கேட்க வில்லை.

மிக அருமையான சங்கீதம். கயிறு மேலும் மேலும் இறுகியது.

ரப் டீர ரப் டீர ரம் என்ற ஜாஸ் டிரம்கள். கிருஷ்ணனின் கைகள் இலக்கு இல்லாமல் பின்னால் இருந்த பலத்தைப் பற்றத் திணறின.

கிதார் கிதார் கிதார்! நான்கு இளைஞர்கள் ஒன்று சேர்ந்து வாசித்த கிதார்! இசை வெள்ளம். அந்த இறுக்கத்தை மூன்று நிமிஷங்கள் கூடத் தாங்கவில்லை கிருஷ்ணன். துவண்டு கலைந்து பரவலாக 'கரபூம்' என்று விழுந்தான்... உயிரில்லாமல்.

வந்தவன் நெற்றி வியர்வையைத் துடைத்துக்கொண்டான். கயிற்றைத் தளர்த்தினான். தன் கைக் கடியாரத்தைப் பார்த்தான். கதவை அணுகினான். கயிற்றைப் பையில் போட்டுக் கொண டான். தாளை மெதுவாகத் திறந்து கவனித்தான். வெளியே யாருமில்லை. கதவை மூடினான். வேகமாக லிஃப்ட்டை நோக்கி நடந்தான். சுவரிலிருந்த ப்ளாஸ்டிக் பட்டனை அமுக்கினான். பளிச் பளிச் என்று 1 - 2 - 3 என்று விளக்குகள் எரிந்து கொண்டு வந்தன. ஐந்தாவது மாடிக்கு வந்து, காலி லிஃப்ட் வாய்த் திறந்து சுவாசித்தது.



இறங்கி ஒரு நிமிடத்தில் பம்பாய் நகரத்தின் லட்சங்களில் கரைந்தான்.

இங்கே ரிகார்ட் ப்ளேயர் இரண்டாவது பாடலைப் பாடிக் கொண்டிருந்தது.

உள்ளே பெர்க்கொலேட்டரில் காப்பி கொதித்துக் கொண்டு ஆவிப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தது.

*சுநந்தாவின் டயரியிலிருந்து...*

அவர்கள் எல்லோரும் அந்த ரூமில் 'ப்ரிட்ஜ்' ஆடு கிறார்கள், 4 ஸ்பேட் 5 டைமண்ட் என்று. நான் இந்த ரூமில் தொடர்கதை படிக்கிறேன். ஹாலில் இருக்கும் கண்ணாடி வழியாக அவர் தெரிகிறார். என்னைப் பார்த்துச் சிரிக்கிறார். இதற்கு முன்பு எத்தனையோ தடவை சிரித்ததற்கும் இதற்கும் வித்தியாசம் இருக்கிறது. இதில் புரிகிற அர்த்தம் எனக்குப் புரியவில்லை. ஆனால் பிடிக்கிறது.

நான், அண்ணன், அவர், மூன்று பேரும் சினிமாவுக்குப் போகிறோம்; இப்பொழுது மட்டும் எவ்வளவு வித்தியாசமாகப் பழகுகிறார்! என் பக்கத்தில் உட்கார மாட்டாராம்! என்னைப் பார்த்துப் பேசமாட்டாராம்! அண்ணனுடனேயே பேச்சு எவ்வளவு சாது! ஆனால் தனியான சந்தர்ப்பங்களில் மட்டும் அவர் ஒரு புலி. நிழலிலேயே தயங்கி, எவ்வளவு நேரம் ஆனாலும் சந்தர்ப்பம் வருகிறவரை அங்கேயே காத்திருக்கிற புலி.

அவர் என்னை விரும்புகிறார் என்பது மட்டும் புரிகிறது என்னை என்றால் என் மனத்தையா? என் குரலையா? என் உடம்பையா? எனக்கு என்னவோ காதல் என்கிறது புத்தக வார்த்தையாகப் படுகிறது. அது நிச்சயம் அவர் கண்ணாடி வழியாகப் பார்த்துச் சிரித்த சிரிப்பில் இல்லை. என்ன செய்யப் போகிறேன்?

## நீ எங்கே இருந்தாய்? — 2

ஹரிணி (வயது இருபத்தெட்டு, வடிவம் இருபத்து நாலு) ஸயானில் பஸ் ஏறினாள். மேல் மாடிக்குப் போய் உட்கார்ந்தாள். அவள் போகும் போதும், நடக்கும் போதும், உட்காரும் போதும் பலர் அவளையே கவனித்தனர். அவர்கள் பார்வையில் சகோதர பாவம் சத்தியமாக இல்லை. காரணம் ஹரிணியின் வடிவம்,, அமைப்பு. அந்த அமைப்புக்கு ஏற்ப அவள் அணிந்திருந்த உடை. (மேலே நீலம், கீழே கறுப்–) அவளிடமிருந்த மெலிதான யுடிகொலோன் வாசனை. அவள் செம்பட்டை – எக்ஷாம்பூ – தலையின் புதிய, காற்றில் அலையும் அலட்சியம்.

ஹரிணிக்குத் தன்மேல் வழியும் பார்வைகள் பழக்கமாயிருந்தன. எவரையும் பார்க்காமல் நேராக அவள் உட்கார்ந்தாள். முழங்காலில் உடையைச் சரிசெய்து கொண்டாள். தன் பையிலிருந்து, 'பெர்ரிமேஸன்' நாவலை எடுத்தாள். அடையாளம் வைத்திருந்த நூற்றறுபதாம் பக்கத்திலிருந்து படிக்கத் துவங்கினாள்.

பெட்டர் ரோடு போய்ச்சேர இன்னும் அரைமணியாவது ஆகும். பதினைந்து இருபது பக்கம் படிக்கலாம். தான் சந்திக்கப் போகும் கிருஷ்ணனைப் பற்றி நினைக்காமல் இருக்கலாம்.

"மேஸன்: ஐ அப்ஜெக்ட்! இது வழக்குக்குச் சம்பந்தமே இல்லாத கேள்வி."

அவள் அழகான முகத்தைப் பாருங்கள். ஹரிணியை நீங்கள் நிச்சயம் சந்தித்திருப்பீர்கள் – சினிமாக்களுக்குச் சீக்கிரம் செல்பவர்களாயிருந்தால். அவள் 'ஜே. ஜே. பப்ளிஸிடி'யில் ஒரு மாடல.

ஹரிணியின் வாழ்க்கை ஒரு வித பரிதாபத்திற்குரியது. பிறந்தது கோவாவில் டபோலிம் என்ற இடத்தில். அதை மறந்து, பம்பாய் வந்து அதன் நியான் மயக்கத்தில் நிலைமை மறந்து, தப்பான மனிதர்களைச் சந்தித்து, சாகசங்கள் கற்றுக்கொண்டு இருபத்தெட்டு வயதில் – மற்ற இடங்கள் காலியிருக்க, வேண்டுமென்றே அவள் அருகில் ஒருவன் உட்கார்ந்து கொண்டான் – ரகசியங்கள் எல்லாம் புரிந்து. பகல் எல்லாம் தூங்கி, வேலை தேடி, கிடைத்து, கண்ணீர் சிந்தி, துடைத்து, கண்ணகி, சாவித்திரி இத்யாதிகளிலிருந்து வெகு தூரம் வந்துவிட்ட நாகரிக இந்தியப் பெண்ணின் ஒரு மோசமான உதாரணம் ஹரிணி.

அவள் அண்ணன் தேவிடம், கிருஷ்ணன் கிதார் வாத்தியம் கற்றுக் கொள்ளத் தொடங்கியபோது, அவள் கிருஷ்ணனுக்கு அறிமுகமானாள். இந்த அறிமுகம் 'ஹல்லோ'வில் தொடங்கி, கடைசியில் அளவுக்கு மீறியும் போய்விட்டது. கிருஷ்ணனைக் கல்யாணம் செய்து கொள்ள லேசான உத்தேசம் இருந்தது அவளுக்கு. கிருஷ்ணன்கூட ஒரு தடவை 'ஜின்' மயக்கத்தில் அவள் கன்னத்தருகே கேட்டிருக்கிறான். அதெல்லாம் பழைய கதை. இப்போது நிலைமை மாறி விட்டது. கிருஷ்ணன் திரு வெள்ளாவில், அடுத்த மாதம் பாமினி என்கிற கேரளத்துப் பெண்ணை மணக்கப் போகிறானாம்.

ஹரிணியின் மனம் மேஸனிடம் இல்லை. 'கல்யாணம் செய்துகொள்ளப் போகிறாயா, மிஸ்டர்? யூ பாஸ்டர்ட்! நான் ஒன்றும் பழைய உடையல்ல – தேவையில்லாதபோது களைந்து எறிவதற்கு! என் கோபம் உனக்குத் தெரியாது. நான் ஒரு மோச



மான எதிரி. என்னிடம் உன் கடிதங்கள் இருக்கின்றன. படங்கள் இருக்கின்றன. அவைகளைப் பயன்படுத்தப் போகிறேன்! அன்புள்ள கிருஷ்ணன்! 'ஐ காஸ்ட் மனி!' என்று அவள் தனக்குள் சொல்லிப் பார்த்துக்கொண்டாள்.

போன மாதம் அவனைச் சந்தித்த போது நடந்தது ஞாபகம் வந்தது. சீ அவனைப் பற்றி நினைக்காதே. புழு...! படிக்கலாம்.

"மேஸன்! பதினைந்தாம் தேதி இரவு. நீ எங்கே இருந்தாய்?"

பதினைந்தாம் தேதி இரவு, நாம் எங்கே இருந்தோம் என்று ஞாபகப்படுத்திக் கொண்டு சற்று வெட்கப்பட்டாள் ஹரிணி.

லிஃப்ட் ஐந்தாவது மாடிக்கு ஏற ஏற, ஹரிணியின் கோபம் ஏறிக் கொண்டே வந்தது. வேகமாக, வேகமாக நடந்தாள்.

503'ன் பொத்தானை அழுத்...

"டிங் டங்."

காத்திருந்தாள்.

மறுபடி அழுத்தினாள். பதில் இல்லை.

கதவைக் கையால் தட்டினாள். கதவு தானே திறந்து கொண்டது. அறையில் ஒருவருமில்லையா? "கிருஷ்" என்று கூப்பிட்டுக் கொண்டு தயங்கி உள்ளே சென்றாள்.

சிரக் சிரக் சிரக் என்று சப்தம் – ஓடிக் கொண்டிருந்த ரிகார்ட் ப்ளேயர் கடைசியில் நொண்டியடிக்கும் சப்தம்.

"கிருஷ்..."

அப்பொழுதுதான் கீழே கிடந்தவனைப் பார்த்தாள். ஏன் இப்படிக் கிடக்கிறான்! குடித்திருக்கிறானா என்ன? அவன்

கிட்டத்தில் சென்றாள். அவன் முன்னே உட்கார்ந்தாள். அவனைப் புரட்டினாள்.

தெரிந்த முகம்.

திறந்த வாய்.

செங்குததாகப் பார்க்கும் கண்கள்! கண்கள்! கண்கள்!

அவளுக்குப் புரிய நேரமாகியது. செத்தவனை அவ்வளவு கிட்டத்தில் பார்த்தது கிடையாது... புரிந்த போது - 'ஓ மை குட் காட்! நான் செய்யவில்லை. நான் செய்யவில்லை. நான் புரட்டினேன். அவ்வளவுதான். விட்டுவிடு. என் கைப்பை எங்கே? நான் என்ன செய்யப் போகிறேன்? இந்த மாதிரி சமயங்களில் என்ன செய்ய வேண்டும்? வேண்டாம், பார்க்காதே! வீல் என்று கத்த வேண்டுமா? எனக்குத் தோன்றவில்லையே? என் கைக்குட்டை எங்கே?'

துடிக்கும் மார்பின் நடுவிலிருந்து எடுத்த கைக்குட்டை நனைந்தது. செகண்டுகளின் - இல்லை, செகண்டுகளின் பிரிவு களில் கூட அவள் பயம் துடிப்புடன் அதிகரித்தது. என்ன செய்ய வேண்டும்? டெலிபோன். ஆம். டெலிபோன் யாருக்கு? போலீஸுக்கு. இல்லை. முதலில் அண்ணன் தேவுக்கு டெலி போன் செய்யலாம். அவன் சொல்வதைச் செய்யலாம்...

அறை வாசலைப் பார்த்தாள். கதவு தன் ஸ்பிரிங் விடுதலை யில் மூடியிருந்தது. எதிரே டெலிபோன் வரவேற்றது. அருகே டைரக்டரி இருந்தது. அதன் முதல் பக்கச் சிவப்பில் தென்பட்ட அவசர போலீஸ் உதவியை நிராகரித்து அதன் பக்கங்களின் சிறிய சிறிய எழுத்துக்களில் 'ட்ரின்காஸ்' ரெஸ்டாரண்டைத் தேடினாள்.

ட்ரிம் டெய்லர்ஸ்.

ட்ரிம் ட்ரேடர்ஸ்.

ட்ரின் காஸ்! 5 3 2 8 1 6.



வெண்மை கலந்த பச்சை நிற டெலிபோனைத் தொட்டு எடுத்தாள். விரல்கள் நடுங்கின.

காம்தேவி டெலிபோன் எக்ஸ்சேஞ்சில் ஒரு 'யூனி செலக்டர்' டிர்ர்ர்ரக் என்று சுழன்றது. சழன்று மற்றொன்றுடன் இணைந்தது.

கட கட கட கடக் என ஐந்து தடவை உயர்ந்து மறுபடி டிர்ர்ரக் என்று விசிறல்.

கடகட கடக்... ஹரிணியின் இதயம்போல்.

"**ரோ**ஜாக்கள் சிவப்பு, என் அன்பே.

நீலங்கள் நீலம்.

சர்க்கரை இனிப்பு. என் அன்பே ஆனால்,

உன்னைப் போல் இனிப்பல்ல."

ஸாக்ஸபோன், பியானோ, கிதார், டிரம்கள் சகிதம் தேவ் இழைபோல, வெள்ளி இழைபோல பாடிக்கொண்டிருந்தான். பாட்டில் திரும்பத் திரும்ப வரும் லயத்துக்கு ஏற்ப அவன் கை சொடுக்கி பெண்டுலம் போல் ஆடினது சுவையாயிருந்தது.

பாதி இருட்டு... ட்ரின்காஸ்! டி ஆர் ஐ என் ஸி ஏ எஸ் என்று நியான் இரவைத் கீறும் ரெஸ்டாரண்ட் ட்ரின்காஸ். தேவின் பாட்டை ரசித்தவர்கள் சிலர் தான். மற்றவர்கள் பேசிக் கொண்டி ருந்தார்கள். ஆண்கள், பெண்கள். செத்த சிவப்பில் அந்தப் பெண்களின் லிப்ஸ்டிக் உதடுகளின் சலனத்தை ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டிருந்த ஆண்கள். அந்த ஆர்வத்தில், அக்கறையில் பொதிந்த விருப்பங்களைத் தெரிந்த பெண்கள். பம்பாய் ஜனத்தொகையின் மேலே மேலே மேலே இருக்கும் சில தனவந்தர்கள் உலவும் அக்கிரம விலை ஹோட்டல் ட்ரின் காஸ். இரவு 12 மணிக்கப்புறம் இங்கு நடக்கும் 'காபரே' ஒரு கா... நடனம்.

தேவ், பாட்டை முடித்துவிட்டுப் பியோனோவில் உட்கார்ந்த போது டெலிபோன் மணி ஒலித்தது. பில் எழுதும் பார்ஸி இளைஞன் அந்த இடத்தின் சப்தத்துக்கு மேல் அதைக் கேட்டுப் புரிந்து கொள்ள அரை நிமிஷமாயிற்று. எடுத்தான். "ட்ரின்காஸ். குட்ஈவினிங்."

"..........."

"யார்?"

"'.........." "..........."

"தேவா? ஓ எஸ், இருக்கிறார். ஜஸ்ட் எ மினிட்."

சங்கீதத்தின் மத்தியில் இருந்த தேவுக்கு ஒரு சீட்டு எழுதி அனுப்பினான். தேவ் பியானோ வாசித்துக் கொண்டே அதைப் பார்த்தவன், "ஓ.கே." என்று கையைக் காட்டினான்.

இளைஞன் டெலிபோனில், "மிஸ்! பாதிப் பாட்டின் நடுவில் வருவது அவரால் முடியாது. ஒரு நிமிஷ... இதோ முடித்து விட்டார். வருகிறார்."

தேவ் வந்து முகத்தைத் துடைத்துக்கெண்டு "ஹூ இஸ் இட்?" என்றான்.

"ஒரு பெண். இனிமையான குரல். ஹி இஸ் இன் எ மைட்டி ஹர்ரி."

"ஹலோ"

"..........."

"ஓ, ஹரிணி! என்ன விஷயம்?"

"...........
..........."



"ஹரிணி ஹரிணி! நிஜமாகவா? நீ எங்கே இருக்கிறாய்?... ஒரு நிமிஷம் இரு. நான் மற்றொரு டெலிபோனுக்குப் போகிறேன். போனை வைத்து விட்டு 532817-ஐ டயல் செய். கவலைப்படாதே. கலவரப்படாதே!"

டெலிபோனை வைத்துவிட்டு உள்ளே ஓடினான். தின்பண்டங்கள் தயார் செய்யும் பாண்ட்ரியைக் கடந்து மரப் படிகளை இரண்டு மூன்றாகத் தாவி ஏறி இடது பக்கம் காலியாயிருந்த ஆபீஸ் அறைக்குள் அவன் நுழைவதற்கும், அங்கிருந்த 532817 அடிக்கத் தொடங்கவும் சரியாக இருந்தது.

"இப்பொழுது சொல், ஹரிணி..."

"நிச்சயமாக உனக்குத் தெரியுமா அவன் இறந்து விட்டான் என்று?"

"..........."

"ம்ஹூம் ஹரிணி. கவனமாகக் கேள். நீ அங்கே போனதே தப்பு. உனக்கும் அந்த ராஸ்கலுக்கும் எல்லாம் முடிந்துவிட் ........"

"..........."

"........ டது என்று நினைத்திருந்தேன். கவனமாகக் கேள். நீ அவனை. அதைத் தொட்டாயா?"

"..........."

"ஸ்டுபிட் கேர்ல், அப்புறம் என்ன தொட்டாய்... ஆல்ரைட், முட்டாளே கேள். நான் சொல்வதைச் செய். கவனமாகச் செய். மேலே இனி ஒன்றையும் தொடாதே. தொடாதே. உன் ஹாண்ட் பாகை எடுத்துக்கொள்..."

"..........."

"இதோ பார், அழக்கூடாது. பயம் என்ன பயம்? எல்லாம் நான் கவனித்துக் கொள்கிறேன். இன்னும் இரண்டு செகண்டு களில் கெட் த ஹெல் அவுட் அஃப் தேர். நீ அங்கு போனதே தப்பு. கெடுத்து விட்டாய், சீக்கிரம் கிளம்பு. நீ வெளியில் வரும் போது ஒருவரும் உன்னை பார்க்கக் கூடாது. இறங்கும்போது லிஃப்டை உபயோகிக்காதே. நீ மாடிப் படிகள் வழியாக இறங்கு நேராக டாக்சி எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வா. நான் உன்னை அங்கு சந்திக்கிறேன். உடனே நானும் புறப்படுகிறேன்... ஹரிணி நீ ஒன்றும் செய்யவில்லை. எனக்குத் தெரியும், தெரியும் நேரத்தை வீணாக்காதே, கிளம்பு, கிளம்பு..."

டெலிபோனை வைத்த அவன் கைகள் சிகரெட்டுக் நடுங்கின. "ஸ்டுபிட் பம்," என்று சொல்லிவிட்டு வாயி சிகரெட் பொருத்தி அதைப் பற்ற வைத்துவிட்டு நாற்காலியி உட்கார்ந்து நேராகப் பார்த்தான்; யோசித்தான்; கை கடியாரத்தைப் பார்த்தான்.

தேவ், தான் ஒரு மணி, ஒன்றரை மணிக்கு முன்பு எங் இருந்தோம் என்று அவசரமாக ஞாபகப்படுத்திக் கொண்டான்.

*சுநந்தாவின் டயரியிலிருந்து...*

டியர் ஸார்! எனக்குத் தெரியாமல் நீங்கள் இப்பொழுது என் டயரியைப் படித்துக் கொண்டிருக்கிறீர்கள். தப்பு; பாபம். மூடி வைத்து விடுங்கள். இல்லை என்றால் 1000 வருஷம் நரகத்தில் தலைகீழாகத் தொங்குவீர்கள்.

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு ஜய் தரிசனம். நான் நாவல்டி புக்ஷாப் போய் ஈவ்ஸ் வீக்லி வாங்கிக்கொண்டு வரும்போது எதிரே தூரத்தில் ஜய் தெரிவதைப் பார்த்து ரோடை க்ராஸ் செய்து எதிர்ப்புறம் பார்க்காதது போல் நடந்தேன். இதைவிட... என்ன சொல்ல! எனக்குக் குற்றம் தெரிந்தது. தெரிகிறது. ஜய்க்கு எவ்வளவு ஆச்சரியம்! போன மாதம் எவ்வளவு பேசிக் கொண்டிருந்திருக்கிறேன். எவ்வளவு ஆனால் என்ன? எல்லாம் பேச்சுதானே!

... is a man of action

*பி.கு :* வத்ஸலா ஒரு முட்டாள்.

# ‘ஜவஹர்லால் நேரு’ — 3

இன்ஸ்பெக்டர் மாதவன் (பம்பாய் போலீஸ் க்ரைம் ப்ராஞ்ச், காம்தேவி டிவிஷன்) ஜீப்பில் வந்து இறங்கியபோது அந்தக் கட்டிடத்தின் வாயிலில் ஒன்பது பத்துப் பேர்கள் கூட்டமாக நின்று கொண்டிருந்தனர். ஜீப்பைக் கண்டதும் ஒருவன் குடித்துக்கொண்டிருந்த சிகரெட்டை மிதித்து அணைத்துவிட்டு அருகில் வந்தான்.

நீல உடையணிந்த போலீஸ்காரர்கள் குதித்து இறங்கினார்கள். சிலர் பெல்ட்டைச் சரிசெய்து கொண்டனர்.

"எங்கே?" என்றார் மாதவன்.

"ஐந்தாவது மாடி மூன்றாவது ஃப்ளாட்."

"வெளியே போகும் வாசல் இந்தக் கட்டிடத்திற்கு இது ஒன்றுதானா?"

"இல்லை. பின்பக்கம் ஒரு இரும்புப்படி இருக்கிறது."

"அதை இந்த கான்ஸ்டபிளுக்குக் காட்டுகிறீர்களா?" அந்த நீலங்களில் இருவரை அழைத்தார். "நீங்கள் இருவரும் இங் கேயே இருங்கள். ஒருவரையும் வெளியே போகவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்."

.......... எதற்காக அடைக்கிறேன். அவன் என்ன முட்டாளா? எப்பொழுதோ பறந்து போயிருப்பான்... அவனா, அவளா?

அலறிக்கொண்டு பறக்கும் படை வாகன் வந்து நின்றது. இறங்கிய இருவர் மாதவனிடம் வந்து சல்யூட் அடித்தார்கள். இப்பொழுதுதான் வருகிறார்கள் சோம்பேறிகள் என்று எண்ணிக் கொண்டார். அதற்குப் பதில்போல், "ஒபேரா ஹவுஸ் அருகில் ஒரு பெரிய அடிதடிக்குப் போயிருந்தோம். இப்பொழுதுதான் ரேடியோ செய்தி வந்தது," என்றார், ஒரு கான்ஸ். வாகனில் ரேடியோ அதன் பாட்டரி சக்தியில்...! ........; என்று கமறிக் கொண்டிருந்தது.

"வாருங்கள், போகலாம்."

லிஃப்டில் மௌனமாக இருந்தார் மாதவன்... மற்றொரு மரண தரிசனம்... இது என் வேலையில் எத்தனாவது..... ஞாபக மில்லை.

ஐந்தில் வெளிவந்தபோது "போன் பண்ணின ஆசாமி யார்?" என்று கேட்டார். அந்த ஐந்து பேரில் ஒருத்தன் தயக்கமாக முன்வந்தான்.



"நான் தான் சார்!"

"நீ யார்?"

"என் பெயர் ஷெரூர்... நான் இந்தக் கட்டிடத்துக்கு மானேஜர் மாதிரி. தாஸ் வந்து சொன்னதும்..."

"தாஸ் யார்?"

"நான்தான்," என்று இன்னொருவன் வந்தான்.

"முழுப்பெயர் என்ன?"

"மங்களதாஸ் ஜே...."

கான்ஸ்டபிளைப் பார்த்து, "எழுதாதே தயங்குகிறான்," என்றார்.

"நான் எதிரே இருக்கும் இரானி ஹோட்டலில் வேலை செய்பவன் சார். கிருஷ்ணன் ஸார் இரவு வெளியில் எங்கும் போகாதபோது என்மூலம் தான் டின்னர் தருவிப்பார்... இரவு சாப்பாடு கொண்டு வருவதா என்று கேட்கக் கதவு பெல்லை அழுத்தினேன். பதில் இல்லை. கதவு பூட்டி இருக்கிறதா என்று பார்க்கக் கதவைத் தொட்டேன். திறந்து கொண்டது. உள்ளே... உள்ளே..."

"உள்ளே எதையாவது தொட்டாயா?"

"இல்லை ஸார். உடனே ஓட்டமாக ஓடிவந்து ஷெரூர் ஸாரிடம் சொன்னேன்."

"சரி. உங்களை எல்லாம் மெல்ல விசாரிக்கிறேன். இங் கேயே இருங்கள். இந்த ஃப்ளாட் தானே?"

"ஆம்."

உடன் வந்த கான்ஸ்டபிள்களையும் தடுத்து நிறுத்தினார்.

"நீங்க ஒருத்தரும் வரவேண்டாம். வெளியிலேயே இருங்கள்."

உள்ளே நுழைந்தார்.

கீழே கிடந்தவனைப் பார்த்தார். சுற்றிலும் பார்த்தார். கலையாத சுத்தமான அறை. மறுபடி கீழே பார்த்தார். கழுத்தைப் பார்த்தார்... கழுத்தில் சிவப்பைப் பார்த்தார்... ரிகார்ட் ப்ளேயர் ஓடிக்கொண்டிருக்கிறது... மல்லாந்து கிடக்கிறான்... மேஜை மேல் ஒரு கோப்பை... அதில் சாராயம்... கண்கள் திறந்திருக்கின்றன. பர்மிட் இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். கால் செருப்பு ஒன்று கழன்று கீழே கிடக்கிறது. எதிரே பாத்ரூம். ஒரு கால் மடங்கி இருக்கிறது... ஒரு சிகரெட் துண்டம் (ஃபில்டர்) சுய முயற்சியில் அணைந்து கீழே கிடக்கிறது. விரல்கள் தாமரை போல் திறந்த கை, அந்தக் கண்களில் ஆ!

கைரேகைகள் தடவுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் எதையும் தொடாமல் இருப்பது நல்... ஹலோ! இது என்ன? ந மேஜையிலிருந்து கொஞ்ச தூரத்தில் லினோலியம் தரையி அழகாக இரண்டு பூட்ஸ் சுவடுகள் தெரிந்தன. அதன் பக்க போகாமல் ஒதுக்கமாக நடந்து வாயிலுக்கு வந்தார். கான்ஸ் பிளிடம் சாக்பீஸ் கேட்டார். 'டேப்' கேட்டார். தன் பூட்ஸ்களை அவிழ்த்து வெறும் 'ஸாக்ஸ்' காலில் நடந்து அந்தச் சுவடுகளை சுற்றிச் சாக்பீஸ் கோடு போட்டார். மற்ற இடங்களில் சுவ களைத் தேடினார். தான் நடந்த பாதையில் மெலிதாகப் பதி ருந்த தன் பூட்ஸ் சுவடுகளை எல்லாம் X X X என்று அடித்த வெளியே வந்தார். "பக்கத்து ஃப்ளாட்டில் டெலிபோ இருக்கிறதா?"

"ஏன், இங்கேயே இருக்கிறதே!"



"இதை நான் உபயோகப்படுத்த விரும்பவில்லை."

"சரி. வாருங்கள்," என்றான் ஷெரூர்.

டெலிபோனில் அந்த ஆறு எண்களைச் சுற்றி.

"நம்பியார் இருக்கிறாரா?"

"ஸ்பீக்கிங்."

"குட் ஈவினிங் ஸார். நான் இன்ஸ்பெக்டர் மாதவன். காம்தேவி க்ரைம் ப்ராஞ்ச். பெட்டர் ரோடில் ஒரு ஃப்ளாட்டி லிருந்து பேசுகிறேன்..."

"என்ன?"

"இங்கே வசிக்கிறவர் ஒருத்தர் இறந்திருக்கிறார்; ஸ்ட்ராங்கு லேஷன் என்று நினைக்கிறேன். அசாதாரணமாக இறந்திருக் கிறார். இன்க்வெஸ்ட் நடத்த வேண்டும்."

"இப்பொழுதா?"

"இப்பொழுதே முடித்துவிட்டால் நல்லது. போஸ்ட் மார்ட்டத்திற்கு எப்படியும் அனுப்ப வேண்டியிருக்கும். எனக்கும் நிறைய வேலை இருக்கிறது..."

"ஒன்று செய்யுங்கள். ஆம்புலன்ஸுக்கு டெலிபோன் செய்து விடுங்கள். அப்புறம் மூன்று நான்கு கண்ணியமான ஆசாமிகளைப் பார்த்து வையுங்கள். பதினைந்து நிமிஷத்தில் வருகிறேன்... ஓகே?"

"ஓ.கே. ஸார்."

"எந்த இடம்?"

"நம்பர் 503, திவோலி கார்டன்ஸ், பெட்டர் ரோடு."

"சரி, வருகிறேன்."

டெலிபோனை வைத்துவிட்டு மறுபடி எடுத்து மறுபடி ஆம்புலன்ஸுக்குச் சுழற்றிச் சொல்லிவிட்டு வெளியே வந்து மறுபடி 503'ல் நுழைந்தார்.

காத்திருக்கலாமா... கேள்விகளைத் துவங்கலாமா? இன்க் வெஸ்டுக்கு ஆள் சேர்க்க வேண்டும். இந்தக் கட்டிடத்திலி ருந்தே நான்கு ஆட்களைக் கூப்பிடலாம்...

மாதவன் திறந்த ஜன்னல் வழியாக வெளியே பார்த்தார். கண்ணாடிக் கதவின் பாதித் திறப்பில் அவர் உருவம் தெரிந்தது. தூரத்தில் ஒரு நியான் கண் சிமிட்டிக் கொண்டிருந்தது.

மற்றொரு கொலை. மற்றொரு கொலை... இதைச் செய்தவன் எங்கிருக்கிறான்? பம்பாயிலா? அவன் இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறான். இப்போது இந்தத் தருணத்தில்.. சிகரெட் பற்ற வைத்துக் கொண்டிருக்கிறானா? சிரித்துக் கொண்டி ருக்கிறானா? எங்கே அந்த எக்ஸ்? கொசு வலைக்குள் தூங்கிக் கொண்டிருக்கிறானா? விரல்கள், கைகள், உடம்பு நடுங்க அரை விழிப்பில் கோரக் கனவுகள் கண்டு கொண்டிருக்கிறானா? அவனா? அவளா?

வெளியே இருக்கும் அந்த லட்சங்களில் ஒருத்தனைத் துருவித் தேர்ந்தெடுக்க வேண்டும். அவனை மடக்கி, சுவரில் முதுகு பதிய வைத்து நீதான், நீதான் என்று சுட்டு விரலால் காட்டிக் கைது செய்து, சாட்சிகளைச் செய்து சொல்லி, சிறைக் கனுப்பி, தீர்ப்பளித்துத் தொங்கவிட வேண்டும். அல்லது நா பத்து ஐந்தாயிரம் நாட்கள் அவனை அடைத்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்களுக்கு நிம்மதி.

மாதவன் அறைக்கு வெளியே வந்தார்.

கூடிப் பேசிக் கொண்டிருந்தவர்கள் பேச்சை நிறுத்தி கொண்டார்கள். அவர்களிடம் பொதுவாகக் கேட்டார்: "உ



களில் யாராவது அன்னிய ஆட்கள் வெளியில் போவதையோ வருவதையோ பார்த்தீர்களா?"

அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். 'ஆடுகள்' என்று நினைத்துக் கொண்டார் - ஒருத்தன் மட்டும் தயக்கத்துடன், "நான் ஒரு பெண்ணைப் பார்த்தேன்." என்றான்.

"பேர் என்ன?"

"அவள் பெயர் தெரியாது."

"உன் பேர்?"

"என் பேர் மதுசூதனன்."

"எப்பொழுது பார்த்தாய்?"

"சுமார் எட்டரை மணி இருக்கும்."

"ம்."

"மாடிப்படி வழியாக இறங்கி வேகமாக ஓடினாள்."

"வயசு? உயரம்? வர்ணி."

"இளம் பெண், அழகான பெண், வெட்டிவிடப்பட்ட தலை... ம்..."

"எங்கிருந்தாய் அப்போது?"

"கீழே லிப்ட்டுக்குக் காத்திருந்தேன்."

"மிஸ்டர் ஷெரூர், இந்த லிஃப்ட்டுக்கு அட்டெண்டண்ட் கிடையாதா?"

"மாலை ஆறரை மணி வரைதான் இருப்பான். அப்புறம் செல்ஃப் ஸர்வீஸ்."

"இந்த ஆசாமி கிருஷ்ணனுடன் கூட யாரும் இல்லையா?"

"இல்லை சார். பிரம்மசாரி. ஒண்டியாள்."

"உறவுக்காரர்கள்?"

"கூட இருப்பவர்கள் ஒருவரும் இல்லை... நிறைய சினேகி தர்கள்."

"ஹியர் வி ஆர்," என்று சொல்லிக் கொண்டே வந்தார் 'கரானர்' நம்பியார். மாதவனைப் பார்த்து. "நாம் சந்தித்திருக் கிறோம்," என்றார்.

"ஆம், ஒரு தற்கொலைக் கேஸில்."

"இப்பொழுது என்ன கொலையா?"

"என்று நினைக்கிறேன்..." உள்ளே நுழைந்து கீழே கிடந்த வனைக் காட்டினார் மாதவன்.

நம்பியார் விஸில் அடித்துவிட்டு, "ஹி லுக்ஸ் ப்யூட்டி ஃபுல்," என்றார். "பவுடர் அடிக்கத் தயார் செய்தீர்களா?"

"செய்யப் போகிறேன்."

நம்பியார் கீழே கிடந்தவன் அருகில் ஒரு கால் மண்டியிட்டு மின்னும் கண்களின் இரப்பையைப் பிரித்து டார்ச் அடித்துப் பார்த்தார். பாப்பா! ஆடாத அசையாத பாப்பா. மணிக்கட்டை தொட்டுப் பார்த்தார். சில். மார்பில் காதை வைத்துப்பார்த்தார்.

"................"

"ஹி இஸ் டெட்," என்றார்.

"இதைவிட உண்மையான வார்த்தை இருக்க முடியாது."

"ஆம்புலன்ஸுக்குச் சொல்லி விட்டீர்களா?"

"ம்..."

"ஆள் சேர்த்து விட்டீர்களா? இன்க்வெஸ்டைத் துவங்க லாமா?"



"இதோ," என்று சொல்லிவிட்டு வெளியே வந்தார் மாதவன்.

"கொஞ்சம் இருங்கள். இந்தச் சாக்பீஸ் வட்டங்கள்?"

மாதவன். "இந்த பூட்ஸ் சுவடுகள் தெளிவாக இருக் கின்றன." நம்பியார் அதை நிதானமாகப் பார்த்தார். "இந்த மாதிரிச் சுவடுகள் வேறு இடத்திலும் இருக்கின்றனவா?"

"என் கண்ணுக்குத் தெரியவில்லை."

"பவுடர் அடித்தால் தென்படும்.. ம்ஹும்... சைஸ் ஒன்பதிற் கும் மேலே இருக்கும். பெரிய கால்கள்... ஈரமான மண்ணில் நடந்து வந்திருக்கிறான்... உங்கள் நண்பன் நல்ல உயரமான ஆசாமி என்று சொல்லலாம்."

"அறையை முதலில் பார்க்கலாமா?"

"ஓ. எஸ்."

வரிசையாக ஷெல்பில் அடுக்கியிருந்த புத்தகங்களை முதலில் பார்த்தனர். "தி செக்ஷுவல் பிஹேவியர் ஆஃப் தி அமெரிக்கன் மேல்' ஹெரால்ட் ராபின்ஸ் நாவல்கள்...... "செக்ஸ் வைத்தியம் போலிருக்கிறது." ... ஹிந்தி சுய போதினி... "ஊருக் குப் புதிதாக இருக்கலாம்," என்றார் மாதவன். இது என்ன புத்தகம்? கன்னடமா? மலையாளமா?

படுக்கை. அகலமான படுக்கை. சுத்தமான தலையணை உறை. ரெப்ரிஜிரேட்டர், ரேடியோ கிராம் - "பணக்காரன்." "பர்ஸ் பையில் இருக்கிறதா பார்க்கவேண்டும், செக் புஸ்தகத்தைப் பார்க்க வேண்டும்."

சுவரில் ஒரு படம்.

மேஜை... போட்டோ ஆல்பம் ஏதாவது?

ராத்திரி முழுக்க இருக்கிறதே இந்த அறையைத் தலை கீழாய்க் கவிழ்க்க? மறுபடி புத்தக அலமாரிக்குச் சென்றனர் அதன் கீழ் தட்டில் நோட் புத்தகங்கள். கடிதம் எழுத மெல்லிய நீலக் காகிதம், ஒரு பேனா, பென்சில் செட். நம்பியார் அந்த நோட் புத்தகங்களைப் புரட்டினார்.

6 கைக்குட்டை,

5 பனியன்...

"சலவைக் கணக்கு."

"இது என்ன போட்டோ?"

ஓர் இளம் பெண். காமிராப் புன்னகை செய்து பழக்கப் பட்ட அழகான முகம். படத்தின் கீழ், "ஒரே ஒரு கிருஷ்ணனுக்கு நிறைய நிறைய அன்புடன் - ஹரிணி," என்று எழுதி இருந்தது

ஒரு சீட்டுக் கட்டு இருந்தது. அதன் உறையை வழுக்கி திறந்தார். பார்த்தார்.

பிரான்ஸ் தேசத்து ஆடவர்களும் யுவதிகளும் கொண்ட 5 சளைக்காத போட்டோக்கள். சிரித்தார்கள் ஒருவரை ஒருவ பார்த்துக்கொண்டு.

"அவன் ஒரு பர்ஸ்ட் டைமர்," என்றார் நம்பியார்.

"யார்?"

"இந்தக் கொலையைச் செய்தவன். அறையைப் பாருங்க சுலபமான சகஜமான சூழ்நிலை. மேஜைமேல் விஸ்கி. ரிக்கார் கள். சொந்த சாமான்கள் கலையவே இல்லை. என்ன தெரிகிற இது தற்செயலான கொலை இல்லை. முன்னால் திட்டமிட் செய்யப்பட்ட கொலை. தகுந்த வலுவான காரணம் இருக் ஒருத்தன் செய்த ஒரே ஒரு கொலை..."



"நான் இன்னும் சிந்திக்க ஆரம்பிக்கவில்லை..... மேலும் சில..." டெலிபோன் மணி அடித்தது. அதே அந்த அறையி லிருந்த டெலிபோன் மணி அடித்தது. மாதவன் நம்பியாரைப் பார்த்தார். நம்பியார் மாதவனைப்...

மாதவன் டெலிபோனை அணுகிக் கொஞ்சம் அடிக்க வைத்து எடுத்தார்.

"ஹலோ!"

"கிருஷ்ணன் இருக்கிறாரா?"

"நீங்கள் யார் பேசுவது?"

"ஒரு நண்பன். நீங்கள் யார்?"

"போலீஸ். உங்கள் பெயர் என்ன?"

"ஜவஹர்லால் நேரு."

க்ரக் விர்ர்ர்ர்...

"ஹலோ! ஹலோ..."

*சுநந்தாவின் டயரியிலிருந்து...*

வெள்ளிக்கிழமை. ரேடியோவில் டேட் வித் யூ தினம் 'பீடில்ஸ்'ன் ஹார்ட்டேஸ் நைட்' என்ன அருமையான பாடல். கடைசியில் இலைகள் உதிர்வதுபோல வாத் சங்கீதம். மாலா (என் காலேஜ்) அவளுக்கு எப்படி கோதுமையினாலாம்! பொய்யே கிடையாதாம்! தேவை யில்லையாம். அப்புறம் மாலா சொன்ன சில விஷயங்கள் எப்படி வெட்கப்படாமல் இப்படிப் பேசுகிறாள் கெமிஸ்ட்ரி 'லாப்'பில் அவள் அடித்த 'ஜோக்.' சேச்சே!

## சுவரோடு சுவராக 4

"ஜவஹர்லால் நேரு," என்று சொல்லிவிட்டு டெ போனை வைத்தான் கணேஷ். (வயது 28)

அவன் எதிரே இருந்த ஹரிணியும் அவள் அண்ண தேவும் அந்த ஹாஸ்யத்தை ரசிக்கவில்லை. அவனை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கணேஷ் (கலைந்த தலை, ஹரிணியைப் பார்த்து இமையை மட்டும் அழகாக மூடித் திறந்து) "போலீஸ்கார வந்து விட்டார்கள்." என்றான்.

"ஸோ..." - இது ஹரிணியின்...?

"என்ன... அந்த அறையைத் தலைகீழாகக் கவிழ்ப்பார் கவிழ்த்தால் என்ன அகப்படும்? உங்கள் போட்டோ. அப்பு



நீங்கள் எழுதிய கடிதங்கள். அப்புறம் உங்கள் அண்ணன் எழுதிய பயமுறுத்தல் கடிதம். எல்லாம் அகப்படும். அப்புறம் என்ன? போலீஸ்காரர்கள் உங்களைப் பார்க்க வருவார்கள்..." அறை வாசற்கதவைத் தட்டும் சப்தம் கேட்டது... "கொஞ்சம் இருங்கள். போலீஸா என்று பார்க்கிறேன்," என்று எழுந்தான் கணேஷ் (மகா உயரம்).

ஹரிணி தன் அண்ணன் அருகில் நாற்காலியை நகர்த்திக் கொண்டாள்.

"தேவ், நாம் என்ன செய்வது?" என்றாள்.

"ஸிட்டைட்," என்றான் தேவ்.

கதவு திறந்தது. காப்பி வந்தது.

"உங்கள் இரண்டு பேருக்கும் முதல் தேவை மூளை. இரண்டாவது தேவை காஃபி," என்ற கணேஷ் (ஒன்றே கால் மூக்கு) அவசரப்படாமல் சாமர்த்தியமாகக் காஃபி கோப்பைகளை அமைத்து, கறுப்பு வெளுப்புகளை உத்தேசமாகக் கலந்து, "சொல்லுங்கள் ஹரிணி, உங்களுக்கும் கிருஷ்ணனுக்கும் எவ்வளவு நாட்களாகப் பழக்கம்?" என்றான்.

"இரண்டு வருஷங்களாக."

"எப்படிப்பட்ட பழக்கம்?"

ஹரிணி தன் நகங்களைப் பார்த்துக்கொண்டு "நெருக்கமான பழக்கம்" என்றாள்.

"எவ்வளவு நெருக்கம்? ஒரு அடி? ஒரு இன்ச்? இல்லை,, சைபரா?"

"மூன்றாவது."

"நான் அப்பட்டமான கட்சிக்காரர்களை விரும்புகிறேன்," என்றான் கணேஷ் (ஒரு வக்கீல்). "சரி, நீங்கள் அங்கே சென்ற போது கிருஷ்ணன் இறந்திருந்தது என்னவோ சத்தியம்?"

"சத்தியம்! சத்தியம்!"

"அவனை அந்த நிலையில் பார்த்ததும், ஏன் உடனே போலீஸுக்குத் தெரிவிக்கவில்லை நீங்கள்?"

"எனக்கு அந்த உடலை அவ்வளவு கிட்டத்தில் பார்த்ததும் உடனே ஓட வேண்டும் என்று தோன்றியது."

"ஓடினீர்களா?"

"அண்ணன் தேவைக் கேட்டுவிட்டு ஓடலாம் என்று நினைத்தேன்."

சிரித்து, "தேவ் என்ன சொன்னார்?"

"உடனே ஓடும்படி!"

"ஸ்டுபிட், முட்டாள்தனமான காரியம். உடனே நீங்கள் போலீசுக்கு போன் செய்திருக்க வேண்டும். அங்கே போய் இறந்தவனைப் பார்த்துவிட்டு எதுவும் செய்யாமல் இப்படி ஓடி வந்திருக்கிறீர்கள். ஒரு சாதாரண கெடிகார மூளை கூடச் சந்தேகப்படும்."

"நான் அங்கே அந்த அறைக்குச் சென்றது ஒருவருக்கும் தெரியாதே?"

"இது ஒரு காரணமா?"

"இல்லை. என் மேல் முதலில் எப்படிச் சந்தேகம் வரும்?"

"போலீஸ்காரர்களை நீங்கள் தப்புக் கணக்குப் போடு கிறீர்கள். நாளைக்குக் கோர்ட்டில்..."

"கோர்ட்டா?"



"மிஸ்டர் ஜே. தேவ்தத்தன். நீங்கள் இந்த ராத்திரியில் என்னைத் தேடி வந்திருப்பது என்னுடன் காஃபி சாப்பிடுவதற்கு அல்ல என்று நினைக்கிறேன். எனக்கென்னவோ இது அவ்வளவு ஸிம்பிளான கேஸ் இல்லை என்று படுகிறது. ஒரு அண்ணன்; ஒரு தங்கை; தங்கைக்கும் ஒரு ஆளுக்கும் சிநேகிதம்; அந்த ஆள் கொலையுண்டிருக்கிறான். அண்ணனும் தங்கையும் அவசர அவசரமாக ஒரு வக்கீலைத் தேடி வருகிறார்கள். இதற்கு என்ன அர்த்தம்?"

"கணேஷ், நீ வரிகளுக்கு நடுவில் படிக்கிறாய்..." தேவ் ஒரு சிகரெட்டைக் குழப்பமாகப் பற்றவைத்து ஒரு தடவை இழுத்துவிட்டு மேலும் சொன்னான்: "நான் உன்னிடம் வந்தது இந்த மாதிரி பயமுறுத்தல்களைக் கேட்டுக் கொண்டிருப்பதற்கல்ல. நடந்தது நடந்து விட்டது. இந்தச் சூழ்நிலையில் நாங்கள் என்ன செய்ய வேண்டும்? இதைப் பற்றி யோசனை கேட்கத்தான் வந்தேன். இல்லை என்றால் வேறு ஆளை..."

"நில்! பதட்டப்படாதே, இந்தப் பதட்டம் உன்னை நிச்சயம் கோர்ட்டுக்கு அழைத்துச் சென்றுவிடும். நீ என் நண்பன். உனக்கு உதவி செய்யாமல் இருப்பேனா? முதலில் என் மனதில் தெளிவு ஏற்படவேண்டும். தேவ், நேராக என்னைப் பார்த்து, என் கண்ணைப் பார்த்துச் சொல்! நீ கிருஷ்ணனைக் கொன்றாயா?"

"இல்லை," என்றான் தேவ், நேராகப் பார்க்காமல்.

"நேராகப் பார்த்துச் சொல்."

"ஸில்லி," என்றான்.

"போலீஸ் இங்கு வருவார்களா?" என்று கேட்டாள் ஹரிணி.

"இங்கேயா? என் அறைக்கா? ம்ஹூம். ஆனால் உங்கள் வீட்டுக்கு நாளைக்குச் சீக்கிரம் வரப்போவது என்னவோ நிச்சயம்."

"எதற்கு வருவார்கள்?"

"சாக்லேட் சாப்பிடுவதற்கு," என்றான் கணேஷ்.

அவர்கள் சிரிக்கவில்லை.

"அது ஒரு நல்ல 'ஜோக்' என்று நினைத்தேன்... உங்கள் குழந்தைத்தனத்தைப் பார்த்தால் உங்களை நம்பலாம் என்று தோன்றுகிறது."

"கணேஷ்! அப்படியென்றால் எங்கள் மேல் நீ சந்தேகப் படுகிறாயா?"

"எனக்கே தெரியவில்லையே...! சரி, ஹரிணி, நீங்கள் கிருஷ்ணனுடன் அந்தரங்கமாகப் பழகி இருக்கிறீர்கள் இல்லையா?"

"ஆம்."

"அவன் அந்தக் கடிதங்களை எல்லாம் எங்கே வைத்திருக் கிறான் தெரியுமா?"

"ம்... ஒரு செகண்ட் இருங்கள், யோசிக்கிறேன்."

"ஒரு செகண்ட் ஆகிவிட்டது."

"அந்த அறையில் ஒரு மாடர்ன் ஆர்ட் சித்திரம் இருக் கிறது. அதன் பின் மறைவில் ஒரு அலமாரி இருக்கிறது சுவரோடு சுவராக. அந்த அலமாரிக்குள் தான் பணம், கடிதங்கள் எல்லாம் வைத்திருப்பான்."

"படத்துக்குப் பின்னால் அலமாரி?"

"ஆம்."

"பூட்டின அலமாரி?"

"ஆம்!"



"சுவரோடு சுவராக?"

"சுவரோடு சுவராக!"

"சாதாரணமாகப் படம் அதை மறைத்திருக்கும்?"

"ஆம்."

"சபாஷ்! கொஞ்சம் நம்பிக்கை இருக்கிறது. அது ஓர் அசாதாரணமான இடம். அதைப் போலீஸ்காரர்கள் கண்டு பிடிக்க நேரம் ஆகும். இப்பொழுது என்ன மணி? பதினொன்று. இன்க்வெஸ்ட் நாளைதான் நடக்கும் என்று நினைக்கிறேன்... எதற்கும் இரண்டு மணிநேரம் கழித்து நான் அங்கே போகிறேன்."

"எங்கே?"

"கிருஷ்ணன் இறந்த அந்த ஃப்ளாட்டுக்கு."

"கணேஷ், இது என்ன ஸ்டண்ட்?"

"கவலைப்படாதே. நான் சாதாரண வக்கீல் அல்ல. கட்சிக் காரர்களுக்கு முழுவதும் திருப்தி அளிக்கிறவன். விசேஷமாக, பெண்களுக்கு. இன்னும் விசேஷமாக, அழகான பெண் களுக்கு," என்று ஹரிணியைப் பார்த்து இமைத்தான்.

"எதற்காக நீ அங்கே போக வேண்டும்?" என்றான் தேவ்.

"அந்தக் கடிதங்கள் போலீஸ் கையில் சிக்குவதற்குள் எனக்குக் கிடைத்து விட்டால் கேஸ் இன்றோடு தீர்ந்து விடுமே!"

"புரியவில்லை."

"நாளைக்குக் காலையில் புரியும். ஹரிணி! உங்களிடம் கிருஷ்ணனின் ஃப்ளாட்டுக்குச் சாவி இருக்குமே?"

ஹரிணி வெட்கத்துடன், "இருக்கிறது" என்றாள்.

"இப்பொழுது உங்கள் ஹாண்ட் பாகில் இருக்கிறதா?"

"ம்..." என்று எடுத்துக் கொடுத்தாள்.

தேவ், "கணேஷ்! நீ செய்யப் போவது நான் நினைக்கிறப என்றால், நீ நிச்சயம் மாட்டிக் கொள்வாய்" என்றான்.

"நான் யார் தெரியுமா? கணேஷ்! சாய்பாபா! வழுக்கு விலாங்கு. லேசில் அகப்பட மாட்டேன். அகப்பட்டால், சட்ட புத்தகங்களை அவர் முகத்தில் எறிவேன். அது கிடக்கட்டு தேவ், நீ கிருஷ்ணனை எப்பொழுது கடைசியாகப் பார்த்தாய்

"இன்று மாலை."

"போச்சு! எங்கே? எத்தனை மணிக்கு?"

"சுமார் ஐந்து மணிக்கு அவன் வீட்டில்தான்."

"மறுபடியும் போச்சு, நீ பார்த்த போது என்ன நடந்தது?"

"ஒன்றுமில்லை. எனக்கு அவன்மேல் வெறுப்பு. ஹரி யும் அவனும்... உனக்குத் தெரியுமே... சற்று மிரட்டலா கேட்டேன். அவளுடன் இவ்வளவு நெருக்கமாகப் பழகிவி இப்பொழுது வேறொருத்தியுடன் கல்யாணம் என்று பத்திரி அனுப்புகிறாயே, இதற்கு ஒரு வழி சொல்" என்று கேட்டே

"அதற்கு?"

"அதற்குப் பதிலாக செக் கிழித்தான். எனக்கு மகா கோ வந்தது. சட்டையைக் கிழித்துவிட்டு, தாடையில் தட்டிவி 'பிறகு கவனிக்கிறேன்' என்று சொல்லிவிட்டு வந்தேன்."

"பலமாக அடித்தாயா?"

"இல்லை, லேசான தட்டு."

"............" என்று பெருமூச்சு விட்டான் கணேஷ்.

"ஏன்?"



"உன் விரல் அடையாளங்கள். உன் மிரட்டல் கடிதம். நீ அங்கே போயிருக்கிறாய். உன் தங்கை அங்கே சென்று ஓடி வந்திருக்கிறாள். ரொம்பக் குழப்பம். சரி, அப்புறம் என்ன என்ன செய்தாய்? இது முக்கியம்..."

"அப்புறம் பஸ் பிடித்தேன். ரெஸ்டாரண்ட் சென்று பேண்டில் பியானோ வாசித்தேன். ஹரிணியின் டெலிபோன் வந்ததும், புறப்பட்டேன். வீடு சென்றேன். இங்கு வந்தோம்."

"ரெஸ்டாரண்டில்தான் பெரும்பாலும் இருந்தாய் ஒன்பது மணி வரைக்கும்?"

"ம்.. ஜஸ்ட் எ மினிட். நீ என்ன நினைத்துக் கொண்டிருக் கிறாய்? நான் தான் கிருஷ்ணனைக் கொன்றேன் என்றா?"

"அப்படித்தான் போலீஸ் நினைக்கப் போகிறார்கள். அதற்கு நாம் தயாராக வேண்டும்."

"அப்படி நினைத்தால் போலீஸ்காரர்கள் முட்டாள்கள்."

"எப்பொழுதுமே அப்படி இல்லை."

"கணேஷ், நீ உன் அம்மாவுக்குப் பிள்ளை என்பது எவ் வளவு சத்தியமோ அவ்வளவு சத்தியம் நான் அந்த ராஸ்கலைக் கொல்லவில்லை என்பது."

"நான் என் அம்மாவுக்குப் பிள்ளை என்பது எனக்குப் பிறர் சொல்லித்தானே தெரியும்!... உன் 'அலிபை' பற்றி அப்புறம் கவனிக்கலாம். இப்பொழுது திருவாளர் கணேஷ் திக் விஜயம் புறப்படப் போகிறார்."

"எங்கே?" என்றாள் ஹரிணி.

"ஃப்ளாட் நம்பர் 503 திவோலி கார்டன்ஸுக்கு. அந்த அலமாரியில் உள்ள கடிதங்களுக்கு."

"அங்கே ஒருத்தரும் இருக்கமாட்டார்களா தற்போது?"

"பார்க்கலாம்."

"அந்தப் பூட்டின் அலமாரியை எப்படித் திறப்பதாக உத்தேசம்?"

"நான் லா காலேஜில் படிக்கிறபோது, ஹாஸ்டலில் என் ஹாபி விதவிதமான பூட்டுகளைத் திறப்பது. சில பூட்டுகளுக்கு ஒரு சிறு கயிறு போதும். மொத்தம் இந்த ஐந்து வகை சாவிகள் இருந்தால் முக்கால்வாசிப் பூட்டுகளைத் திறந்துவிடலாம். 'ஹௌதினி'க்கு அடுத்தபடி நான். இதுபற்றி ரிடையர் ஆனதும் ஒரு புத்தகம் எழுதப்போகிறேன்."

"இதனால் உங்களுக்கு ஆபத்து ஏதும்..."

"ஆபத்து என் மறுபெயர். மேலும் அழகான பெண்களுக்கு உயிரையே கொடுத்தவர்கள் எவ்வளவு பேர்! ஹெலன் அஃப் ட்ராய் எட்ஸெட்ரா. பயப்படாதீர்கள். வீட்டுக்குப் போங்கள். நாளைக்கு உங்களைப் பார்க்கிறேன்."

"கணேஷ், நீ பெரிய ஆள்."

"இதற்கெல்லாம் உன்னிடம் பணம் வாங்கும்போது அப்படி நினைக்கமாட்டாய். குட் நைட்."

கணேஷ் 'திவோலி கார்டன்ஸி'லிருந்து ஒரு பர்லாங் தூரத்தில் இறங்கிக் கொண்டான். மெதுவாகக் கட்டிடங்களின் நிழலிலேயே நடந்தான். அவன் நடையில் ஒரு பூனையின் திறமை தெரிந்தது. அப்பொழுது மணி இரண்டிருக்கும். கட்டிடத்தின் வெளியே ஒரே ஒரு ஜீப் நின்று கொண்டிருந்தது. கட்டிடத்தின் கான்கிரீட் சதுரத்தின் நீட்டலின் கீழ் முக்காலியில் ஒரு போலீஸ்காரர் உட்கார்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார். கணேஷ் யோசித்தான். மெதுவாக நெருங்கி, கட்டிடங்களின் இடையில்



உள்ள இடைவெளியில் நழுவி, 'திவோலி கார்டன்' ஸின் பின்புறம் சென்றான். மேலே நோக்கினான். மெல்லிய இருட்டில் குறுக்கே குறுக்கே துணி உலர்த்தும் கம்பிகள். அவைகளில் மிச்சமிருந்த துணிகள் கடற்காற்றில் அசைந்த மாடர்ன் ஆர்ட்.

சுத்தம் செய்வோருக்காக ஏற்பட்ட படிகள் வழியே ஐந்தாவது மாடியைக் கணக்கிட்டுக் கொண்டு ஏறினான். உள்ளே நுழைய இருந்த மரக்கதவு தாளிட்டிருந்தது - உள் பக்கம். ஆறாவது மாடிக்கு ஏறினான். அதுவும் தாளிட்டிருந்தது. ஏழாவது, எட்டாவது, ஒன்பதாவது யாவும் தாளிட்டிருந்தன. செங்குத்தாக மேலே ஏறி விட்டான், மொட்டை மாடிக்கு. தண்ணீர் 'டாங்க்'குகள் கனசதுரப் பிசாசுகளாகத் தெரிந்தன.

மொட்டை மாடியில் உள்ளிருந்து வரும் கதவும் இருந்தாக வேண்டும். லிஃப்டுக்கு அருகில் செல்லும் படிகள் இங்குவரை முடிந்தாக வேண்டும். எங்கே?

கண்டுபிடித்து, தாள்களை விலக்கி, படிகளில் மெதுவாக இறங்கினான்.

இது எத்தனாவது மாடி? பத்து, அப்புறம் ஒன்பது, அப்புறம் எட்டு, அப்புறம் ஏழு, அப்புறம் ஆறு, அப்புறம் ஐந்தரை.

அந்தப் படிகளின் அறைச் சரிவில் நின்று மெதுவாக எட்டிப் பார்த்தான். நீளமான காரிடர். இடது பக்கத்தில் மூன்றாவது ப்ளாட் அருகில் ஒரு கான்ஸ்டபிள் உட்கார்ந்திருந்தார். அவர் முதுகு தெரிந்தது.

கான்ஸ்டபிள் மனிதன்தான். மனிதனுக்கு உண்டான தேவைகள் என்ன? அவன் ஒரே இடத்தில் உட்கார்ந்திருக்க முடியாது. எப்பொழுதாவது. அந்த எண்ணிக்கைக்காக எழுந்து போகத் தான் வேண்டும். இரு.

காத்திருந்தான்.

சரியாக இருபத்தைந்து நிமிடம் கழித்து கான்ஸ்டபிள் எழுந்தார். கைகளை ஆங்கில 'V'போல் விரித்தார். கொட்டாவி விட்டார். இப்படிப் பார்த்தார். அப்படிப் பார்த்தார். பூட்ஸ் ஒலிக்க எழுந்து நடந்து சென்றார். ஓரத்தில், கோடியில் இருந்த மூலையில் மறைந்தார்.

ஒரு செகண்ட் - கணேஷ் - இரண்டு செகண்ட் - சரேல் என்று - மூன்று செகண்டு - இறங்கி - நான்கு செகண்ட் பையிலிருந்த சாவியை எடுத்து - ஐந்து செகண்ட் - அந்த கதவை நெருங்கி ஆறு செகண்ட் சாவித் துவாரத்தில் சாவியை பொருத்தி - எட்டு செகண்ட் - திறந்து - ஒன்பது செகண்ட் சாவியை எடுத்துக்கொண்டு உள்ளே நுழைந்து - பத்து செகண் - கதவை மூடிக் கொண்டான்.

உள்ளே நுழைந்ததும் கவனித்தான். சலனமில்லை.

'பாத்ரூம்' விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அதன் கதவின் பாதித் திறப்பில் வெளிச்சம் சன்னமாக அறையில் இருந்தது. அந்த வெளிச்சத்தின் கீழே சாக்பீஸ் கோடுகள் தெரிந்தன. அறை கன்னா பின்னாவென்று கலைந்திருந்த காகிதங்கள் காகிதங்கள்: ஹரிணி குறிப்பிட்ட மாடர்ன் ஆர் சித்திரத்தை அறையின் சுவர்களில் தேடினான். அவனுக்கு வல புறம் சுவரில் இருந்தது. அதை அணுகிப் படத்தை விலக்கினான் சுவரோடு சுவராக ஒரு சாவித் துவாரம் தெரிந்தது.

அவனிடமிருந்து ஐந்து சாவிகளில் இரண்டு சாவிக பொருந்தின. ஆனால் திறக்கவில்லை.

அதிகம் அழுத்தக் கூடாது. முன்னும் பின்னும் அசைத் லீவர்களை உணரவேண்டும்.



முடியவில்லை.

சட்! எனக்குப் பழக்கம் குறைந்துவிட்டது! பயமும் காரணம். மெதுவாக, மெதுவாகத் தளர்ந்தது.

முடியவில்லை!

இனி பலப் பிரயோகம்தான்! சாதாரணமான 'பாட்லாக்' பூட்டு இந்தப் பாடு படுத்துகிறது. சாவியை அழுத்தினான்.

'கிளிக் டக்'

திறந்து கொண்டது.

பூட்டல்ல... அறை வாயிற்கதவு.

'க்' என்றது ஸ்விட்ச்.

அறை முழுவதும் ஒளி வெள்ளம் பரவியது.

*சுநந்தாவின் டயரியிலிருந்து...*

ராம்லீலா சென்றிருந்தோம். என்னைப் பொறுத்த வரை கிருஷ்ணலீலா. அந்தக் கூட்டத்தின் நெருக்கத்தில் வேண்டு மென்றே என்மேல் பட்டதும், அழுந்தியதும், நானும் அதை கவனிக்காதவள் போல் சும்மா இருந்ததும்... எங்கே போகிறேன்...?

# முன்னூற்றிரண்டு

5

ஸ்விட்சைத் தட்டியவர், இன்ஸ்பெக்டர் மாதவ வெளிச்சம் பரவியது.

உடனே கணேஷ் சுதாரித்துக்கொண்டு கையைப் பா பைக்குள் செலுத்திக்கொண்டு எக்ஸிபிஷனில் பராக் பார்க்கிறவனைப் போல் நிற்க, அதே சமயம் மாதவன் அ எதிர்பாராத காட்சி தருகின்ற பயமும் போலீஸ் பயிற்சி தைரியமும் கலந்து, "நகராதே!" என்றார்.

"நகரவில்லை" என்றான் கணேஷ். உடன், "கிருஷ் இருக்கிறாரா?"

"ஹலோ! ஒரு விருந்தாளி! ஏய்!" என்று கான்ஸ்டபி கூப்பிட்டார் மாதவன். "யார் நீ? எப்படி இந்த அறை நுழைந்தாய்?"

"நான் கணேஷ். கிருஷ்ணனின் நண்பன். கிருஷ்ண பார்க்க வந்தேன். என்ன இது! அறை இப்படிக் கலை கிறதே? போலீஸ் எல்லாம்? கிருஷ்... எங்கே?"



"கிருஷ்ணன் இறந்துவிட்டான்."

"ஓ மை காட்!" என்றான் கணேஷ், தன்நெஞ்சைப் பிடித்துக் கொண்டு.

"நீ ஒரு மோசமான நடிகன்," என்றார் மாதவன்.

"எனக்குப் புரியவில்லை."

கான்ஸ்டபிளைப் பார்த்து, "தூங்குமூஞ்சி! இந்த ஆள் எப்படி உள்ளே நுழைந்தான்?" என்று கேட்டார் மாதவன்.

கான்ஸ்டபிள், கணேஷைப் பார்த்தார். கணேஷ் அவரைப் பார்த்து, "காய் சங்கேத்லா," என்றான். கான்ஸ்டபிள் முதலில் ஆச்சரியப்பட்டார். மராத்தியில் கணேஷின் ஜனனத்தைப் பற்றிச் சந்தேகித்து ஒரு திட்டு பிரயோகப்படுத்திவிட்டு, மூர்க்கமாக அவன் அருகில் வந்தார்.

"இரு," என்றார் மாதவன். "உன் பெயர் என்ன சொன்னாய்?"

"கணேஷ்," என்றான் கணேஷ்.

"உனக்கு ஒரு நிமிஷம் கொடுக்கிறேன். இங்கே எப்படி வந்தாய்? ஏன் வந்தாய்? சொல்லு," என்றார் மாதவன்.

"கேள்வி ஒன்று: எப்படி வந்தேன்? மாடிப்படி வழியாக..."

"போலீஸ்காரர்கள் ஒருத்தரையும் பார்க்க ...?"

"...வில்லை. தூக்கக் கலக்கத்தில் வந்தேன்! லிஃப்ட் ஏறினேன். என் அருமை நண்பன் கிருஷ்ணனின் ஃப்ளாட் சாவி என்னிடம் இருக்கிறது... இதோ.. திறந்தேன். திறந்து லைட் ஸ்விட்சைத் தடவிக் கொண்..."

"வாசலில் கான்ஸ்டபிள் இல்லையா?"

"இல்லை."

“ஏய், என்ன இது?” என்று மாதவன் கான்ஸ்டபிளை

அதட்டினார்.

“ஸார், ஒரு நிமிஷம் வெளியே போயிருந்தேன் - பாத்

ரூமுக்கு...”

“முட்டாள்!”

“கேள்வி இரண்டு: ஏன் வந்தேன்? படுத்துத் தூங்குவதற்கு

சில வேளைகளில் இரவு ஆட்டம் சினிமா பார்த்து விட்டு

தூங்குவதற்கு இங்கு வருவேன்... ஹௌ டு ஸ்டீல் எ மில்லியன்

அருமையான படம். பீட்டர் ஓடுல். அதிருக்கட்டும், கிருஷ்ணன்

இறந்துவிட்டான் என்று...”

“மிஸ்டர், எனக்கு நன்றாகத் தெரியும். நீ செய்வது பாவனை

நீ வந்தது தூங்குவதற்கில்லை. துழாவுவதற்கு.. உன்னை

விசாரித்து நாலு தட்டுத் தட்ட வேண்டும்!”

“எதற்காக என்னை விசாரித்து நாலு தட்டுத் தட்

வேண்டும்?”

“உண்மையைக் கக்குவதற்கு.”

“இப்பொழுதுதான் உண்மையைக் கக்கிக் கொண்டிரு

கிறேனே?”

“விளையாடுகிறாயா?”

“இன்ஸ்பெக்டர். நீங்கள் பிக்விக் பேப்பர்ஸ் படித்திரு

கிறீர்களா?”

“நான் உன்னை அரெஸ்ட் செய்யப் போகிறேன்...”

“வாரண்ட் இருக்கிறதா? ஸெக்ஷன் 75 ஸி.ஆர். பி.ஸி.யி

படி?”

“ஓ! சட்டம் தெரிந்த ஆசாமி! ஸெக்ஷன் 54 தெரியும

வாரண்ட் இல்லாமலே உன்னை அரெஸ்ட் செய்யலாம்...”



“என்ன குற்றம்?”

“எவ்வளவோ! ஹவுஸ் ப்ரேக்கிங். போலீஸ் வழிகளில்

...க்கீடு...”

“நீங்கள் என்னை ஆச்சரியப்படுத்துகிறீர்கள், இன்ஸ்

...டர்! என் கோணத்திலிருந்து பாருங்கள். என் நண்பனைப்

...க்க நான் வருகிறேன். என் கையில் சாவி இருக்கிறது. சுதந்திர

... நுழைகிறேன். இது தப்பா! நான் நுழைகிற போது காவல்

...லாதது என் தப்பா?... நான் ஏதாவது திருடினேனா?”

“கான்ஸ்டபிள், இந்த ஆளைச் சோதனை போடு.”

கான்ஸ்டபிள் சந்தோஷத்துடன் கணேஷை நெருங்கினார்.

“நில், தொடாதே! என் ஒரே டெரிலின் சட்டை! நானே

...த்துக் காட்டுகிறேன...”

அது காதில் விழாததுபோல் கான்ஸ்டபிள் வலுக்கட்டாய

...க் கணேஷின் பைகளில் இருந்த பர்ஸ், டயரி, சீப்பு போன்ற

...துக்களை உருவி உதறினார்.

“இன்ஸ்பெக்டர், என்னை மிகக் கேவலமாக நடத்துகிறீர்

... எச்சரிக்கிறேன். வழக்குப் போடுவேன். சேச் சேச்சே!”

“போடா எலி!” என்றார் மாதவன். பிறகு அவன் பர்ஸைப்

...த்தார். அதில் அவன் கார்டைப் பார்த்தார். “ஓ! வக்கீலா?”

“ஆம். எனக்குத் தெரிந்த ஒரு இன்ஸ்பெக்டர் இந்த

...த்தான் அனாவசியமாக ஓர் ஆளை அரெஸ்ட் செய்ய,

... 'ஹேபியஸ் கார்பஸ்'ஸுடன் அவனைத் தேடிப்போக,

...னில் அந்த ஆசாமியைத் தட்டினதில் - அவனுக்கு வீக்

... - அவன் இறந்துவிடவே, ஒரு லட்ச ரூபாய் ஸாங்ஷன்'

... மூன்று கான்ஸ்டபிள்கள், ஒரு இன்ஸ்பெக்டருக்கு

... போச்சு. ஒரு லட்சம் - ஒன்று ஸைபர் ஸைபர் ஸைபர்

... ஸைபர்!” என்றான் கணேஷ்.

"பயம் காட்டுகிறயா? இருபத்து நான்கு மணி நேர
பெஞ்சில் படுத்தால் தெரியும்."

"உண்மையைச் சொல்கிறேன்."

"உன் குரல் எனக்குப் பரிச்சயமானதாகத் தோன்றுகிற
இரு. ஓ. எஸ்! நீதானே டெலிபோனில் பேசினாய்?"

"டெலிபோனா?"

"யார் என்று கேட்டதற்குப் போலீஸ் என்று சொன்ன
சிறுபிள்ளைத்தனமாக ஜவஹர்லால் நேரு என்றாயே"

"ஜவஹர்லால் நேருவா?"

"ஆம்."

"நம் மறைந்த முன்னாள் பிரதமர் - பாரதஜோதி -
நேரு?.. இது ஒரு ஹாஸ்யம் என்றால் எனக்குப் புரியவில்லை

"ஹூம்!" என்றார் இன்ஸ்பெக்டர். மேலும், "உன்னை
பார்க்கப் பார்க்க எனக்கு வெறுப்பு அதிகமாகிறது." என்றா

"இது பரஸ்பர உணர்ச்சி," என்றான் கணேஷ்.

இன்ஸ்பெக்டர் யோசித்தார்.

"உன் பெயர், விலாசம் எல்லாம் எழுதிக்கொடு.
டிரைவிங் லைசென்ஸை விட்டு போ. காலை பத்து மணி
காம்தேவி போலீஸ் ஸ்டேசனுக்கு வரவேண்டும். உன்
விசாரிக்கிறேன். யார் உன் கட்சிக்காரன்?"

"ஒருவருமில்லை. நான் சும்மா சினிமாப் பார்த்து விட்

"கான்ஸ்டபிள்! இவனைக் கழுத்தைப் பிடித்து வெ
தள்ளு!"

"வேண்டாம். சொந்த சக்தியிலேயே போகிறேன்.
சம் டெலிபோன் பண்ணலாமா" என்றான் கணேஷ்.



"கூடாது?" என்றார் மாதவன்.

"குட்நைட் இன்ஸ்பெக்டர்! குட்நைட் 1357" என்று கான்ஸ்டபிளைப் பார்த்து இமைத்து விட்டு, நிதானமாகத் தன் பொருள்களைச் சேகரித்துக்கொண்டு தலையை வாரிக் கொண்டு புறப்பட்டான் கணேஷ்.

"ஸார், இவனை விட்டிருக்கக் கூடாது," என்றார் 1357.

"எங்கே போய்விடப் போகிறான். காரணமாகத்தான் விட்டிருக்கிறேன். நான் நுழைந்ததும் அவன் அந்தப் படத்தைக் குடைந்து கொண்டிருந்ததைப் பார்த்தேன். அதை எடு" என்றார், மாதவன் அந்தச் சித்திரத்தைக் காட்டி.

கான்ஸ்டபிள் சுவரில் இருந்த படத்தைக் கழற்றலானார்.

இரண்டு நிமிடங்களில் ஒரு பொந்து திறந்தது. பன்னிரெண்டுக்கு ஆறு அங்குல நீண்ட சதுர அலமாரி அது. அதில் காகிதக் கட்டுகளும் இரண்டு இன்ஷ்யூரன்ஸ் பாலிஸிகளும் கேரளா ஸ்டேட் மின்சார போர்டு பாண்ட்கள் இருபதும் ஒரு செக் புத்தகமும் சில நூறு ரூபாய் நோட்டுக்களும் ஒரு போட்டோ ஆல்பமும் (சிறியது), பழைய நாணயங்களும் இருந்தன. அந்தக் கடிதங்களைப் பிரித்தார். ஒவ்வொன்றாகப் பிரித்தார். ஒவ்வொன்றையும் முதல் வரி, சில நடுவரிகள். கடைசி வரி இப்படிப் படித்துக் கொண்டே பரிசீலித்தார். பெரும்பாலும் ஹரிணி என்ற பெண்ணும் மரகதம் என்ற பெண்ணும் எழுதிய கடிதங்கள். அவை பச்சையான கடிதங்கள். ஒரு சமீபத்திய கடிதம் அவர் கவனத்தைக் கவர்ந்தது; தேவ் என்கிற ஆசாமி எழுதிய ரசமான கடிதம்.

*"ஹரிணி நேற்று என்னிடம் சொன்னாள். நீ அவளுக்கு ரூ 2500 தருவதாகவும், உன் கல்யாணம் முடிந்த பிறகும்*

*அவளு டன் தொடர்பு வைத்துக் கொள்ள விரும்புவதாகவும் சொன்னாயாம். உன் தைரியத்தையும் பணம் தரும் அலட்சி யத்தையும் நினைத்து ஆச்சரியப்பட்டேன். அவள் மறுத்த தற்கு ஜே.ஜே. பப்ளிஸிடீஸில் அவளுடைய வேலை போய் விடும் என பயமுறுத்தினாயாம். அப்படி ஏதாவது நிகழ்ந் தால். நான் உன்னைக் கொன்றுவிடுவேன்,"*

தேவ்

இன்ஸ்பெக்டர் மாதவன் சிரித்துக் கொண்டார். 'மிஸ்டர் கணேஷ், உன் க்ளையண்ட் யார் என்று இப்போது புரிகிறது...!' கான்ஸ்டபிளைப் பார்த்து, "நாளை மாலைக்குள் இந்தக் கேஸில் முதல் அரெஸ்ட் கிட்டிவிடும் என்று நினைக்கிறேன்." என்றார்.

ஜே.ஜே. பப்ளிஸிடியின் மானேஜர் பாலனின் எதிரே இன்ஸ்பெக்டர் மாதவன் அமர்ந்திருந்தார்.

"மிஸ் ஹரிணி என்று ஒரு பெண் இங்கே வேலை செய்கிறாள், இல்லையா?" என்றார்.

"சென்ற வாரம் அவளை வேலையிலிருந்து நீக்கி விட்டோம்."

இன்ஸ்பெக்டர் இந்தப் பதிலை எதிர்பார்த்தார். "மிஸ்டர் ஜி. என். கிருஷ்ணனை உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும், என் நெருக்கமான நண்பன். ஏன், அவன் ஏதாவது செய்து விட்டானா?"

"ஹி இஸ் டெட்! நீங்கள் பேப்பர் பார்க்கவில்லையா?"

"ஓ ஹெல்! என்ன ஸார் இது! எப்படி? எப்பொழுது?"

"இந்தக் கிருஷ்ணன் எப்படிப்பட்ட ஆசாமி?"

"எப்படிப்பட்ட ஆசாமி என்றால்?"



"குணம்?"

"அவனிடம் சில குறைகள் இருந்தன."

"உதாரணம்?"

"பெண்கள், சாராயம், மகாலக்ஷ்மி. பணம் அதிகம். பால்யம்! காட்! காட் ஹி இஸ் டெட்? என்னால் நம்பவே முடியவில்லை!"

"இந்த ஹரிணியைப்பற்றிச் சில தகவல்கள் வேண்டும்!"

"கேளுங்கள்."

"அவள் என்ன வேலையில் இருந்தாள்?"

"விளம்பர மாடல் போட்டோ எடுப்போம் அவளை வைத்து. சிறிய சிறிய திரைப்படங்கள் எடுப்போம்!"

"அவளுக்கும் கிருஷ்ணனுக்கும் ஏதாவது... இருந்ததா?"

"நிறைய."

"சென்ற வாரம் அவளை வேலையிலிருந்து நீக்கியது கிருஷ்ணனின் சிபாரிசின் பேரில்தான்."

"ஒரு விதத்தில் அப்படித்தான். இந்தக் கிருஷ்ணன் எங்கள் கம்பெனியின் மானேஜிங் டைரக்டரின் உறவினன்."

"அவள் வீட்டு விலாசம் உங்கள் கம்பெனியில் இருக்குமா?"

"இருக்கிறது. தரச்சொல்கிறேன்." பட்டனை அழுத்தினார் மானேஜர்.

மாலை 4-30'க்குக் கணேஷ் வீட்டு டெலிபோன் ஒலித்தது.

"யெஸ்!"

"கணேஷ்!"

"யெஸ்!"

"நான் தேவ் பேசுகிறேன். அவர்கள் இங்கே இருக்கிறார்கள்..."

"எவர்கள்?"

"போலீஸ்?"

"போலீஸா? எதற்கு?"

"என்னைக் கைது செய்வதற்கு வாரண்டுடன் வந்திருக்கிறார்கள். நீ காலையில் சொன்னதெல்லாம் புளுகு."

"தேவ், தேவ், கவலைப்படாதே..."

"ஆகா! எவ்வளவு ஆறுதல்!"

"கவனி தேவ், நன்றாகக் கவனி. அவர்களுடன் போ... எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லாதே. நீ காப்பி சாப்பிட்டாயா என்று கேட்டால் கூடப் பதில் சொல்லாதே. விரதம் இருக்கும் லாமா போல இரு. நான் உடனே வருகிறேன். அரெஸ்ட் செய்தால் எதிர்க்காதே."

"கணேஷ், எனக்கு ஒன்றும் புரியவில்லை. நீ விஷயத்தை ரொம்பக் குழப்பியிருக்கிறாய் என்று தெரிகிறது."

"அந்த வாரண்டைப் பார். அதில என்ன எழுதியிருக்கிறது?"

"மாஜிஸ்ட்ரேட் கையெழுத்துப்போட்டு, போலீஸ் ஆ... சருக்கு என்னை அரெஸ்ட் செய்யும்படி உத்தரவிருக்கிறது. ஸீ... இருக்கிறது..."

"அதில்லை, குற்றம் என்ன என்று எழுதியிருக்கிறது?"

"நிறைய எழுதியிருக்கிறது. 302 அது இது என்று."

"செக்ஷன் 302 என்றால் மர்டர், கொலை" என்றா... கணேஷ்.

---

*...சுந்தாவின் டயரியிலிருந்து...*

– அடிக்கடி வருவதும்போவதும் என்னைப் பார்ப்பதும் சிரிப்பதும் நான் பதிலுக்குச் சிரிப்பதும் சகஜமாகிவிட்டது. அடிக்கடி ஜெய் ஞாபகம் வருகிறது. ஜெய் என் மனச்சாட்சியின் பக்கம். கே. அந்தப் பக்கம். இந்தப் பக்கம் கண்யமும் கட்டுப்பாடும் புத்திசாலித்தனமும் 'ஜாய்ஸி'ன் யூலிஸிஸும், எக்ஸிஸ்டென்ஷியலிஸத்தைப் பற்றிப் புரியாத வாசகங்களும். அந்தப் பக்கம் தவிர்க்க முடியாத கவர்ச்சியும் சில தொடல்களும் அசைவுகளும் வேதனைகளும் விருப்பங்களும் மனம் சாயும் பக்கம்.

சிவப்பு விளக்கு எரிகிறது. அதிகம் ட்ராபிக் இல்லாதபோது, போலீஸ்காரன் இல்லாதபோது சிவப்பு விளக்கை மீறுவதில்லையா? படுத்துக்கொள்ளும்போது இதை எழுதுகிறேன். நாளைக் காலை தெளிவடைந்து விடுவேன்.

## ...டிதுங்கள் — 6

**ப**ழைய காலத்துக் கருங்கல் செங்கல் கட்டிடம் அது. அதில் ஒரு அறை. ஒரு அறை என்பதைவிட ஒன்றரையறை என்று சொல்லலாம். மேலிருந்து முப்பது அடிக்குத் தொங்கும் ...ன். அதன்கீழ் ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் புருஷோத்தம ...தாஸ். (55வயது. கோரைப் புற்கள் போலத் தலை. கறுப்பும் ...மும் கலந்த பிரேம் கண்ணாடி. ஒரே விரலில் இரண்டு ...திரங்கள்.) அவர் அருகில் கோர்ட் கிளார்க். அவர் எதிரே ...தன ரெமிங்டன் டைப்ரைட்டர். மேலே சுவரில் கையில் புத்தகம் வைத்துக் கொண்டு புன்னகைக்கும் மஹாத்மா.

மஹாராஷ்டிர மாநிலத்திற்கும் ஜெய்தேவ் என்பவரின் புத்தி
தேவதத்தன் என்ற தேவுக்கும் இடையில் வழக்கின் 'பிரிலிமின
ஹியரிங்' நடந்து கொண்டிருந்தது.

ப்ராஸிக்யூடிவ் இன்ஸ்பெக்டர் மன்ஸுகானி (மூக்கு) சி
காகிதங்களைக் கலைத்து அடுக்கிக் கொண்டிருந்தார்.

கணேஷ் (டிபென்ஸ் தரப்பு) ஒரு காகிதத்தில் நாலாய் மடித்
எட்டாய் மடித்துப் பதினாறாய் மடிக்கப் பிரயத்தனப்பட்டு
கெண்டிருக்கும்போது மாஜிஸ்ட்ரேட் கூப்பிட்டார். மன்ஸுகா
கவனித்தார்.

"உங்களுக்கு எல்லாக் காகிதங்களும் ரிப்போர்ட்களு
கிடைத்தனவா? போலீசின் இறுதி ரிப்போர்ட் ஃபர்ஸ்ட் இன்
மேஷன், பிராஸிக்யூஷன் சாட்சிகளின் வாக்குமூலங்கள்..."

"கிடைத்தன யுவர் ஆனர்."

"திருப்திதானே?"

"இந்த இடத்தில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். டாக்
டிரைவர் சரண்தாஸ், மானேஜர் ஷெரூர் இவர்களின் வா
குமூலங்களில் சில பகுதிகள் எங்களுக்குத் தரப்பட்டிரு
கின்றன..." என்றான் கணேஷ்.

மாஜிஸ்ட்ரேட் மன்ஸுகானியைப் பார்த்தார். மன்ஸுகா
"யுவர் ஆனர், அந்தப் பகுதிகள் வழக்குக்குத் தேவையில்ல
என அபிப்பிராயப்பட்டதால் காலவிரயத்தைத் தவிர்க்க அ
நிராகரிக்கப்பட்டன" என்றார்.

"சில பகுதிகள் நான் அவசியம் எனக் கருதுகிறே
உதாரணமாக, இறந்த கிருஷ்ணனின் அலமாரியிலிருந்த சி
கடிதங்கள் தான் தாக்கல் செய்யப்பட்டு இருக்கின்றன. அலமா
யிலிருந்த எல்லாக் கடிதங்களும் தாக்கல் செய்யப்பட வேண்டு
இது டிபென்ஸுக்கு முக்கியம்" என்றான் கணேஷ்.



மாஜிஸ்ட்ரேட், "அதில் கஷ்டம் இருக்காது என்று நினைக்கிறேன்." என்றார். மேலும், "மிஸ்டர் கணேஷ் உங்கள் வாதம் என்ன?" என்றார்.

கணேஷ், "பிரைமாஃபேஸியாக கேஸே இல்லை என்பது தான் என் வாதம். என் ஒரே சாட்சி குற்றம் சாட்டப்பட்டிருக்கும் தேவ தத்தன்."

"ப்ராஸிக்யூஷன்!"

"எங்களுக்கு ஆறு பேர் யுவர் ஆனர்."

"சரி ஆரம்பியுங்கள். ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். இது ஒரு 'ப்ரிலிமினரி' மேக் இட் ஷார்ட்."

மன்ஸுகானி நகர்ந்து கண்ணாடி அணிந்து கொண்டார். "இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் ஜே. தேவதத்தன், பெட்டர்ரோடு, திவோலி கார்டன்ஸ், 503'ம் எண் ஃப்ளாட்டில் வசித்து வந்த ஜி. என். கிருஷ்ணன் என்பவரை சென்ற..."

கணேஷ் எழுந்து, "இது ப்ராஸிக்யூஷனில் தொடக்கச் சொற்பொழிவென்றால் எனக்கும் ஒரு பொழிவுக்குச் சந்தர்ப்பம் தரவேண்டும்" என்றான்.

மாஜிஸ்ட்ரேட் மன்ஸுகானியைப் பார்த்து, "நீங்கள் உங்கள் சாட்சிகளை நேராகக் கூப்பிடலாம். முன்னுரை தேவையில்லை என்று நினைக்கிறேன்" என்றார். மன்ஸுகானி சற்று ஏமாற்ற மடைந்து, "இன்ஸ்பெக்டர் மாதவனைக் கூப்பிடுகிறேன்," என்றார்.

மாதவன், 'திறமை' என்பதைச் சலவை செய்து அணிந்தவர் போல வந்தார். நின்றார். சத்தியம் செய்தார். கேட்ட கேள்விகளுக்குத் தெளிவாகப் பதிலளித்தார். முதலில் டெலிபோன் வந்ததைச் சொன்னார். சென்றதைச் சொன்னார். பார்த்ததைச்

சொன்னார். இன்க்வெஸ்ட்டுக்குத் தயார் செய்தது. 'போஸ்ட் மார்ட்டத்திற்கு அனுப்பியது...

"அந்த ரிபோர்ட்களின் பிரதிகள் தாக்கல் செய்யப் பட்டிருக் கின்றன" என்றார் மன்ஸுகானி.

"பார்த்தேன்," என்றான் கணேஷ்.

"இறந்து போன கிருஷ்ணனின் அறையைச் சோதனை செய்ததில் நீங்கள் என்ன பார்த்தீர்கள்?"

"அறை கலையாமல் சுத்தமாக இருந்தது. எதையும் திருடும் முயற்சி தெரியவில்லை. ஒரு ரிகார்ட் ப்ளேயர் ஓடிக் கொண்டி ருந்தது. மேஜைமேல் கோப்பைகளில் மது இருந்தது. அந்த மேஜையின் அருகில் கீழே தரையில் ஒரு ஜதை பூட்ஸ் அடை யாளம் தெளிவாகத் தெரிந்தது. சைஸ் ஒன்பது இருக்கும். பெரிய சுவடுகள். கிருஷ்ணனின் அறையில் ஒரு அலமாரியில் நிறையக் கடிதங்கள் இருந்தன. அந்தக் கடிதங்கள் பெரும்பாலும் ஹரிணி என்கிற பெண் எழுதிய கடிதங்கள்."

"ஹரிணி என்பது யார் என்று விசாரித்தீர்களா?"

"குற்றம் சாட்டப்பட்டிருக்கும் தேவதத்தனின் தங்கை.

"சரி, மற்றக் கடிதங்கள்?"

"ஒரு கடிதம் தேவதத்தனால் எழுதப்பட்ட கடிதம்."

"இந்தக் கடிதங்களிலிருந்து நீங்கள் என்ன தெரிந்து கொண்டீர்கள்?"

"இறந்த கிருஷ்ணனுக்கும் ஹரிணிக்கும் தொடர்பு இருந்தி ருக்கிறது. கிருஷ்ணன் வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளத் தீர்மானிக்க. இது ஹரிணிக்கும் அவள் அண்ணனுக்கும் கிருஷ்ணன் மேல் வெறுப்பை ஏற்படுத்தி இருக்கிறது. ஹரிணி ஒரு விளம்பரக் கம்பெனியில் மாடலா



இருந்து சமீபத்தில் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறாள். இதற்குக் காரணம் ஒரு விதத்தில் கிருஷ்ணன். இப்படி நிகழ்ந் தால் கிருஷ்ணனை நிச்சயம் கொன்றுவிடுவேன் என்று பய முறுத்தி தேவதத்தன் எழுதின ஒரு கடிதம் இருந்தது. என் முதல் சந்தேகத்துக்கு இந்தக் கடிதம் தான் ஆதாரமாக இருந்தது."

"அந்தக் கடிதம் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது யுவர் ஆனர். உங்களுக்கு வேண்டுமென்றால் படித்துக் காட்டு கிறேன்."

"தேவையில்லை" என்றார் புருஷோத்தம்.

"மேல் விசாரணையில் என்ன தெரிந்தது. இன்ஸ்பெக்டர்?"

"சம்பவம் நடந்த மாலை 7-30'க்கு தேவதத்தன் கிருஷ்ணன் அறைக்குப் போனதையும், அவர்கள் இருவருக்கும் பலத்த வாக்குவாதம் நிகழ்ந்ததையும் சொன்னார்கள்..."

கணேஷ் எழுந்து. "யுவர் ஆனர். இதை நீங்கள் அனு மதிக்கக் கூடாது. இது ஹியர்ஸே. மற்றவர்கள் என்ன சொன்னார் கள் என்று தெரிவதற்கு அவர்களையே கூப்பிட வேண்டும்" என்றான்.

மன்ஸுகானி, "இது ப்ரிலிமினரி ஹியரிங். அவர்கள் வாக்குமூலங்களில் கையெழுத்திட்ட பிரதிகள் இருக்கின்றன. டிஃபன்ஸுக்கும் தரப்பட்டிருக்கின்றன. இன்ஸ்பெக்டர் விசாரித்த ஒவ்வொருவரையும் கூப்பிட்டால் மிகவும் கால விரயமாகும்" என்றார்.

"இல்லை. அவர்களைக் குறுக்கு விசாரணை செய்யும் வாய்ப்பு எனக்கு வேண்டும். எந்தச் சூழ்நிலையில் அந்தச் சாட்சி கள் எடுக்கப்பட்டன என்பது தெரியவேண்டும். இந்த ஹியர் ஸேயை நீங்கள் நிச்சயம் அனுமதிக்கக் கூடாது."

"மிஸ்டர் கணேஷ் சொல்வது சரிதான். இன்ஸ் பெக்டருக்குத் தகவல் தந்தவர்களில் முக்கியமானவர்களை நீங்கள் சாட்சிக்குக் கூப்பிடுங்களேன்" என்றார் மாஜிஸ்ட்ரேட்

"கூப்பிடத்தான் போகிறோம் யுவர் ஆனர். சரி, அந்தக் கேள்வியை மாற்றிக் கேட்க அனுமதியுங்கள். இன்ஸ்பெக்டர் நீங்கள் பலரை விசாரித்தீர்கள் அந்த விசாரணையிலிருந்து நீங்கள் முடிவுக்கு வந்த விஷயங்கள் என்ன என்ன?... இதை எதிர்க்க முடியாது என்று நினைக்கிறேன்."

கணேஷ், "கோ அஹெட்," என்றான்.

இன்ஸ்பெக்டர் "சம்பவம் நடந்த இரவு சுமார் 7-30க்கு தேவதத்தன் ஒரு டாக்ஸியில் வந்து இறங்கியிருக்கிறார் கிருஷ்ணன் அறைக்குச் சென்றிருக்கிறார். அறையில் இரு வருக்கும் உரத்த வாக்குவாதம் நடந்திருக்கிறது. அறையை விட்டு தேவதத்தன் வேகமாக வெளியேறியிருக்கிறார். தேவ தத்தன் வந்த சமயமும், 'போஸ்ட் மார்ட்டம்' கணக்கிட்ட கிருஷ்ணன் இறந்த சமயமும் கிட்டத்தட்ட ஒன்றாக இருக்கிறது. தேவதத்தனின் விரல் ரேகைகளை அறையில் நிறைய இடத்தில் கண்டோம். அவர் ஷூவின் அடையாளமும் அறையில் தெளி வாக இருந்தது. அவர் ஷூவின் அடிக்கோடுகளும் தரையில் பதிந்திருந்த கோடுகளும் வரிக்கு வரி பொருந்தின."

"யுவர் ஆனர், இவர் சொல்வதில் ஒவ்வொரு வாக்கியத்தை யும் மற்ற சாட்சிகளை வைத்துக்கொண்டு நிரூபிக்க வேண்டிய பொறுப்பு ப்ராஸிக்யூஷனுடையது. அப்படிச் செய்யாவிட்டால் இதை முழுவதும் நீங்கள் நிராகரிக்க வேண்டும்" என்றான் கணேஷ்.

மன்ஸுகானி, "நிரூபிக்கிறோம் மிஸ்டர் கணேஷ், கவலை படாதீர்கள்! வரப்போகிற ப்ராஸிக்யூஷனின் சாட்சிகளில் இவ



வாக்கியங்கள் ஒவ்வொன்றும் நிரூபணம் பெறும். வந்தனம் இன்ஸ் பெக்டர். நீங்கள் குறுக்கு விசாரணை செய்யலாம்" என்றார்.

கணேஷ் எழுந்தான். மாதவனை நேராகப் பார்த்தான். "ஹலோ!" என்றன அவன் கண்கள்.

மாதவன் பதில் பார்வையில், "நான் உன்னை வெறுக் கிறேன்" என்று பெரிய எழுத்தில் எழுதினார்.

"இன்ஸ்பெக்டர், நீங்கள் எவ்வளவு உயரம்?"

"ஐந்தடி பத்து அங்குலம்."

"நீங்கள் அணியும் ஷூவின் சைஸ் என்ன?"

"ஒன்பது."

"நீங்கள் அறையில் பார்த்த சுவடுகள் உங்கள் காலணிகளா சில இருக்கலாம் அல்லவா?"

"முடியாது."

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?"

"அந்த அடையாளங்களின் 'பாட்டர்ன்' வேறு. நான் உள்ளே நுழைந்ததும் அதைத் தெளிவாகப் பார்த்தேன். உடனே அவைகளைத் தனியாக 'மார்க்' செய்து கொண்டேன்."

"நீங்கள் உள்ளே நடக்கவில்லையா."

"நடந்தேன், ஷூவைக் கழற்றிவிட்டு, என் சுவடுகள் தரையில் பதிந்த இடங்களை ஜாக்கிரதையாக 'கிராஸ்' செய்து விட்டேன்."

"விநோதம்."

"விநோதமில்லை. ஜாக்கிரதையுள்ள எந்தப் போலீஸ் காரரும் செய்வது."

"அங்கிருந்த கால் சுவடுகள் குற்றம் சாட்டப்பட்ட தேவதத்தனின் கால் சுவடுகள் என்கிறீர்கள்?"

"நான் சொல்லவில்லை. ஒப்பிட்டுப் பார்த்ததில் பொருந்தியது."

"அந்தச் சுவடுகள் குற்றம் நிகழ்ந்த அன்றுதான் பதிந்தவை என்று எப்படிச் சொல்வீர்கள்? முதல் தினம் தேவதத்தன் வந்திருந்தால் பதிந்திருக்கலாம் அல்லவா?"

"இருக்கலாம். ஆனால் அறை தினம் தினம் சுத்தம் செய்யப்படுகிறதே!"

"சுத்தம் செய்யப்படுகிறதா? அன்றைக்கு எப்பொழுது அறை சுத்தம் செய்யப்பட்டது என்று தெரிந்து கொண்டீர்களா?"

"இல்லை."

"காலை எட்டு மணிக்குச் சுத்தம் செய்யப்பட்டது என்று வைத்துக்கொண்டால் அதற்குப்பின் எப்பொழுது வந்திருந்தாலும் அந்தச் சுவடுகள் பதிந்திருக்கலாம் அல்லவா?"

"இருக்கலாம்."

"சரி, அந்த விரல் ரேகைகள்! தேவதத்தனின் விரல் ரேகைள் அறையில் சில இடங்களில் இருந்ததாகச் சொன்னீர்கள். அவைகளை யார் எடுத்தார்கள். விரல் ரேகை டிபார்ட்மெண்ட் ஆசாமிகளா?"

"இல்லை. நாங்கள் தான் எடுத்தோம். அவர்களுக்கு ஒப்பிட்டுப் பார்க்க மட்டும் அனுப்பினோம்."

"அவைகள் எப்படி எடுக்கப்பட்டது?"

"ஏன்? மெர்க்குரி சாக் பவுடர் வைத்துத்தான். எப்பொழுதும் போல!"



"என் கேள்வி அதில்லை. யார் முன்னிலையில், எந்தச் சூழ்நிலையில் எடுக்கப்பட்டன?"

"என் முன்னிலையில் மற்றொரு போலீஸ் ஆசாமி எடுத்தார்."

"அவை அந்த அறையில் தான் எடுக்கப்பட்டனவா?"

"ஆம். பின்பு குற்றவாளி தேவதத்தனின் ரேகைகளைத் தனியாக எடுத்து ஒப்பிட்டுப் பார்க்க டிபார்ட்மெண்டுக்கு அனுப்பினோம்."

"இந்த விரல் ரேகை விஷயத்திலும் அப்படித்தானே? எப்பொழுது அவை பதிந்தன என்று சொல்ல முடியாதல்லவா?"

"முடியாது."

"மற்றொரு விஷயம் இன்ஸ்பெக்டர். நீங்கள் அறையில் நுழைந்த போது ஒரு ரிக்கார்ட் ப்ளேயர் ஓடிக்கொண்டிருந்தது என்று சொன்னீர்கள். அதில் ரிக்கார்ட் இருந்ததா?"

"ஆம். ஒரு லாங் ப்ளே ரிகார்ட்."

"அது பாடிக் கொண்டிருந்ததா?"

"பாடி முடிந்து இறுதியில் இருந்தது. தானாக மோட்டாரை அணைக்கும் மெக்கானிசம் வேலை செய்யாததால் முடிவில் ஓடிக்கொண்டிருந்தது."

"இதனால் கொலை நடந்த சமயம் அதிலிருந்து சங்கீதம் ஒலித்துக் கொண்டிருந்தது என்று சொல்லலாம் இல்லையா?"

"ஆம்."

"ரிகார்ட் பிளேயர் சங்கீதத்தின் மத்தியில் சம்பவம் நடந்திருக்க வேண்டும்."

"ஆம்."

"சரி. நிறையக் கடிதங்களைப் பற்றிச் சொன்னீர்கள். ஹரிணியின் கடிதங்கள். தேவதத்தன் எழுதிய மிரட்டல் கடிதம். வேறு என்ன என்ன கடிதங்கள் இருந்தன?"

"வேறு சில கடிதங்களும் இருந்தன."

"சில பெண்கள் எழுதிய கடிதங்கள் அல்லவா?"

"ஆம்."

"அந்தப் பெண்கள் யார் யார்? அவர்கள் பெயர் என்ன?"

"எல்லாப் பெயர்களும் ஞாபகமில்லை. மரகதம்...ம்..."

"இன்ஸ்பெக்டர்! இது என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்து கிறது. அந்தப் பெண்கள் ஒவ்வொருவரையும் நீங்கள் விசாரித்தி ருக்க வேண்டாமா? ஹரிணிக்கும், தேவதத்தனுக்கும் இருக்கும் அதே வெறுப்பு அவர்களுக்கும் அவர்கள் உறவினர்களுக்கும் இருக்கலாம் இல்லையா?"

"அது கிருஷ்ணனுக்கும் அவர்களுக்கும் உள்ள தொடர்பைப் பொறுத்தது."

"அவை காதல் கடிதங்கள்?"

"சொல்லலாம்."

"அந்தக் கடிதங்களிலிருந்து கிருஷ்ணன் இரண்டுக்கும் மேற்பட்ட பெண்களிடம் நெருக்கமாக இருந்திருக்கிறார் என்பது தெரியவில்லையா?"

"ஒரு விதத்தில்."

"கிருஷ்ணன் திருமணம் செய்து கொள்வதில் தேவ தத்தனுக்கு எவ்வளவு வெறுப்பு இருக்குமோ அவ்வளவு வெறுப்பு அவர்களுக்கும் இருக்கும் அல்லவா?"

மன்ஸுகானி எழுந்து "இந்தக் கேள்வியை இவர் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருக்கிறார்" என்றார்.



கணேஷ், "யுவர் ஆனர். இந்த வழக்கை நீங்கள் உடனே ரத்து செய்ய வேண்டும். போலீஸ் விசாரணை மிகவும் அரை குறையாகவும் பாரபட்சமாகவும் இருக்கிறது. இறந்த கிருஷ்ண னின் சினேகிதிகளில் ஹரிணியையும் அவள் அண்ணனையும் மட்டும் தேர்ந்தேடுத்து விசாரிப்பதும் குற்றம் சாட்டுவதும் நியாய மில்லை. மற்றவர்கள் யார்? அவர்கள் விலாசம் என்ன, கொலை நடந்த சமயம் அவர்கள் எங்கிருந்தார்கள் ஒன்றும் தெரிய வில்லை. இந்த விவரங்கள் தெரியும்வரை அவர்கள் ஒவ்வொரு வரும் இந்தக் கூண்டில் நிற்க வேண்டியவர்கள்," என்றான்.

மன்ஸுகானி குதித்து எழுந்தார்.

"தேவதத்தன் மேல் சந்தேகம் ஏற்படுவதற்கு அந்தக் கடிதங்கள் மட்டும் ஆதாரம் இல்லை. போஸ்ட் மார்ட்டம் ரிப் போர்ட்டில் கிருஷ்ணன் இறந்த நேரம் கணக்கிடப்பட்டிருக்கிறது. அந்தச் சமயம் தேவதத்தன் கிருஷ்ணன் அறைக்குச் சென்ற தைக் கண்ட சாட்சிகள் இருக்கின்றார்கள். அவர்கள் இருவருக் கும் பலத்த வாக்கு வாதத்தைக் கேட்ட சாட்சிகள் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் விசாரிக்கப் போகிறோம்..."

"என் வாதம் அதில்லை. அதே சமயத்தில் அல்லது கொஞ்சம் முன்னாலோ பின்னாலோ - ஆடாப்ஸி நேரம் எவ்வளவு சரியானது என்று சொல்ல முடியாதல்லவா?- கிருஷ்ணன் அறைக்கு வந்து போனவர்கள் யார் யார்? அவர் களுக்கும் கிருஷ்ணனுக்கும் எப்படிப்பட்ட தொடர்பு? அவர் களுக்கு அழகான தங்கைகள் இருக்கிறார்களா? அவர்கள் ...பு என்ன? இந்த விவரங்கள் தெரிய வேண்டாமா?"

இருவரும் மாஜிஸ்ட்ரேட்டைப் பார்த்தார்கள்.

அவர் சொன்னார்:

---

*சுநந்தாவின் டயரியிலிருந்து...*

இந்த டயரியை யாருக்காக எழுதுகிறேன்? இப்படி டயரியே எழுதக்கூடாது. மற்றவர் பிற்காலத்தில் படிக்கப் போகிறார்கள் என்று நினைத்துக்கொண்டே எழுதுகிறேன். இது கூடாது. என் மனத்தில் நானே என்னை முன்னால் வைத்துக் கொண்டு சொல்ல நினைக்கிற விஷயங்களைத் தான் எழுதவேண்டும் இல்லையா?

---

## 8.45க்குத் தீர்ப்பு — 7

"யுவர் பாய்ண்ட் இஸ் வெல் டேகன். ஆனால் இந்த விசாரணையின் குறிக்கோள் தேவதத்தன் இந்தக் குற்றத்தை செய்தார் என்பதற்கு ஆதாரமாக, அவரை செஷன்ஸுக்கு அனுப்புவதற்குச் சாட்சியங்கள் இருக்கிறதா என்று பரிசீலி... பதே. அந்த வகையில் ப்ராஸிக்யூஷன் தரும் சாட்சிகளை முழுவதும் கேட்பது நம் கடமையாகும். ப்ராஸிக்யூஷ... கொண்டு வராத சாட்சிகளை ஏன் கொண்டு வரவில்லை என்று கேட்பதற்கு ஆதாரமில்லை. ப்ரொஸீட்."

மன்ஸுகானி, "இன்ஸ்பெக்டரின் குறுக்கு விசாரணை முடிந்துவிட்டதா?" என்று கேட்டார்.

கணேஷ், "மற்ற சாட்சிகளை விசாரித்தபின் இன்ஸ்பெக்டரைத் தொடர்ந்து விசாரணை செய்யும் வாய்ப்பு எனக்கு வேண்டும்," என்றான்.

"சரி, சரி," என்றார் மன்ஸுகானி.



அடுத்த சாட்சி டாக்ஸி டிரைவர் சரண்தாஸ். அவனைப் ப்ராஸிக்யூஷன் கேட்ட கேள்விகளிலிருந்து, தான் மஹாத்மா காந்தி ரோடில் சம்பவம் நடந்த தினத்தன்று இரவு 7.30 சுமாருக்கு டாக்ஸியில் ஒருவரைத் திவோலி கார்டன்ஸுக்கு கொண்டு வந்து சேர்த்ததாகவும், அவர் உயரமான ஆசாமி என்றும், அவர் கோர்ட்டில் இருக்கிறார் என்றும், அவர்தான் தேவதத்தன் என்றும் சொன்னான்.

கணேஷ் குறுக்கு விசாரணையில்:

"சரண்தாஸ்! நேற்றைக்கு இரவு 7-30'க்கு நீ எங்கிருந்தாய்?"

"என் டாக்ஸியில்."

"டாக்ஸியில் தான். எந்த இடத்தில்?"

"கிர்காம் ஏரியாவில் என்று நினைக்கிறேன்."

"என்று நினைக்கிறாய்?"

"ஆம்... மேலும் கீழும் சென்று கொண்டிருப்பதால் எந்த ஒரு இடத்தில் இருக்கிறோம் என்று சொல்ல முடியாது."

"அப்படியென்றால் சென்ற மாதம் நடந்த அந்த தினத்தை மட்டும் எப்படித் தெளிவாக ஞாபகம் வைத்திருக்கிறாய்?"

"எனக்கு இந்தக் கேள்வி புரியவில்லை."

மாஜிஸ்ட்ரேட், "தேவதத்தனை அன்று டாக்ஸியில் கொண்டு வந்ததை ஞாபகத்தில் வைத்துக் கொள்வதற்கு ஏதாவது காரணம் இருக்கிறதா?" என்று கேட்டார்.

"மறுநாள் பேப்பரில் பார்த்தேன். சம்பவம் பற்றி, ராத்திரி ஒரு ஆசாமியைக் கொண்டு வந்துவிட்டோமே அந்த இடத்தில். இதற்கு ஏதாவது சம்பந்தம் இருக்குமோ என்று பக்கத்துப் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று சொன்னேன்."

"அப்படியா? சரி. தேவதத்தனை நீ எப்பொழுது முதலில் பார்த்தாய்?"

"போலீஸ் ஸ்டேஷனில்."

"காம்தேவி போலீஸ் ஸ்டேஷனில்?"

"ஆமாம்!"

மன்ஸுகானி தவித்தார்.

"அதற்கு முன் பார்க்கவில்லை?"

"இல்... அதற்கு முன் தான் டாக்ஸியில் பார்த்தேன். அப்புறம் போலீஸ் ஸ்டேஷனில் பார்த்தேன்."

"மாலை 7-30'க்கு மஹாத்மா காந்தி ரோடில் பார்த்தாய்?"

"ஆம்."

"மஹாத்மா காந்தி ரோடில் எந்த இடத்தில் டாக்ஸி பிடித்தார்?"

"ஜஹாங்கீர் ஆர்ட் காலரி பக்கம். ஐ. ஏ. ஸி. ஆபீஸுக்கு அருகே-"

"அங்கே நல்ல வெளிச்சம் இருந்ததா?"

"இருக்கும்."

"ராத்திரி 7-30'க்கு அந்த இடத்தில் அவரைப் பார்த்தாய். உன் டாக்ஸியில் ஏறினார். அவர் முகம் உனக்கு ஞாபகம் இருக்கிறது."

"இருக்கிறது," என்று தேவதத்தனை ஒருமுறை பார்த்துக் கொண்டான் சரண்தாஸ்.

"எப்படிப் பார்த்தாய்?"

"நேராக."



"முகம் ஞாபகம் இருக்கும்படி வெளிச்சம் இருந்தது?"

"இருந்தது."

"இரவு 7-30'க்கு தெரு மத்தியில் போன மாதம் உன் டாக்ஸியில் ஏறினவர் முகம் உனக்கு ஞாபகம் இருக்கிறது."

"ம்..."

"சரி. நேற்றுக் காலை பகல் வெளிச்சத்தில் பத்து மணிக்கு உன் டாக்ஸியில் சவாரி செய்தவர் முக அமைப்பை வர்ணிக்கலாம்."

மன்ஸுகானி எழுந்து "யுவர் ஆனர், இது ரொம்ப வேஸ்ட்! தேவதத்தனை ஞாபகம் இருப்பதற்குக் காரணம் சொல்லியாகி விட்டது. திரும்பத் திரும்ப ஒரே கேள்வியைக் கேட்கிறார் நண்பர்."

அவர் முடிக்கு முன் கணேஷ், "சரி, தேவதத்தனைப் போலீஸ் ஸ்டேஷனில் பார்த்தபோது என்ன கேட்டார்கள்?" என்றான்.

"யார்?"

"போலீஸ்காரர்கள். இவர்தானா பார்த்துச் சொல் என்று கேட்டார்களா?"

"ஆம்."

"நீ என்ன சொன்னாய் அதற்கு? இவர்தான் என்றாயா?"

"ஆம்."

"எப்படிக் கேட்டார்கள்? இரண்டு மூன்று பேருக்கு நடுவில் நிறுத்தி வைத்துக் கேட்டார்களா? இல்லை, தேவதத்தனைத் தனியாக வைத்துக் கேட்டார்களா?"

"தனியாக உட்கார்ந்திருந்தார்."

"நான் சொல்கிறேன். நீ தேவதத்தனைப் பார்த்தது முதல் தடவை ஸ்டேஷனில்தான். நீ 'அவர் தான்' என்று சொல்ல உன்மேல் ட்ராஃபிக் டிபார்ட்மெண்டில் இருக்கும் குடித்துவிட்டு ஓட்டின கேஸை ரத்து செய்கிறோம் என்று சொன்னார்கள் இல்லையா?"

"யுவர் ஆனர்! திஸ் இஸ் டு மச்," என்று கத்தினார் மன்ஸுகானி.

மாஜிஸ்ட்ரேட், "மிஸ்டர் கணேஷ், அந்தக் கேள்வி அநாவசியமானது. சம்பந்தமே இல்லாதது..." என்றார்.

"ஸாரி ஸார். இந்த ஆள் ஒரு மகா பொய்யன். இவன் ரிகார்டுகளைப் பாருங்கள். சொல்வதெல்லாம் பொய்."

"அது பற்றித் தெரிந்து கொள்ள நான் இருக்கிறேன்."

டாக்ஸி டிரைவர் சரண்தாஸ் நகருமுன், கணேஷ், "சரண் தாஸ்! ஒரே ஒரு கேள்வி. உன் டாக்ஸி நம்பர் என்ன?" என்றான்.

"எம். ஆர்.டி. 1387."

"1387 ஆ. 1378 ஆ?"

"137."

"1387 என்றாயே?"

"78... 8..."

"யுவர் ஆனர், இவன் ஞாபக சக்தி மிகவும் வீக்கானது. அவ்வளவு தான்," என்றான் கணேஷ்.

அடுத்து வந்த ஆர். ஏ. ஷெரூர் தான் திவோலி கார்டனின் மானேஜர் என்றும் சம்பவம் நடந்த தினத்தன்று மாலை 7-30'க்கு தேவதத்தன் கிருஷ்ணன் ஃப்ளாட்டுக்கு உள்ளே செல்வதைப் பார்த்ததையும் சொன்னார்.



கணேஷ், "கிருஷ்ணன் ஃப்ளாட் எங்கேஇருக்கிறது?" என்று ஆரம்பித்தான்.

"ஐந்தாவது மாடியில்."

"ஐந்தாவது மாடியில் மாலை 7-30'க்கு நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?"

"இரண்டாம் ஃப்ளாட்டில் ஏதோ குழாய் அடைத்துக் கொண்டிருந்தது என்று சொன்னார்கள்?"

"யார் சொன்னார்கள்? போலீஸா?"

"இல்லை."

"உங்களுக்குக் குழாய் ரிப்பேர் தெரியுமா?"

"தெரியாது."

"7-30 என்று எப்படி சரியாகச் சொல்கிறீர்கள்? 5-30 ஆக இருக்கலாமல்லவா?"

"கடிகாரத்தைப் பார்த்தேன்."

"எதற்காக?"

"மணி பார்க்க."

"மிஸ்டர் ஷெரூர், குழாய் ரிப்பேருக்கு நீங்கள் ஐந்தாவது மாடிக்குப் போனீர்கள். தேவதத்தன், கிருஷ்ணன் அறைக்குப் போவதைப் பார்த்தீர்கள். உடனே கடியாரத்தைப் பார்த்தீர்கள். கொஞ்சம் இயற்கைக்கு விரோதமான சம்பவங்கள் இல்லையா?"

"நடந்தது அதுதான்."

"இப்பொழுது என்ன மணி? உங்கள் கடியாரத்தைப் பார்த்துச் சொல்லுங்கள்?"

அவர் கையில் கடியாரம் இல்லை.

"மணி பார்த்தீர்களே, கைக்கடியாரத்தைப் பார்த்தீர்களா அல்லது காரிடாரில் எதிரே இருந்த வால் க்ளாக்கைப் பார்த்தீர் களா?"

"வால் க்ளாக்கை."

"காரிடாரில் வால் க்ளாக் கிடையாது. வந்தனம் மிஸ்டர் ஷெரூர். அவ்வளவுதான்."

ஷெரூர் குப்பையாக இறங்கினார்.

அடுத்து வந்த சிலரை அலட்சியமாக விசாரித்தான் கணேஷ். தேவதத்தனுக்கும் கிருஷ்ணனுக்கும் இடையே சம்பவ தினத்தன்று பலத்த வாக்குவாதத்தைக் கேட்டதாகச் சொன்ன பக்கத்து ஃப்ளாட் பார்ஸி ஸ்ரீமதியை அவன் கேட்ட கேள்விகளின் பகுதி:

"மிஸர்ஸ் தஸ்தூர், நீங்கள் சொல்லும் வாக்குவாதம் என்று நடந்தது?"

"கிருஷ்ணன் இறந்த அன்று."

"அன்று என்ன கிழமை?"

"புதன்."

"புதனா?"

"ஆம், புதன்தான் என்று நினைக்கிறேன்."

"நினைக்கிறீர்களா? ஒரு மாத தாமதத்தில் நினைவு படுத்துவதால் ஒருநாள் முன்னே பின்னே இருக்கலாம் அல்லவா?"

"இல்லை. அன்றுதான் நடந்தது."

"நீங்கள் இருப்பது ஃப்ளாட் நம்பர் 501'ல்..."

"502..."



"ஸாரி. 502. பக்கத்து வீட்டில் பேசுவது உங்களுக்குத் தெளிவாகக் கேட்குமா?"

"ஏறக்குறைய."

"உங்களுக்கு தேவதத்தனை முதலிலேயே தெரியுமா?"

"தெரியாது."

"அவர் குரல் உங்களுக்குப் பரிச்சயமானதா?"

"இல்லை."

"அப்படி என்றால் தேவதத்தனுக்கும் கிருஷ்ணனுக்கும் இந்த வாக்குவாதம் நடந்தது என்று எப்படிச் சொல்லுவீர்கள்?"

"அப்படி நான் சொல்லவில்லையே. வாக்குவாதத்தைக் கேட்டேன். பிறகு தேவதத்தன் வெளியே விரைவாகப்..."

"நெவர் மைண்ட். வாக்குவாதத்தைக் கேட்ட சமயம் அதனுடன் வேறு ஏதாவது கேட்டதா உங்களுக்கு?"

"ஒன்றும் கேட்கவில்லை."

"நிச்சயமாக? ரேடியோ, ரிகார்ட் ப்ளேயர்?"

"இல்லை."

"சங்கீதம் எதுவும் கேட்கவில்லை?"

"அதெல்லாம் இல்லை. அவர்கள் பேசினது மட்டும் கேட்டது."

"வந்தனம் மிஸர்ஸ் தஸ்தூர்."

மன்ஸுகானி பக்கத்தில் இருப்பவருடன் கலந்து ஆலோசித்தார். "யுவர் ஆனர். ப்ராஸிக்யூஷன் முடிந்தது" என்றார்.

"யுவர் விட்னஸ்" என்றார் மாஜிஸ்ட்ரேட் கணேஷைப் பார்த்து.

"என் ஒரே ஒரு சாட்சி குற்றம் சாட்டப்பட்டிருக்கும் தேவ தத்தன்" என்றான் கணேஷ்.

மாஜிஸ்ட்ரேட் தேவதத்தனைக் கேட்டார்: "நீங்கள் சாட்சி சொல்ல வேண்டியது அவசியமானதல்ல. உங்களுக்கு உரிமை இருக்கிறது, சாட்சி சொல்வதை மறுக்க. அது உங்களுக்குத் தெரியும் அல்லவா?"

"தெரியும் யுவர் ஆனர்."

"சரி, ப்ரொஸீட்...."

அறிமுகக் கேள்விகள்: பதில் அளிக்கப்பட்டன. சம்பவம் நடந்த தினம் மாலை ஐந்து மணிக்குத் தேவதத்தன். கிருஷ்ண னின் இருக்கைக்குத் தான் சென்றதைச் சொன்னான்.

"சென்றதும் என்ன நடந்தது?"

"அவன் என் தங்கையை நிராகரித்தது பற்றிக் கேட்டேன் சற்றுக் கோபமாகக் கேட்டேன்."

"உங்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டதா?"

"ஏற்பட்டது."

"பிறகு?"

"அவன் செக் கிழித்தான். நான் மிகக் கோபத்துடன் கத்தி விட்டு வெளியே வந்துவிட்டேன்."

"அப்பொழுது என்ன மணி?"

"5-30."

"அப்புறம்?"

"பஸ் பிடித்து 'ட்ரின்காஸ்' ரெஸ்டாரண்டுக்குச் சென்றேன்."



"அங்கே என்ன செய்தீர்கள்?"

"வாத்திய கோஷ்டியில் 'பியானோ' வாசித்தேன். பாடினேன்"

"எத்தனை மணிவரை?"

"ஒன்பது மணிவரை."

"நடுவில் இடத்தைவிட்டு நகர முடியுமா?"

"முடியாது. காண்ட்ராக்ட்படி அந்த மணிகளில் வாசித்தே ஆகவேண்டும். தொடர்ந்து வாசிக்க வேண்டும். தினம் தினம்."

"மிஸ்டர் தேவதத்தன், நீங்கள் கிருஷ்ணனைக் கொன்றீர் களா?"

"இல்லவே இல்லை. நான் வாழ்க்கையை விரும்புபவன். எவ்வளவோ ஆசைகள் உள்ளவன். உயிரை மதிப்பவன்."

"நீங்கள் கேட்கலாம்," என்றான் கணேஷ் மன்ஸூகானி யிடம்.

*சுநந்தாவின் டயரியிலிருந்து...*

*அண்ணா சந்திகர் போகப் போகிறான். மூன்று தினங்கள். மூன்று தினங்கள் நான் தனியாக இருக்கப் போகிறேன். மூன்று தினங்கள்! அண்ணாவிடம் நானும் வருகிறேன் என்று சொல்லிப் பார்த்தேன். கெஞ்சிப் பார்த்தேன். கூடாதாம். அபீஷியல் டூர்! அவனுக்கு எப்படிப் புரிய வைப்பது? இப்பொழுது நான் இருக்கின்ற தன்மை... என் எதிர்க்கும் சக்தி மிகவும் கம்மியாக இருக்கிறதே...*

*நான் எதற்குப் பயப்படுகிறேன்? என்னை மறந்து விடுவான் என்றா? என்மேல் எனக்கு நம்பிக்கை இல்லையா! ஜெய், உன்னைப் பார்க்க வேண்டும் ஒரு தடவை. சரியாகி விடும்.*

## கணேஷ் ஒரு யமன் — 8

மன்ஸுகானி நேராக, "உங்கள் தங்கை பெயர் என்ன?" என்று துவங்கினார்.

"ஹரிணி," என்றான் தேவதத்தன்.

"அவளுக்கும் கிருஷ்ணனுக்கும் நெருக்கம் இருந்தது வாஸ்தவமா?"

"வாஸ்தவம்."

"அந்த நெருக்கம் டாக்டர் வரை கொண்டு சென்றது உண்மையா?"

"பொய்."



"கிருஷ்ணனின் திருமண அழைப்பைப் பார்த்ததும் நீங்கள் ஒரு கடிதம் எழுதினீர்களா?"

"உண்மை."

"அதில் என்ன எழுதினீர்கள்?"

"யுவர் ஆனர், கடிதம் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் போது இது தேவையில்லை" என்றான் கணேஷ்.

"தேவையில்லை" என்றார் மாஜிஸ்டிரேட்.

"அந்தக் கடிதத்தின் ஒரு பகுதியில். 'அப்படி ஏதாவது நிகழ்ந்தால் உன்னைக் கொன்று விடுவேன்; ஆமாம் உன்னைக் கொன்றுவிடுவேன்' என்று அடிக்கோடிட்டிருக்கிறீர்கள். நீங்கள் எழுதியதுதானே?"

"ஆம்."

"உன்னைப் போல் மூன்று ஆட்களைக் கொல்வதற்கு தைரியமும். வெறுப்பும், காரணமும் என்னிடம் இருக்கிறது."- இதுவும் நீங்கள் எழுதினீர்கள்?"

"ஆம்."

"விளையாட்டுக்கு எழுதினீர்களா?"

"இல்லை. எழுதும் நேரத்தில் என் உணர்ச்சிகளை அப்படியே எழுதினேன்."

"உயிரை மதிப்பவனின் வாக்கியங்களா இவை?"

"உயிரை மதிக்கும் ஒரு கோபக்காரனின் வாக்கியம்."

"உங்களுக்குக் கோபம் வருமா?"

"இப்பொழுது வந்திருக்கிறது."

கணேஷ் அவனைக் கடுமையாகப் பார்த்தான். மன்ஸு கானி தொடர்ந்து விரட்டினார். "கோபத்தில் எதுவும் செய்யக் கூடியவர் நீங்கள், இல்லையா?"

"இல்லை."

"கடிதத்தில் காட்டும் கோபம் ஓரளவுக்காவது செயலில் இருக்காதா?"

"எழுதுவது வேறு, செய்வது வேறு. வேறு வேறு சமயங் களில் நிகழ்வது."

"அன்று மாலை 7-30'க்கு நீங்கள் எங்கிருந்தீர்கள்?"

"ஒரு பியானோவின் அருகில்."

"திவோலி கார்டன்ஸ் ஃப்ளாட் 503'ல் இல்லை?"

"இல்லை."

"ஃப்ளாட்டில் கிருஷ்ணனுடன் போராடிவிட்டு அவனைக் கொன்று விட்டு..."

"நீங்கள் கேள்வியை முடிக்க வேண்டாம். என் பதில் 'இல்லை'."

"அன்று நீங்கள் 7-30லிருந்து 'பாண்'டில் இல்லை என் கிறேன்."

"தவறு" என்றான் சாந்தமாக.

"உங்கள் ரெஸ்டாரண்ட் மகாத்மா காந்தி ரோடில் இருக்கிறது."

"ஆம்."

"அங்கிருந்து நீங்கள் டாக்ஸி பிடித்து பெட்டர் ரோடு வரலாம் இல்லையா?"



"வரலாம்."

"வந்து திரும்பலாம். இல்லையா?"

"ஆம்."

"அவ்வளவு தான்" என்றார் மன்ஸுகானி.

கணேஷ் தேவதத்தனை மறு விசாரணை செய்தான்.

"ட்ரின்காஸுக்கும் திவோலி கார்டன்ஸுக்கும் எவ்வளவு தூரம்?"

"ஆறு கிலோ மீட்டர் சுமாராக."

"நீங்கள் வாத்ய கோஷ்டியில் வாசிப்பது தொடர்ந்தா இடைவெளி விட்டா?"

"ஏறக்குறையத் தொடர்ந்துதான்."

"இடைவெளி இருந்தால் எவ்வளவு நேரம் இருக்கும்?"

"முப்பது செகண்ட் இருக்கும்."

"எல்லாப் பாட்டுக்களிலும் நீங்கள் இருக்க வேண்டும்?"

"ஆம். எங்கள் கோஷ்டி ஒரு சிறிய 'காம்போ.' எனக்கு இரட்டை வேலை. பியானோ, பாட்டு."

"ஒரு பாட்டிற்கும் மற்றொரு பாட்டிற்கும் மத்தியில் எழுந்து பெட்டர் ரோடு சென்று திரும்பி வருவது சாத்தியமா?"

"போயிங் 707'ல் போக வேண்டும்" என்றான் தேவ்.

"டிபென்ஸ் முடிந்து விட்டது," என்றான் கணேஷ்.

இடைவேளைக்குப் பிறகு கணேஷ் பேசினான். கொஞ்சம் தான் பேசினான். ப்ராஸிக்யூஷன் சாட்சிகளை ஒவ்வொருவராக அலசினான். "இந்த வழக்கு ஒரு ஜோடனை. அவசரமான ஜோடனை. மந்திரிகள் விஜயத்திற்கு முன் செய்யும் ஜோடனை

போல். எங்கள் கேள்வி, ஏன் தேவதத்தனை மட்டும் தேர்ந் தெடுக்க வேண்டும்? அவருக்குக் கிருஷ்ணனைக் கொல்லும் காரணம் இருந்தால், மற்றவர்களுக்கும் இருக்கவேண்டும். அந் மற்றவர்கள் எல்லாம் எங்கே?

“கிருஷ்ணன் தன் பெயருக்கேற்ப விளையாடியிருக்கிற ஆள். அவர் சினேகிதிகளை அகர வரிசைப் படுத்தலாம் அந்தப் பெண்கள் எல்லாம் யார் யார்? சம்பவத்தினத்தன்று அவர்கள் வந்தார்களா? ஒன்றும் தெரியவில்லை.

“இன்ஸ்பெக்டர் மாதவன் முனைந்து விரல் ரேகைகளும் ஷூவின் அடிச்சுவடுகளும் எடுத்து அழகாக நிரூபித்திரு கிறார். என்ன? தேவதத்தன் கிருஷ்ணன் அறைக்கு வந்திரு கிறார் என்று. இதை நாங்கள் மறுக்கவில்லையே. இன்ஸ்பெக்ட மெர்க்குரியும் சாக் பௌடரும் விரயம் செய்திருக்கவேண்டாம் நாங்களே சொல்கிறோம், தேவதத்தன் அங்கே போனது நிஜம் எப்பொழுது போனார் என்பது தான் கேள்வி. போஸ்ட் மார்ட்ட தரும் இறந்த நேரத்தின் படி அங்கே சென்றார் என்பது பிராஸி யூஷன் வாதம். இதற்கு சாட்சிகள் முக்கியமாக மூன்று பே டாக்ஸி டிரைவர் சரண்தாஸ், ஸ்ரீஷெரூர், ஸ்ரீமதி தஸ்தூர் சரண்தாஸ் சொல்லும் நேரம் சரியே. அவர் 7-30'க்கு ஒ ஆசாமியைக் கொண்டு வந்து சேர்த்ததும் சரி. அது தேவதத்த என்று கூறியதை ஏற்கமுடியாது. இது போலீஸ் பின் குறிப் சாதாரணமாக டாக்ஸி டிரைவர் பிரயாணிகளின் முகத்தை ஞாபகம் வைத்திருப்பது சாத்தியமில்லை. மறு தினம் போலீ நிலையத்தில் தேவதத்தனைக் காட்டி இவர் தானா, இவர்தான என்று திரும்பத் திரும்பக் கேட்டுச் சம்மதிக்க வைக்கும் பழை டெக்னிக்.



“அடுத்தது ஷெரூர், அவர் சொன்ன நேரம், அவர் அந்த டியில் இருந்ததற்கு ஆதாரம் இவைகளை நாம் ஏற்க முடியாது. அவர் சொன்னது முழுவதும் போய்.

“ஸ்ரீமதி தஸ்தூர், தேவதத்தனுக்கும், கிருஷ்ணனுக்கும் இடையில் வாக்குவாதம் நிகழ்ந்ததைக் கேட்டார். அவர் வாக்கு மூலத்தில் நேரம் குறிப்பிடவில்லை. இது பற்றி ப்ரஸிக்யூஷனும் கேட்கவில்லை. அவர் வாக்குமூலத்தில் ஒரு முக்கியமான விஷயம்; வாக்குவாதத்திற்குப் பின்னணியாக சங்கீதம் ஏதும் கேட்கவில்லை என்றார் அவர். வாக்கு வாதத்தை மட்டும் கேட்டிருக்கிறார். அதன் இறுதியில் அவர்கள் நினைக்கிறபடி கிருஷ்ணனை தேவதத்தன் கொன்றிருந்தால் அந்தத் திணறலின் சப்தங்கள் கேட்டிருக்காதா? சண்டையில் நாற்காலிகளை உருட்டி யிருக்க மாட்டார்களா? அதெல்லாம் கேட்டிருக்காதா?

“இன்ஸ்பெக்டர் இறந்தவன் அறையில் ரிகார்ட்பிளேயர் ஓடிக் கொண்டிருந்ததாகச் சொன்னார். அந்தக் கோர சம்பவம் நிகழ்ந்தபோது அந்தக் கருவி ஓடிக் கொண்டிருந்திருக்க வேண்டும். அதிலிருந்து சங்கீதம் வெடித்திருக்க வேண்டும். இது கிருஷ்ணனைக் கொல்ல வந்தவன் அமைத்த சாமர்த்திய மாக, சாகஸமாக இருக்கலாம். திணறல் சப்தம் வெளியே கேட்கா மல் இருக்க ஏற்படுத்திய உத்தியாக இருக்கலாம். ஸ்ரீமதி தஸ்தூர் கேட்டது அவர்கள் சம்பர்ஷணையை மட்டும்தான். சங்கீதம் ஏதும் இல்லை. இதனால் தெரிவது என்ன? சம்பவம் நிகழ்ந்த சமயமும் தேவதத்தன் வந்த சமயமும் வேறு வேறு என்பதே.”

உட்கார்ந்தான் கணேஷ்.

மன்ஸூகானி எழுந்து நிதானமாக பிராஸிக்யூஷன் சாட்சி களைத் தொகுத்துச் சொன்னார். தேவதத்தன் தான் கொன்றான் என்பதை எல்லாச் சாட்சிகளும் நிரூபிக்கின்றன

என்றார். கொல்வதற்கு அவனுக்கு வலுவான காரணம் இருப்பதைச் சொன்னார். டிபென்ஸ் காட்டும் 'அலிபை' அஸ்திவாரமில்லாதது என்றார். "நண்பர் ஃபான்ஸியாகச் சில வாக்கியங்களைச் சொன்னார். திணறல் என்றும் சப்தங்கள் கேட்கவில்லை என்றும், தேவதத்தன் மாதிரி வலுவான உயரமான ஆசாமி, சந்தேகமே படாத ஒரு ஆளை - கிருஷ்ணன் போன்ற சிறிய வடிவமுள்ள ஆளை பின்புறம் அணுகி, கயிற்றாலோ நீளமான துணியினாலோ மிக வலுவாக இறுக்கும் போது அந்த 'ட்ரௌமா' என்கிற ஸ்திதியில் சப்தமே எழாது. மேலும்..."

பதினைந்து நிமிஷம் போலீஸ் எப்படி மிகத் தெளிவாக நிரூபித்திருக்கிறது என்று பிரித்துச் சொன்னார். உட்கார்ந்தார். அவர் மனதில் வரப்போவது தெளிவாகத் தெரிந்தது.

மாஜிஸ்ட்ரேட் புருஷோத்தம் ஹரிதாஸ் தன் கைக் கடியாரத்தைப் பார்த்துவிட்டு; சரியாக 3-45க்கு மறுபடி கூடுவோம் என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

தேவதத்தனை உள்ளே அழைத்துச் செல்ல, காரிடாரில் நின்று கொண்டிருந்த ஹரிணி, கணேஷை நோக்கிப் பார்த்தாள்.

"கணேஷ், யூ ஆர் க்ரேட்!"

"இரு. இரு. தீர்ப்பு வரட்டும்," என்றான்.

சிகரெட்டைப் பிடித்த அவன் விரல்கள் நடுங்கிக் கொண்டிருந்தன.

மணி 3-45 ஆனதும் மாஜிஸ்ட்ரேட் புருஷோத்தம் ஹரிதாஸ் திரும்ப வந்தார்; உட்கார்ந்தார்.

மாஜிஸ்ட்ரேட் காகிதங்களை அடுக்கிக் கொண்டார், மெதுவாகக் கண்ணாடியைக் கழற்றினார். துடைத்தார். தெளிவாகச் சொன்னார்:



"ப்ராஸிக்யூஷனின் சாட்சிகளையும் டிபென்ஸின் சாட்சியையும் இரண்டு தரப்பு வாதங்களையும் கேட்ட பிறகு இந்த வழக்கில் தேவதத்தன்...

.....தேவதத்தன் இந்தக் குற்றத்தைச் செய்தார் என்பதற்கு ஆதாரமில்லை."

"ஹுர்ரே" என்றான் தேவ். அவனைக் கணேஷும் மாஜிஸ்ட்ரேட்டும் கடுமையாகப் பார்த்தார்கள். தூரத்தில் ஹரிணி கைக்குட்டையால் கண்களை ஒற்றிக் கொண்டு சிரித்தாள்.

மாஜிஸ்ட்ரேட் தொடர்ந்தார்: "ப்ராஸிக்யூஷனின் நிரூபணம் தவறானது. அவசரமானது. போதாது. தேவதத்தனை செஷன்ஸுக்கு அனுப்புவதற்கோ அல்லது என் எல்லைக்குள் கூடத் தண்டிப்பதற்கோ எதுவும் ஆதாரமில்லை. தேவதத்தனை விடுதலை செய்யுமாறு பணிக்கிறேன்."

மன்ஸூகானி, "ரொம்ப வீக் ப்ராஸிக்யூஷன்," என்று காகிதங்களை எறிந்துவிட்டுப் புறப்பட்டார்.

மூன்று காப்பிக் கோப்பைகளுக்கு எதிரே ஹரிணி, தேவ், கணேஷ் மூவரும் உட்கார்ந்திருந்தார்கள்.

"கணேஷ், கணேஷ்! மிகப் பிரமாதம். எக்ஸலண்ட், டெரிஃபிக்..."

"கொஞ்சம் அடைச் சொற்கள் பாக்கி வைத்திரு."

"உனக்கு ஆயிரம் தடவை தாங்க்ஸ் சொல்ல வேண்டும். ஆரம்பிக்கட்டுமா?"

கணேஷ், "நான் அன்றிரவு அந்தக் கடிதங்களுக்காகச் சென்று மாட்டிக் கொண்டது போலீசாரை அவசரப்படுத்தி விட்டது. தற்செயலாகத் தவறான தடயங்களில் அவர்களைச்

செலுத்தி விட்டது. இருந்தாலும் ரொம்ப நெருக்கமான க்ஷவரம்!'' என்றான்.

“ஆமாம், நான்தான் இல்லை என்று தீர்ந்து விட்டதே. யார் செய்தார்கள் அந்தக் குற்றத்தை?''

வெய்ட்டர் பில்லுடன் வந்தார்.

“இவனாகக்கூட இருக்கலாம்,'' என்றான் கணேஷ். “அது போலீஸின் தலைவலி. இப்பொழுது என் கவனம் வேறு இடத்தில் உள்ளது,'' என்று ஹரிணியைப் பார்த்து, “என் அறைக்கு வந்து என் பென்சில் சித்திரங்களைப் பார்க்கிறாயா?'' என்று கேட்டான்.

“சரி,'' என்றாள். அந்த ‘சரி'யில் மூன்று நான்கு ‘சரி'கள் கலந்திருந்தன.

“இப்பொழுது கேஸ் என்ன ஆகும்?''

“உனக்கேன் கவலை? இன்னும் சில தினங்கள் பார்ப்பார்கள். பிறகு ஃபைலை மூடிவிடுவார்கள். அல்லது கொஞ்சம் மேலே போகும் வெறொரு பெரிய போலீஸ் ஆபீசர் ஒருவர் பார்ப்பார் ஏதாவது விட்டுப்போன புதிய பாதைகள் தெரிந்தால் அவைகளைச் சார்ந்து கதை தொடரும்'' என்றான் கணேஷ்.

*சுநந்தாவின் டயரியிலிருந்து...*

என்னிடம் இரண்டு லட்சம் இருந்தால் என்ன செய்வேன்? எனக்குச் செலவழிக்கத் தெரியாதே? அண்ணாவின் முதல் நாவலை அச்சாக்குவேன், பத்தாயிரம் ரூபாய் செலவழியுமா?

அச்சாக்கி, எல்லாப் பிரதியையும் நானே ரகசியமாக வாங்க வேண்டும். அவன் எழுதுவது யாருக்கும் புரியாது. (“உங்க மர மண்டைகளுக்கு எல்லாம் புரிய 500 வருஷம் ஆகும்.'')

## ராமநாதன் — 9

ஸூபரின்டென்டெண்ட் (விஸ்வநாதன்) ராமநாதன் தனக்கு அணிவிக்கப்பட்ட ரோஜா மாலையின் இதழ்களை ஒழுங்காகப் பிய்த்துக் கொண்டிருந்தார். மேஜைமேல் வைத்திருந்த நிகழ்ச்சி நிரலில் ‘வந்தன'த்திற்குக் காத்திருந்தார். பேசியவர்கள் மகத்தான பொய்களைச் சிங்காரித்து அவரைப் புகழ்ந்து கொண்டிருந்தார்கள். உட்கார்ந்து கேட்டுக் கேட்டு முதுகு வலித்துக் கொண்டிருந்தது. அந்தப் புகழ்ச்சியெல்லாம் பதினைந்து நாட்களில் ரிடையராகப் போகும் தனக்கு அவர்கள் தரும் சலுகை என்பது ராமநாதனுக்குத் தெரியும். உதட்டு வார்த்தைகள்... ஒரு மாதம் கழித்து அவர்களையே கேடடால், “ராமநாதன்? தட் ஓல்ட் கூட்!'' என்பார்கள்!

பேச்சின் நடுவில் யோசிக்க முடிந்தது அவருக்கு. இருபத்தொன்பது வருஷம்; பம்பாய் போலீஸில் வெள்ளைக்காரன் சமயத்தில், கீழே ஆரம்பித்துப் படியேறிப் படியேறி......

"ஐ.பி.எஸ் குறுக்கு வழி அல்ல என் வழி" என்று ராம நாதன் எண்ணிக் கொண்டார். இருபத்தொன்பது! சம்பவம் நிறைந்த இருபத்தொன்பது வருஷங்கள்! எவ்வளவு புயல் - அமைதி நிறைந்த வருடங்கள்! மேல் நோக்கிச் சுட்ட துப்பாக்கிகளும் கண்ணீர்ப் புகைப் பிரயோகங்களும், டாக்ஸிகாலஜி, மெடிகல் ஜுரிஸ் புருடன்ஸ், நின்று நின்று அலுத்த ஸெஷன்ஸ் கோர்ட்கள் அந்த மறக்க முடியாத தற்கொலை, எட்டாவது மாடியிலிருந்து பம்பாயின் மாலை ஐந்து மணி அவசரத்தின் நட்ட நடுவில் தெருவில் விழுந்த பெண், அவள் உதட்டோரத்தில் தெரிந்த ரத்த முத்து, மண்ணெண்ணெய் விளக்கின் வெளிச்சத்தில் குடிசை ரசாயனம் நடத்தித் தயாரித்துக் கார் ட்யூப்களில் அனுப்பப்பட்ட கள்ளச் சாராயம்.. கடற்கரையில் கிடந்த ஆயிரம் கைக்கடியாரங் கள், ஜட்ஜ்கள், அவர்கள் உச்சரித்த மரண தண்டனைகள். அடி உதை, செருப்பு எறிதல்... இருபத்தொன்பது வருடங்கள்.

இவை எல்லாவற்றிலிருந்தும் எனக்கு விடுதலை இதோ "ராமநாதனின் நேர்மை, கண்ணியம், கட்டுப்பாடு..."

பா...! பேசுகிற பாஸ்கரனுக்குப் பிரமோஷன் கிடைக்கப் போகிற சந்தோஷத்தில் அடைமொழிச் சொற்களை வாரி விடுகிறான்... பாஸ்கரன் ஒரு ரசிக்கக் கூடிய ராஸ்கல்.

எல்லாம் ஓய்ந்த பிறகு காரின் கதவைச் சாத்தும்போது திடீ ரென்று ஞாபகம் வந்தது. டெபுடியைக் கேட்டார்: "என்னய்யா அது அந்த பெட்டர் ரோடு கேஸ்? ஏன் அப்படி ஆகிவிட்டது?"

"ஸார், அது கொஞ்சம் அவசர அரெஸ்ட் ஆகிவிட்டது ப்ரிலிமினரியிலேயே ஒதுக்கி விட்டார்கள்." என்றார் பாஸ்கரன்.

"இன்வெஸ்டிகேஷன் செய்தது யார்?"

"மாதவன் - இன்ஸ்பெக்டர். நானும் மேற்பார்வை பார்த்து..."

"மாதவன் புத்திசாலி ஆயிற்றே?"



"அவசரப்பட்டு விட்டார்."

"அவசரப்பட்டு விட்டோம் என்று சொல்லுங்கள்."

பாஸ்கரன் சிரித்தார்.

ராமநாதன் மேலும், "அவசரப்பட்டுவிட்டது தெரியும். ஏன் அப்படி ஆகிவிட்டது?" என்றார்.

"ஸார், இதில் குற்றம்சாட்டப்பட்டவர் மேல் தெளிவாக இருந்தன சாட்சியங்கள். நாங்கள் ரொம்ப ஷ்யூராகத்தான் இருந்தோம். அங்கங்கே ஓட்டை விழுந்து விட்டது கடைசியில். போலீஸ் கேஸ் சரியாகக் காட்டப்படவில்லை ஹியரிங்கில்."

"நான் முதலிலிருந்தே இதைக் கவனித்திருக்க வேண்டும். அந்த ஃபாக்டரி மறியலில் மாட்டிக் கொண்டு விட்டேன்.. ஒன்று செய்யுங்களேன். அந்தக் கேஸின் எல்லாக் காகிதங்களும் என்னிடம் இருக்கின்றன. நான் ராத்திரி பார்க்கிறேன் அதை. நாளைக் காலையில் அந்த மாதவனை என்னை வந்து பார்க்கச் சொல்லுங்கள். ரைட்?"

"ரைட் ஸார். குட் நைட்."

"குட் நைட்."

நியான்களின் நடுவே சிவப்பு விளக்கில் காத்துக் கொண்டிருந்தபோது: 'பதினைந்து நாட்களில் ரிடையராகப் போகிறேன்! கடைசியில் என் மேற்பார்வையில் ஒரு முடிவடையாத கேஸ்! என்ன செய்தான் என்று தெரியாத கொலை! கொலை, உணர்ச்சிவசப்பட்ட குற்றம். போலீஸுக்கு அவ்வளவு முக்கியமான குற்றமல்ல... இருந்தும்... என் மனத்திற்குத் திருப்தி வேண்டுமே. பார்க்கலாம்.. பச்சை... புறப்படலாம்...'

வீட்டில் ரோகிணி இன்னும் படித்துக் கொண்டிருந்தாள்.

"அப்பா, எப்படி நடந்தது, பார்ட்டி?"

“வழக்கம் போல், நான் தான் ஹீரோ. அவர்கள் சொன்னபடி பார்த்தால், மஹாத்மா காந்தியும் ஆல்பர்ட் ஷ்வைட்ஸரும் எனக்கு முன் ஒப்பிட்டால் கெட்டவர்கள்! சத்தியமான பொய்கள்.”

“அப்பா, நீங்கள் ஒரு ஸினிக்.”

“நான் ஒரு போலீஸ்காரன். இருபத்தொன்பது வருடங்களாகப் பொய்யுடன் பரிச்சயம் உள்ளவன். மை டியர் கேர்ள், நீ தூங்க வேண்டும். போய்ப் படுத்துக்கொள்.”

“நீங்கள்?”

“நான் ஒரு ஃபைல் பார்க்கவேண்டும்.”

“அந்த கிருஷ்ணன் கொலை பற்றித்தானே?”

“உனக்கு எப்படித் தெரியும்?”

“இன்று பிற்பகல் எல்லாவற்றையும் படித்து விட்டேன்.”

“உனக்கு வேறு வேலை இல்லையா?”

“பொழுது போகவில்லை...”

ராமநாதனுக்கு இறந்து போன மனைவியின் ஞாபகம் வந்தது.

ரோகிணி கூறினாள்: “தப்பாக எண்ணிக் கொள்ளாதீர்கள் அப்பா. போலீஸ் இந்தக் கேஸில் ரொம்ப அவசரப்பட்டுக் குழப்பியிருக்கிறார்கள்.”

“அப்படியா?”

“குற்றம் செய்தவன் அந்த தேவ் என்கிற ஆசாமியாக இருக்கவே முடியாது, வேறு யாரோ ஒருவர் செய்த காரியம்.”

“எக்ஸலெண்ட்! அந்த வேறு யாரோ ஒருவர், யார் சொல் என் அருமை வாரிசுப் பெண்ணே! உனக்கு ஒரு கோகோ கோலா வாங்கித் தருகிறேன்.”



“அதைத்தான் நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும்.”

“நான் ரிடையராக வேண்டியவன். என் பென்ஷன் பேப்பர்களைக் கவனிக்க வேண்டும். உனக்குக் கல்யாணம் செய்ய வேண்டும். சிணுங்காதே... இன்னும் பணம் சம்பாதிக்க வேண்டும். இவ்வளவு வருடங்களுக்குப் பிறகு தெற்கே போகப் பயமாக இருக்கிறது. எப்படிச் சும்மா இருக்கப் போகிறேன் என்று பயமாக இருக்கிறது . இதன் நடுவில் இந்தக் கேஸை வேறு தீர்த்தாக வேண்டும்.”

“தீர்த்தே ஆக வேண்டுமா?”

“அப்படி இல்லை... இருந்தும் இந்தக் கேஸ் எனக்கு ஒரு சவாலாகப் படுகிறது. ‘இது உன் ஆபீஸ் வாழ்க்கைக்கு ஓர் அழகான கடைசி கடைசிப் பிரச்சனை. கடைசிச் சவால். இன்னும் பதினைந்து நாள் இருக்கிறது. அடியைப் பிடித்துத் துவங்கு. கண்டுபிடி’ என்று எனக்கு ஏற்பட்ட பரீட்சை இது.”

“பாஸ் பண்ணி விடுங்கள் அப்பா. கிருஷ்ணன் என்ற பெயர் எனக்குப் பிடித்த பெயர். அந்தப் பெயருள்ள ஆசாமி சாகக் கூடாது... செத்தால் சாக அடித்தவர்கள் தண்டனை பெற வேண்டும்...”

“யாருமே சாகக் கூடாதுதான் இப்படி. ஆனால் இந்த நிமிஷம் இந்த இந்தியா என்ற பாரதத்தில் எத்தனை பேர் கொலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் தெரியுமா?”

“தெரியாது.”

“எனக்கும் தெரியாது. போய்த் தூங்கு. நாளைக்குக் காலை ஆறரை மணிக்கே எழுந்திருக்க வேண்டுமல்லவா?”

அவள் சிரிப்பு கதவுக்கு வெளியில் சென்றதும் ராமநாதன் மேஜ விளக்கைப் பொருத்திக் கொண்டு, சில காகிதங்களை

அடுக்கிக் கொண்டு, ஒரு பென்சிலைத் தீட்டிக் கொண்டு கால
சென்ற கிருஷ்ணனின் கடைசி நாட்களைப் பற்றிய டை
எழுத்துக்களில் ஆழ்ந்தார்.

முதலில் மேலாகப் படித்தார். பிறகு ஆழமாகப் படித்தா
காகிதத்தில் 'ஓம்'போட்டுக் கொண்டார். எழுதினார்.

அவர் எழுதிய சில தொடர்பில்லாத வாக்கியங்கள்
புரிகிறதா பாருங்கள்.

டாக்ஸி டிரைவர்?

சரண்தாஸ் சொல்வது உண்மை.

அவன் எங்கிருந்து வந்தான்? மஹாத்மா காந்தி ரோட்

அங்கே போ. அந்த இடத்தை ஒரு தடவை பார்.

7-30'லிருந்து 8-30.

வாட் எபவுட் ஹரிணி? அவளைப் பார்.

டெலிபோன் எண்கள்?

டயரி?

கடந்த மூன்று நான்கு வருடங்கள் இந்தக் கிருஷ்ண
எங்கெங்கே?

ஃபுட் ப்ரிண்ட் ரொம்ப சாதாரண சமாசாரம்.

ஜாஸ் ரிகார்ட்கள் - கிருஷ்ணனின் நண்பர்களில்
யாருக்கு அந்த சங்கீதத்தில் ஈடுபாடு.

X கொலை செய்த எக்ஸ் பற்றி எனக்கு என்ன எ
தெரிகிறது?

1. பலசாலி. ஹையாய்ட் எலும்பு உடைந்திருக்கிறது அ
மிக மிக மிக வெறுப்புத் தரும் பலம்.



ஏன்?

மூன்று காரணங்கள் எட்ஸெட்ரா.

2. நிச்சயம் தெரிந்தவன். விஸ்கி. ரிகார்ட் ப்ளேயர். உள்ளே கொதித்துக் கொண்டிருந்த காப்பி.

3. ஆண், கால் பூட்ஸ் பிரதி? டாக்ஸி டிரைவர் கொண்டு விட்டவன்?

4. முன்பே தீர்மானித்து விட்டான்.

மிஸ்டர் X! நான் வருகிறேன்...

தூக்கம் வருகிறது...

**கா**லை மாதவன் வந்தார். ஸல்யூட் அடித்தார். நாற்காலியில் பட்டும் படாமலும் மரியாதையாக உட்கார்ந்தார்.

ராமநாதன் சொன்னார்: "நான் இந்தக் கேஸின் ஃபைலை முழுவதும் நேற்றுப் பார்த்தேன். சில முக்கியமான விஷயங் களை நீங்கள் தவறவிட்டிருக்கிறீர்கள்..."

"அப்படி நான் நினைக்கவில்லை, ஸார்."

"நான் சொன்னதும் உங்கள் அபிப்பிராயம் மாறும். கவனி யுங்கள். உங்கள் பர்ஸ்ட் இன்பர்மேஷன் ரிப்போர்ட். கோர்ட்டில் விசாரணையின் ரிப்போர்ட் எல்லாவற்றையும் பார்த்தேன். அந்த வக்கீல் - அவன் பெயர் என்ன?"

"கணேஷ் ஸார். டிபென்ஸ் தானே?"

"அவன் சில முக்கியமான விஷயங்களை மிக அலட்சிய மாக எடுத்துக் காட்டியிருக்கிறான். தேவ் என்பவனைப் பொறுத்த மட்டில் 'டைம் எலிமெண்ட்' தப்பு. இது உங்களுக்கு ஆரம்பத்தி லேயே தெரிந்திருக்கவேண்டும்..."

"ஸார்... நான் காரணம் சொல்லலாமா?"

"வேண்டாம். நடந்ததற்குப்பின் இப்பொழுது நாம் செய்யப் போவதுதான் எனக்கு முக்கியம். சால்ஜாப்புகளைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. எனக்கு இன்னும் பதினைந்து நாட்கள் இருக்கின்றன ரிடையர் ஆக. நான் ஒரு ஊறின பழைய ஆசாமி. இந்த ஃபைலை ஒரு கேள்விக் குறியுடன் முடிக்க எனக்கு விருப்பமில்லை. அந்தக் குற்றத்தைச் செய்தவன் யார் என்று நான் நிச்சயம் கண்டு பிடிக்கப் போகிறேன். என் முறை வேறு, அவசரமில்லாத அணுகல் ஸைகாலஜிபடி. கொஞ்சம் காப்பி சாப்பிட்டு விட்டுச் சிந்திக்கும் முறை. இரண்டும் இரண்டும் நாலாகச் சேரவில்லை என்றால் ஏன் என்று கேட்கும் முறை புரிந்ததா?"

"புரிந்தது, ஸார்."

"ரைட். நான் சில குறிப்புகள் எடுத்திருக்கிறேன். முதலில் டாக்ஸி டிரைவர் சரண்தாஸ். அவனை விசாரித்தீர்கள் அல்லவா?"

"ஆம்."

"அன்றைய தினம், சம்பவம் நடந்த சமயம், அந்த மாளிகை யில் மற்ற ஃப்ளாட் சொந்தக்காரர்களைப் பார்க்க யாரும் வந்தார் களா என்று விசாரித்தீர்களா?"

"விசாரித்தேன். ஒருவரும் வரவில்லை."

"அதைக் கோர்ட்டில் ஏன் சொல்லவில்லை? சொல்லாதது தப்பு. போகட்டும். அதிலிருந்து நமக்குத் தெரிவது டாக்ஸி டிரை வர் கொண்டு வந்த ஆசாமி கிருஷ்ணனைப் பார்க்கத்தான் வந்திருப்பான் என்பது..."

"அதிலிருந்து..."



"குறுக்கே பேசாதீர்கள். டாக்ஸி டிரைவர் இயல்பாக வந்த சாட்சி இல்லையா?"

"ஆம்."

"அவனை வைத்துக்கொண்டு தேவதத்தனைச் சுட்டிக் காட்டச் சொன்னது மற்றொரு தப்பு..."

"சார், நம்ம சட்ட அமைப்பின்படி கோர்ட்டில் அப்படி ஆணித்தரமாக நிரூபிக்க வேண்டியிருக்கிறதே?"

"என்னிடம் சட்ட அமைப்புப் பற்றிப் பேசவேண்டாம் தெரியாதவன். உங்கள் ரிப்போர்ட் அருமையான ரிப்போர்ட், ஆனால் ஒரு விஷயம் அதில் இல்லை. கிருஷ்ணனிடம் டெலிபோன் புத்தகம் இருந்ததா?"

"......................."

"டெலிபோன் புத்தகம் என்றால், அவனுக்குத் தெரிந்தவர் களின் நம்பரை எல்லாம் குறித்து வைத்துக்கொள்ளும் தனி டயரி மாதிரி அப்படி எதாவது இருந்ததா?"

"இருந்தது. அந்த எண்களை எல்லாம் விசாரித்து... என் பின் குறிப்பில் 'லிஸ்ட்' தந்திருக்கிறேனே."

"எப்படி விசாரித்தீர்கள்?"

"ஒவ்வொரு எண்ணுக்கும் உரியவரைப் போய்ப் பார்த்து அவர்களை ஒவ்வொருவராக 'கிளியர்' செய்தேன்."

"எல்லா எண்களுக்கும் உரியவர்களை விசாரித்து க்ளியர் செய்தீர்களா?"

"ஒரு எண்ணைத் தவிர."

"என்ன அது?"

"அந்தக் குறிப்புப் புத்தகத்தில் பதினெட்டு எண்கள் இருந்தன. பதினெட்டில் பதினேழு எண்கள் நபர்களின் எண்கள்.

கிருஷ்ணனின் சிநேகிதர்கள், சிநேகிதிகள் இப்படி எல்லோருக்கும் 'அலிபி' இருந்தது தேவதத்தனைத் தவிர..."

"அந்தப் பதினெட்டாவது எண் என்ன?"

"அது ஒரு தொழிற்சாலையின் எண். குர்லா இண்டஸ்ட்ரியல் ஏரியாவில் இருக்கிறது. அதையும் பின் குறிப்பில் கொடுத்திருக்கிறேன்... 551583."

"அங்கே போய் விசாரித்தீர்களா?"

"விசாரித்தேன். அது ஒரு சிறிய தொழிற்சாலை. ஒரு குஜராத்தி நடத்துவது. ஜன்னலுக்கு 'க்ரில்' முதலியவைகள் தயாரிக்கிறார்கள். கிருஷ்ணனுக்கும் அதற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்பது விசாரித்ததில் தெரிந்தது... தப்பான எண்ணைக் குறித்துக் கொண்டிருப்பான் என்று முடிவுக்கு வந்தேன்."

"அந்த முடிவு தப்பு. அந்த டெலிபோன் எண்ணில் தான் அடங்கியிருக்கிறது ரகசியம்!"

"எப்படிச் சொல்கிறீர்கள்?"

"எனக்குத் தோன்றுகிறது. வாருங்கள் போகலாம்."

"எங்கே?"

"அந்தத் தொழிற்சாலைக்குத்தான். பெயர் என்ன டி.ஜே. இன்ஜினியரிங் வொர்க்ஸ். அதுதானே?"

"அதுதான்."

"போகலாம்."

குர்லா. ஜீப்பில் முன்னாலேயே இறங்கிக் கொண்டார் ராமநாதன். அவர் போலீஸ் உடையில் இல்லை.

"இந்தத் தெருதானே?" என்றார்.



"ஆம்."

"நான் மட்டும் தனியாகப் போய் விசாரிக்கிறேன். நீங்கள் இங்கேயே இருங்கள். பதினைந்து நிமிடம் கழித்து அங்கே வரவும்.. ரைட்?"

மாடுகள். சைக்கிள்கள்... சாப்பாட்டுக் கூடையின் நீட்டல்கள். வர்ணத்துணிகள் அசைந்தாடும் கடைகள். சாலையில் பரவியிருந்த வியர்வை. வெய்யிலும் மராத்தி பாஷையில் மத்திமமான பேச்சுகளும்... ஊடே மெதுவாக நடந்து துணிக்கடைகளைத் தாண்டி, கயிறு, ஆணிகள் விற்கும் கடைகளைத் தாண்டி, சினிமாத் தியேட்டரைத் தாண்டித் திரும்பிச் சிறிய சிறிய இன்ஜினியரிங் கார்ப்பரேஷன்களுக்கு நடுவில் அந்த டி.ஜே. வொர்க்ஸைக் கண்டார்.

நின்றார்.

பார்த்தார். நடுப்பகல். சிறிய இடம். செங்குத்தான ட்ரில்லில் துளை போட்டுக் கொண்டிருந்த ஓர் அழுக்குப் பனியன் ஆசாமி அவரை நிமிர்ந்து பார்த்து விட்டுத் தன் மிஷினைக் கவனித்தான்.

இரும்பு அறுக்கும் மற்றொரு மெஷின் எப்பொழுதோ ஆரம்பித்த வேலையை ஆயிரம் சைக்கிள் க்ரீச்சில் அறுத்துக் கொண்டிருந்தது. பழைய 'லேத்'கள் இரண்டு தெரிந்தன. லக்ஷ்மி படமும், ஃபாக்டரி சட்டத்தின்படி சர்ட்டிபிகேட்டும் சுவரில் தொங்கிக் கொண்டிருந்தன. இடது ஓரம் ஆஷாபரேக் காற்றில் ஆடிக் கொண்டிருந்தாள். மூலையில் ஒரு சிறிய கண்ணாடி தடுத்த அறைக்குள் மானேஜர் தெரிந்தார். டெலிபோனில் பேசிக் கொண்டிருந்தார். சிறிய தொழிற்சாலை.

தட்டிவிட்டு அறைக்குள் நுழைந்தார் ராமநாதன்.

"குட் ஆஃப்டர் நூன்."

"உட்காருங்கள்," என்று தலையசைத்துவிட்டு, தொலைவிலிருந்த தேசாயுடன் குஜராத்தியில் பணம் பேசிவிட்டு வைத்துவிட்டு, "நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்.

"இரும்பில் ஒரு ஃப்ரேம் செய்யவேண்டும்."

"ஒரு ஃப்ரேம்?"

"ஆம்."

"மன்னிக்கவும். நாங்கள் சில்லறை வேலைகள் எடுத்துக் கொள்வதில்லை."

"வெல்டிங் செட் இருக்கிறதே?"

"அது எங்கள் வழக்கமான வேலைகளுக்கு மட்டும். இப்படியே இந்த ரோடிலேயே இன்னும் ஒரு ஃபர்லாங் போனீர்களானால்..."

"கிருஷ்ணன் தான் என்னை அனுப்பி வைத்தார் இங்கே" என்றார் ராமநாதன் மிகக் கவனமாக மானேஜரைப் பார்த்துக் கொண்டே.

"யார்?"

"கிருஷ்ணன். ஜி.என். கிருஷ்ணன். பெட்டர் ரோடு திவோலி கார்டன்ஸ்..."

"மன்னிக்கவும். எனக்கு ஒரு கிருஷ்ணனையும் தெரியாது"

"நீங்கள் தானே மானேஜர்?"

"ஆம்."

"கிருஷ்ணனை உங்களுக்குத் தெரியாதா?"

"தெரியாது."



"உங்கள் தொழிற்சாலையில் எத்தனை பேர் வேலை செய்கிறார்கள்"

"பத்துப்பேர்... நீங்கள் போலீஸா?"

"ஆம்."

"பதினைந்து நாட்களுக்கு முன்தான் ஒரு இன்ஸ்பெக்டர் வந்து இதே கிருஷ்ணனைப் பற்றி விசாரித்தார். ஒன்றும் தெரியாது என்றோம். எல்லாத் தொழிலாளிகளையும் விசாரித்தார். எங்கேயோ ஏதோ தப்பு இருக்கவேண்டும். எனக்கு வயது இருபத்தெட்டு. எனக்கு இது வரை தெரிந்த ஒரே கிருஷ்ணன் மஹாபாரதத்தைச் சேர்ந்தவர். நாங்கள் ஒரு நம்பகமான கம்பெனி. 'டி.ஜி.எஸ் & டிரேட் காண்ட்ராக்'டில் இருக்கிறோம். வருமானவரி ஒழுங்காகக் கொடுக்கிறோம். எங்களுக்கு நீங்கள் குறிப்பிடுபவரைத் தெரியாது. தெரியாது... எங்கேயோ ஒரு கன்ஃப்யூஷன் ஏற்பட்டிருக்கிறது..."

"உங்கள் பெயர்?"

"படேல்."

"மிஸ்டர் படேல், போலீஸிடமிருந்து உண்மையை மறைக்க முயல்வது குற்றம் என்பது தெரியுமா உங்களுக்கு?"

"எனக்குக் கிருஷ்ணனைத் தெரியாது..."

"கிருஷ்ணன் கொலை செய்யப்பட்டு இறந்திருக்கிறார்."

"அவர் ஆத்மா சாந்தி அடைவதாக! வேறு நான் என்ன சொல்ல முடியும்?"

*சுநந்தாவின் டயரியிலிருந்து...*

ஜே - தி கிரேட்!

***கேள்வி*** *: சுநந்தா ஏன் ஓய் என்பவரைப் பார்க்க மறுக்கிறாள்?*

***பதில்*** *: கிருஷ்ணன்*

***கேள்வி*** *: சுநந்தா ஏன் மிக சந்தோஷமாக இருக்கிறாள்?*

***பதில்*** *: கிருஷ்ணன்.*

## கொன்றதுக்குக் காரணம் — 10

**மா**தவன் சாலையில் எதிரே வந்துகொண்டிருந்தார். "ச... ஏதாவது தெரிந்ததா?" என்றார். இல்லை என்ற பதிலை எதிர்... பார்த்துக் கொண்டு.

ராமநாதன், "ம்ஹூம்! அந்த மானேஜர் பொய்சொல்லவில்லை. ஆனால் எனக்குப் படுகிறது. அந்த டெலிபோனில் தான் இருக்கிறது விடை. நீங்கள் போன தடவை இங்கு வந்த போது வேலை செய்பவர்கள் எல்லோரையும் விசாரித்தீர்களா?"

"விசாரித்தேன் சார். அவர்கள் பெரும்பாலும் மராத்தியர்கள் சார். கிருஷ்ணனுக்கும் இந்தத் தொழிற்சாலைக்கும் ஒரு தொடர்பும் எனக்குத் தெரியவில்லை."

"ஆனால் இந்தத் தொழிற்சாலையின் டெலிபோன் நம்பர் கிருஷ்ணனின் புத்தகத்தில் இருக்கிறதே?"

"அதனால் தான் தப்பு நம்பர் என்று எனக்குப்பட்டது."



"மாதவன், அது தப்பு நம்பர் இல்லை. அந்த எண்ணுக்கு முன் கிருஷ்ணன் என்ன எழுதியிருந்தான்?"

"ஜே என்கிற ஆங்கில எழுத்து மட்டும் இருந்தது."

"அல்லவா? யார் அந்த ஜே அல்லது எது இந்த ஜே?"

"ஸார்ச் மி ஸார்!"

"டெலிபோன் எண்கள் அடங்கிய நோட்டு பழைய நோட்டு. அதில் குறித்திருந்த எண்கள் எல்லாம் அடிக்கடி டயல் செய்யப்பட்ட எண்கள். அவைகளில் திருத்தங்களும் இருந்தன அல்லவா?"

"ம்...! இருந்தன..."

"அந்த எண்களில் ஒரு எண் மட்டும் தப்பாக இருந்தால் எப்பொழுதாவது அதைத் திருத்தியிருக்க மாட்டானா?"

"எனவே...?"

"நம்பர் தப்பில்லை. இந்தத் தொழிற்சாலையைக் கண்காணிக்க லோகல் போலீஸ் ஸ்டேஷனில் சொல்லுங்கள். சாராயம் காய்ச்சுகிறானா அல்லது டிரான்ஸிஸ்டர் விற்கிறானா. இப்படி. ஒரு வாரம் பார்க்கட்டும். என்ன?"

"சரி ஸார்."

"நான் சாப்பிட வீட்டுக்குப் போகிறேன். மறுபடி பிற்பகல் ஆபீசுக்கு வாருங்கள். வேட்டையைத் தொடரலாம்..."

"கண்களைத் திரையிட்ட வேட்டை ஸார்."

"திரை விலகும். அல்லது திடீரென்று அறுந்து விழுந்து விடும். கவலைப்படாதீர்கள்."

"யார் இந்தக் கிருஷ்ணன்?" என்றார் பிற்பகலில் மாதவனிடம்.

"கிருஷ்ணனைப் பற்றி என் ரிப்போர்ட்டில் அப்பெண்டிக்ஸாகக் கொடுத்திருக்கிறேன். படிக்கட்டுமா?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"வேண்டாம் அதைப் பார்த்து என் கேள்விகளுக்கு மட்டும் பதில் சொல்லுங்கள் ரைட்?"

'எத்தனை தடவை ரைட் சொல்லுகிறார் என்று எண்ண வேண்டும்' என்று எண்ணினார் மாதவன்.

"முழுப் பெயர் என்ன?"

"ஜி. என். கிருஷ்ணன்."

"ஊர்?"

"மதறாஸி."

"மதறாஸி என்பது ஒரு அசிங்கமான வார்த்தை. விந்திய மலைக்குத் தெற்கே நிறையப் பகுதிகள் இருக்கின்றன மாதவன் நாங்கள் எல்லோரும் மதறாஸைச் சேர்ந்தவர்கள் அல்ல. என் ஊர் பெயர் தெரியுமா? தேரழுந்தூர். இதை உச்சரியுங்கள். ஐந்து ரூபாய் தருகிறேன்."

"நான் தோற்றுவிடுவேன் ஸார்."

"கிருஷ்ணன் எந்த ஊர்?"

"கேரளாவைச் சேர்ந்தவர்; திரு... திருவெள்ளா என்கிற ஊர்!"

"படிப்பு?"

"கெமிகல் இன்ஜினியரிங் பெட்ரோலியம் டெக்னாலஜி கான்பூர் இன்டியன் இன்ஸ்டிட்யூட்டில் எம். டெக் வாங்கியவர் இங்கே ஒரு பிரைவேட் கம்பெனியில் மானேஜ்மெண்ட் கா... இருக்கிறார்... இருந்தார்."



"கல்யாணம்?"

"ஆகவில்லை. நிச்சயமாகியிருந்தது. இதனால் அவன் மேல் சில சிநேகிதிகளுக்கு வெறுப்பு..."

"எவ்வளவு வருஷமா பம்பாயில் இருந்திருக்கிறார்?"

"இரண்டு வருஷமாக."

"எப்பொழுது பாஸ் செய்தார்?"

"ம்... ஐந்து வருஷங்களுக்கு முன்."

"மற்ற மூன்று வருஷங்கள் என்ன செய்து கொண்டிருந்தார்."

"இருங்கள்."

காகிதங்கள் சலசலத்தன.

"எம். டெக் வாங்கியது மார்ச் 63ல். அப்புறம் இரண்டு வருஷம் பரௌணியில் இருந்திருக்கிறார். அப்புறம் இண்டியன் ஆயில் கார்ப்பரேஷனில் டில்லியில் ஆறுமாதம் இருந்திருக்கிறார். அப்புறம் பம்பாயில் இந்தக் கம்பெனியில் வேலை."

"நடுவில் இடைவெளி இருக்கிறதா?"

"இல்லை. கான்பூர், பரௌணி, டில்லி, பம்பாய்."

"இந்த நான்கு இடங்களில் ஒன்றில் கொன்றவன் இருக்கிறான்."

"இருக்கலாம்."

"மோஸ்ட் ப்ராபப்ளி... பம்பாய்."

"எப்படிச் சொல்கிறீர்கள்?"

"அந்த டெலிபோன் எண்! அதற்கு என்ன அர்த்தம்? ஜே! ஏ பி ஸி.டி. இ. எஃப் ஜி எச் ஐ ஜே! ... சரி. கொன்றவனை நான் இன்னும் பதினைந்து நாட்களில் பார்க்கப் போகிறேன்."

"லெட்ஸ் ஹோப் ஸோ!"

"அவன் அந்தரங்க வாழ்க்கை எப்படி?"

"ஆபீஸில் சமர்த்தாக இருக்கிறார். வீட்டில்..."

"வீட்டில்...?"

"பெண்கள், சாராயம், ஆங்கிலப் பாணியில் பார்ட்டிகள் ரிகார்ட்கள்... பக்கத்து ஃப்ளாட்காரர்கள் சொன்னார்கள்."

"நிறையப் பெண் சிநேகிதம்?"

"நிறைய!"

"கொன்றதற்குக் காரணம் பெண் விஷயம் என்று சொல்லலாம்?"

"சொல்லலாம். நிச்சயம் சொல்லலாம். கொன்றவன் ஒன்றை யும் எடுத்துச் செல்லவில்லை."

"கிருஷ்ணனின் சிநேகிதிகளை எல்லாம் பார்த்தீர்களா?"

"பார்த்தேன்."

"பார்க்காமல் இருப்பீர்களா?"

"கடமை சார்."

"புரிகிறது. பார்த்ததில் என்ன தெரிந்தது?"

"நாட் மச் ஸார். அவர்கள் எல்லோரும் ஒரு ரகம். பம்பாயில் அந்த மாதிரிப் பெண்கள் நிறைய இருக்கிறார்கள். அந்தக் கிருஷ்ணன் எல்லோரிடமும் பொய் சத்தியங்களைக் கொடுத்து விட்டு... அவர்களை... உங்களுக்குப் புரியுமே... கிருஷ்ணனிடம் நிறையப் பணம் இருந்திருக்கிறது."

"செக் புத்தகத்தைப் பார்த்தீர்களா? சமீபத்தில் யாருக்காவது நிறையப் பணம் கொடுத்திருந்தானா?"



"ஹரிணி என்கிற பெண்ணுக்கு."

"ஹரிணியை விட்டுவிடுங்கள், அவர்கள் தான் இல்லை என்று தீர்ந்து விட்டதே?"

"எப்படி ஸார்? எனக்கு இன்னும் சமாதானமாகவில்லை. தேவதத்தன் தான் செய்திருக்க வேண்டும்."

"தேவதத்தன் இல்லை. நான் முடித்ததும் உங்களுக்குச் சமாதானமாகும். டாக்ஸி டிரைவர் சரண்தாஸுக்கு வருவோம். அவன் ஒரு பிரயாணியைக் கொண்டுவந்து சேர்த்து அந்தக் கட்டடத்துக்குத்தான். இது நிச்சயம்தானே?"

"நிச்சயம்."

"எப்படி?"

"சரண்தாஸ் மறுநாள் காலை செய்தித்தாளில் சம்பவம் பற்றிப் படித்துவிட்டுத் தானாகவே வந்து சொன்னான். நான் ஒரு [illegible]ரமான ஆளை அங்கே நேற்றிரவு கொண்டு வந்து விட்டேன் என்று"

"மஹாத்மா காந்தி ரோடிலிருந்து?"

"ஆம்."

"மஹாத்மா காந்தி ரோடில் எந்த இடத்தில் ஏற்றிக் கொண்டான்?"

"ஜஹாங்கீர் ஆர்ட் காலரி அருகில், ரோட் கிராஸிங் அருகில், என்று சொன்னான்."

"வாருங்கள், அங்கே போகலாம். அந்த இடத்தை நேரில் பார்த்தால் ஏதாவது எனக்குத் தோன்றும்."

"நான் பார்த்திருக்கிறேன் ஸார்."

“உங்கள் பார்வைக்கும் என் பார்வைக்கும் சற்று வித்தியாசமிருக்கலாம் மாதவன். வெயிட் எ மினிட். இப்பொழுது போக வேண்டாம். டாக்ஸி டிரைவர் அந்த ஆசாமியை ஏற்றிக் கொண்டு சென்றானே, அதே சமயம் மாலை 7-30'க்கு அங்கு போகலாம்.”

“ஏதாவது வித்தியாசமிருக்கிறதா?”

“அப்பொழுது சொல்கிறேன் மாதவன்.”

**மா**லை. பழைய ஹார்ன்பி ரோடின் நியான்காடுகளைத் தாண்டி அதைத் தொடர்ந்து மஹாத்மா காந்தி ரோடில் மெதுவாக ஜீப்பைச் செலுத்தச் சொன்னார் ராமநாதன். இப்படியும் அப்படியும் பார்த்துக் கொண்டே சென்றார், கடைகள், கார்கள், கடைகள் இரண்டு திக்கிலும் ஏதோ தீ விபத்துப்போல் பறக்கும் கார்கள் பிளாட்பாரத்தின் இருட்டு வெளிச்ச மாறுதலில் நடந்து சென்று கொண்டிருந்த வெள்ளைக்கார மாலுமிகளை, மேரியின் ஆட்டுக் குட்டி போலத் தொடரும் டாலர் தாகம் கொண்ட சோம்பேறிகள் எல்லாமே லாரல் - ஹார்டி படத்தில் போல ஓர் அவசர கதியில் இயங்கும் இடம்.

ஜஹாங்கீர் ஆர்ட் காலரியைத் தாண்டி ‘கேட் வே’ வளையில் சென்று திருப்பச் சொல்லி யாக்ட் க்ளப் ரோட்... ம்ஹூம் தாஜ்மஹால் ஹோட்டல்... ம்ஹூம்... பாலர்ட் பியர்? (யோசனைக்குப் பிறகு ம்ஹூம்)...

மறுபடி அந்த ஆர்ட் காலரி அருகில் நிறுத்தச் சொன்னார் “நடக்கலாம்,” என்றார்.

உடன் வந்த மாதவனை “அந்த டாக்ஸி டிரைவர் அவனை ஏற்றிக் கொண்டதாகச் சொன்ன இடம் இது தானே?” என்றார்



“ஸார், நான் அவனுடன் வந்து காண்பிக்கச் சொன்னேன். அதோ தெரிகிறதே அந்த ஸிக்னலுக்கு ஒரு 150 அடி இந்தப் பக்கம். நான் அவன் சொன்ன இடத்தை உங்களுக்குக் காட்டுகிறேன், வாருங்கள்.”

நடந்தார்கள் மௌனமாக.

“இங்கேதான்,” என்றார் மாதவன்.

“இங்கேயே நிற்கலாம்.”

“என்ன செய்யவேண்டும்?”

“ஒன்றும் செய்யவேண்டாம். ஜஸ்ட் நின்று கொண்டிருங்கள்.”

“சரி,” என்றார் மாதவன் அரைப் பெருமூச்சுடன்.

ராமநாதன் தன் கைக்கடியாரத்தைப் பார்த்தார்.

“இன்று ஞாயிற்றுக் கிழமை இல்லையே?”

“இல்லை.”

“அன்றும் ஞாயிற்றுக்கிழமை இல்லையே?”

“இல்லை.”

ராமநாதன் ஒன்று இரண்டு என்று போகிற வருகிற டாக்ஸிகளை எண்ணிக் கொண்டிருந்தார். சரியாக ஐந்து நிமிடத்திற்கு எண்ணினார். “சராசரியாக இருபத்தைந்து செகண்டுக்கு ஒரு டாக்ஸி வருகிறது.”

“சரி ஸார்.”

“இதிலிருந்து என்ன தெரிகிறது?”

“எனக்கு ஒன்றும் தெரியவில்லை.”

"அன்றைக்கு அவன் டாக்ஸி பிடித்த அந்த இடத்திலிருந்து சுமார் முப்பது செகண்ட் நடை தூரத்தில் இருக்கிற ஏதாவது ஒரு இடத்திலிருந்து வெளிப்பட்டிருக்க வேண்டும். முப்பது செகண்டில் வேகமாக நடந்தால் சுமார் 50 அடி போகலாம். ஆகவே அந்த இடத்திலிருந்து 150 இருநூறு அடிக்குள் இருக்கிறது அவன் வந்த இடம்."

சுற்றிப் பார்த்தார்.

"அதோ பாருங்கள் மாதவன், என்ன தெரிகிறது?"

"ஏதோ?"

"அங்கே?"

"இண்டியன் ஏர்லைன்ஸ் கட்டிடம்."

"நம் கதாநாயகன் இண்டியன் ஏர்லைன்ஸிலிருந்துதான் வந்திருக்கிறான்."

"எப்படிச் சொல்கிறீர்கள் ஸார்! எனக்குப் புரியவில்லை."

"லாஜிக்! மை டியர் ஃப்ரெண்ட் லாஜிக்! ஒரு கொலை செய்யும் நிமித்தம் உள்ளவன், இந்த இடத்தில் டாக்ஸி பிடித்திருக்கிறான். முன்பே தீர்மானிக்கப்பட்ட கொலை. அந்தச் செயலுக்கு முன் அவன் ஒவ்வொரு அசைவுக்கும் ஒரு காரணம். அவசரம் ஒரு தயார் செய்கிற தன்மை இருக்க வேண்டும். கொலை செய்யப் போகுமுன் ஆர்ட் காலரியில் மாடர்ன் ஆர்ட்டை ரசிக்கவோ அல்லது எதிர்க்கடையில் ஷர்ட் வாங்கவோ அல்லது அந்த ரெஸ்டாரண்டில் குளிர் காப்பி சாப்பிடவோ நினைக்கிறவன் ஒரு 'பாரனாய்ட்'. சாதாரணன் அல்ல. நம் நண்பன் ஒரு சாதாரண ஆசாமி என்று எடுத்துக் கொண்டால் அவன் இந்த இடத்தில் டாக்ஸி பிடிப்பதற்கு முன் செய்த காரியங்களில் ஒரு காரணம், ஒரு நிமித்தம் தெரிய வேண்டும். பிரயாணம் ஒரு நிமித்தம் அல்லவா? வாருங்கள் அங்கே!"



இண்டியன் ஏர்லைன்ஸின் ஸிடி அலுவலகத்தில், 'என்க்வைரி'யில் இருந்த அந்தப் பெண் வரவேற்றாள்.

விஷயத்தைக் கூறினார்.

"தயவு செய்து அங்கே இடது பக்கம் உட்கார்ந்திருக்கும் டிராஃபிக் ஆபீசரைப் பாருங்கள். நான் உடன் வந்து காட்டட்டுமா?"

"வேண்டாம். தெரிகிறார்."

போலீஸ் உடையைப் பார்த்ததும் ஸூபரின்டென்டெண்ட் என்று தெரிந்ததும், "என்ன வேண்டும் உங்களுக்கு?" என்றார் டிராஃபிக் ஆபிஸர்.

"சென்ற மாதம் பதினாறு பதினேழு பதினெட்டு பத்தொன்பது இருபது தேதிகளின் பிரயாணிகள் லிஸ்ட் எனக்கு வேண்டும் ஒரு விசாரணைக்கு."

"எந்த ஸர்வீஸ்?"

"கல்கத்தா, டில்லி இரண்டு ஸர்வீஸ்களுக்கும் தேவை."

"டில்லிக்கு ஒரு நாளைக்கு நான்கு ஸர்வீஸ்கள் இருக்கின்றனவே?"

"எல்லாம் வேண்டும்."

"நாளை காலை கிடைக்கும்."

வெளியே வந்தனர்.

"மாதவன், நேற்றுவரை அவன் யாரென்று தெரியாமல் துழாவிக் கொண்டிருந்தேன். இன்றும் அவன் யார் என்று எனக்குத் தெரியாது. இருந்தும் எனக்கும் அவனுக்கும் தூரம் குறைந்து கொண்டு வருகிறது என்று உணர்கிறேன்."

"ஓல்ட் மேன் இஸ் க்ரேஸி!" என்று எண்ணிக் கொண்டார் மாதவன்.

# தேவை, க்ளிக் — 11

மத்திய சர்க்கார் உள்துறை மந்திரிசபை ஜாய்ண்ட் செக்ரெட்டரி ஸ்ரீகௌல் எழுதிய டிசம்பர் 22'ம் தேதியிட்ட கடிதத்தின் முதல் பகுதி:

*அன்புள்ள ராமநாதன்:*

*கிருஷ்ணமூர்த்தி உங்கள் விஷயமாக நேற்று டெலிபோனில் பேசினார், ஸி.பி. ஐ.யில் நேரப்போகும் வேலை பற்றி யு.பி. எஸ்.ஸியிலிருந்து இதுவரை ஒன்றும் தெரியவில்லை.*

*இந்தத் தருணத்தில் நீங்கள் டில்லி வந்து போவது நல்லது என்று படுகிறது. இந்த வாரத்துக்குள் வந்தால் நல்லது. மத்திய செக்ரடேரியட் தெற்கு ப்ளாக்கில் அறை எண் '128'ல் என்னை வந்து சந்தியுங்கள். இந்தத் தொடர்பில் பம்பாய் போலீஸின் டிசம்பர் பதினாறாம் தேதியிட்ட கடிதத்தைப் பார்க்கவும்."*

இண்டியன் ஏர்லைன்ஸ் கம்பெனியின் கடந்த மாதத்தின் பதினெட்டாம் தேதியின் பிரயாணிகளின் பட்டியலில்... பெயர்கள் பெயர்களாயிருந்த அந்த நீண்ட சதுரக் காகிதங்களின் மத்தியில் ராமநாதனும் ரோகிணியும் தரையில் அமர்ந்திருந்தார்கள். சிவப்புப் பென்ஸிலின் பின் பகுதியைச் சுவைத்துக் கொண்டு, "தலை, கால் புரியவில்லை அப்பா," என்றாள்.

"புரியும். நான் கேட்டதைச் செய். இந்தக் காகிதங்களை ஒவ்வொன்றாகப் பார்த்துச் சென்ற பதினாறு, பதினேழு, பதினெட்டு



தேதிகளில் யார், யார் டெல்லியிலிருந்தோ கல்கத்தாவிலிருந்தோ விமானத்தில் வந்து உடனே மறுநாள் திரும்பி போயிருக்கிறார்கள் என்று பார். அது போதும்..."

"எனக்கென்னவோ இந்தப் பிரயாணிகள் பட்டியலில் அதிகம் செய்தி இருப்பதாகத் தெரியவில்லை அப்பா."

"ஏன்! வந்த பிரயாணியின் பெயர் தெரிகிறது. அவர் டிக்கெட் நம்பர் தெரிகிறது. அவர் வெஜிடேரியனா, நான் வெஜிடேரியனா, ஆணா, பெண்ணா, குழந்தையா எவ்வளவு தெரிகிறது!"

"எவ்வளவு உபயோகமான தகவல்கள்!"

"பெயர் உபயோகமான தகவல் இல்லையா?"

"திட்டமிட்டுக் கொலை செய்ய வருகிறவன் தன் சொந்தப் பெயரைத் தருவானா அப்பா?"

"அது வாஸ்தவம் தான். எதற்கும் நான் சொன்னதைச் சேகரியேன்! ஏதாவது தடயம் கிட்டும்."

"இதோ இன்னும் மூன்று காகிதங்கள் தான் பாக்கி."

ராமநாதன் அந்தக் கடிதத்தை மறுமுறை படித்தார். டில்லிக்குப் போவதா வேண்டாமா என்று யோசித்தார். "எப்படியும் வேறு வேலை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். என்னால் சும்மா இருக்கமுடியாது. துருப்பிடித்துச் செத்துப் போய்விடுவேன். ரோகிணி, அதோ எதிரில் கலைந்த தலை மயிரைத் தள்ளிவிட்டுக் கொண்டு தீவிரமாக அப்பாவுக்கு ஒத்தாசை செய்கிறாளே, அவளைக் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டும்... பணம் வேண்டும்.. க்ராச்சுட்டியும் பென்ஷனும் போதாது..."

"தயார்," என்றாள்.

“சரி, யார், யார் என்று சொல்லு.”

“இரண்டு பட்டியல் தயார் செய்திருக்கிறேன். டில்லி, கல்கத்தா. முதலில் டில்லியிலிருந்து முதல்நாள் வந்து மறுநாள் கிளம்பிச் சென்றவர்களின் பட்டியல்.”

“எவ்வளவு பேர்?”

“ஒன்பது பேர்.”

“அப்பாடா! அவர்களில் பெண்களின் பெயர்களை ஒதுக்கி விடு. குழந்தைகள் இருந்தால் வேண்டாம். பாக்கி எவ்வளவு பெயர்கள்?”

“ஐந்து.”

“படி.”

“சேஷய்யுன் கே., நரசப்பா கே.டி., ஷெனாய் எஸ். நவால்கர் பி.பி. என்., ராமன்.”

“கடைசியாகப் படித்த ராமனின் இனிஷியல்?”

“இனிஷியல் இல்லை.”

“தேதி என்ன?”

“18’ம் தேதி வந்து பத்தொன்பதாம் தேதி திரும்பி டில்லி போயிருக்கிறார்.”

“அந்த இரு தினங்களில் மானிஃபெஸ்டை எடு.”

கலைத்துக் கலைத்துத் தேடி எடுத்தாள். தந்தாள்.

“லெட்டஸ் ஸீ ராமன், ரிடர்ன் டிக்கெட்... ‘ஷ்ய்’ என்று விசிலடித்தார். “இவன்தான்!” என்றார்.

“என்னப்பா?”



“பார், ராமன் சாமான்கள் எதுவும் கொண்டுவரவில்லை. கையை வீசிக்கொண்டு டெரிலின் சட்டை, பாண்ட்டுடன் வந்திருக்கிறான். சம்பவம் நடந்த தினம் காலை வந்து மறுதினம் காலை திரும்பி இருக்கிறான்... ஆனால் ராமன் என்பது ஒரு சாதாரணப் பெயர். அது அவன் சொந்தப் பெயராக இருக்காது. அவ்வளவு திட்டமிட்டு வந்திருப்பவன் நீ சொல்வதுபோல சொந்தப் பெயரை உபயோகப் படுத்தியிருக்கமாட்டான்.

“அப்படியென்றால் டில்லியில் ராமன் என்று புனை பெயர் கொண்ட ஆளைத் தேட வேண்டும் நீங்கள்?”

“இரு, இரு ரோகிணி. நான் கட்டுவது ஒரு சீட்டு மாளிகை, தொத்தல் மாளிகை. சரிவதற்கு அவசரப்படும் மாளிகை. முழுக்க முழுக்கக் கற்பித்துக் கொண்ட முடிவுகளையே ஆதரித்துக் கட்டியது. முதல் முடிவு, அவன் ஆண் என்பது. அது ஒரு சீட்டு என்றால், அதற்கு அடியில் தாங்கிக் கொண்டிருக்கும் சீட்டு அன்று டாக்சி டிரைவர் கொண்டு வந்துவிட்டது குற்றம் செய்தவனைத்தான் என்பது. இது எல்லாவற்றிற்கும் அடிச் சீட்டு. இதிலிருந்து மஹாத்மாகாந்தி ரோட்; அதற்கு மேல் ஐ.ஏ.ஸி., அதற்கு மேல் டில்லி, கல்கத்தா மட்டும் என்கிற முடிவு! அதற்கு மேல் பிரயாணிகள் பட்டியல்; அதற்கு மேல் ராமன். பூ என்று ஊதினால் எல்லாம் கலைந்து விடும். இதில் ஒரே ஒரு சீட்டு மட்டும் என்ன கவனமாக வைத்தாலும் நிற்க மாட்டேன் என்கிறது... அது அந்த டெலிபோன் எண்! ஜே என்கிற ஒன்றை இங்கிலீஷ் எழுத்துக்கு எதிரே எழுதப்பட்ட அந்த எண்! அதற்கு உரித்தான தொழிற்சாலை. அதற்கும் இந்த ராமனுக்கும் என்ன சம்பந்தம்?”

“அப்பா, அந்த எண் தப்பு என்பதுதான் சரியான முடிவு.”

"தப்பு எண் இல்லை அது. கர்லாவில் இருக்கும் அந்தத் தொழிற்சாலைக்கும் 'ராமன்' என்கிற இந்தப் புனைபெயர் ஆசாமிக்கும் இறந்த கிருஷ்ணனுக்கும் ஒரு தொடர்பு இருக்கிறது."

"நான் சொல்கிறேன். இவர்கள் மூவரும் சேர்ந்து கள்ள நோட்டு அடிப்பவர்களாக இருக்கலாம். சண்டை ஏற்பட்டிருக் கலாம்... ஏன் சிரிக்கிறீர்கள் அப்பா?"

"உன் கற்பனை!"

"எப்படியாவது ஒரு தொடர்பு இருந்துதானே ஆக வேண்டும்?"

"குர்லா இண்டஸ்ட்ரியல் ஏரியாவில் இருக்கும் 551583 என்கிற டெலிபோன், ராமன் என்று சாதாரணப் பெயரில் 'பாக்கேஜ்' இல்லாமல் டில்லியிலிருந்து வந்து மறுபடி திரும்புகிற பிரயாணி, பெட்ரோலியம் கம்பெனியில் தொழில் புரிந்த இறந்த கிருஷ்ணன், கொலை செய்யப்பட்ட கிருஷ்ணன். என்ன தொடர்பு என் மகளே?"

"அப்புறம் அந்த டெலிபோன் எண்ணுக்கு எதிரே எழுதி யிருந்த 'ஜே' என்கிற எழுத்து."

"அப்புறம் இரண்டு தினங்களில் ரிடையர் ஆகப் போகும் ராமநாதன் என்கிற போலீஸ் ஸூபரின்டென்டெண்ட்! அவர் எதிரே கல்யாணம் என்றால் சீறும் பெண்."

"அப்பா நீங்கள் டில்லிக்குப் போகப் போகிறீர்களா?"

"அந்தக் கடிதத்தையும் படித்து விட்டாய்!"

"எதற்காக அப்பா மறுபடி வேலை..."

"திரும்ப நம் ஊருக்குப் போய் விவசாயம் பார்க்கலாமா? அங்கே முண்டாசு கட்டிக் கொண்டு கறுப்பாய் முழங்கால்வரை



சேற்றில் இருக்கும் ஏதாவது சோமசுந்தரத்தைப் பேசி முடிக்கலாமா?"

"என் கல்யாணக் கவலைதானா எப்பொழுதும்?"

"பைத்தியக்கார சமூகம் கேட்கிறதே."

"தி ஆன்ஸர் இஸ் நோ."

"டில்லி போகலாம் என்று தான் இருக்கிறேன். இந்த கேஸின் கவர்ச்சி வேறு அழைக்கிறது."

"ராமன் என்று பொய்ப் பெயர் வைத்துக் கொண்டிருந்த வரைத் தேடப் போகிறீர்களா?"

"ரோகிணி எல்லா கேஸிலும் ஒரு 'க்ளிக்' சப்தம் உண்டு. அது எப்பொழுது எவர் மூலம் கேட்கும் என்பது தெரியாது. ஆனால் நிச்சயம் ஒரு தருணத்தில் கேட்கும். உடனே பளிச் சென்று எல்லாம் புரியும். இப்பொழுது என் எதிரே தெரிவது ஒரு நிழல் பிம்பம். ஒரு அவுட்லைன். வெளிக்கோடு. உள்ளே முகம் மூக்கு எல்லாம் நிழலிரவில் இருக்கிறது. 'க்ளிக்!' வெளிச்சம்! எல்லாம் எல்லாம் அதன் அதன் இடத்தில் விழுந்துவிடும். அப் புறம் ஜன கண மன!"

"க்ளிக்!" என்றாள் ரோகிணி.

"ம்ஹூம்! மூளைக்குள் கேட்க வேண்டும்... என் அனுபவத் தில் இது தப்பினதே இல்லை."

⌘

அந்தத் தொழிற்சாலையை ஒரு வாரம் கண்காணித்ததில் விசேஷமாக ஏதும் அங்கே நடப்பதாகத் தெரியவில்லை என்று ரிப்போர்ட் வந்தது.

⌘

மாதவன் ஃபைலை மூடுவதற்கு அனுமதி கேட்டார். ராமநாதன் அதற்குச் சரியாகப் பதில் சொல்லவில்லை. தன்னுடைய ப்ராவிடண்ட் ஃபண்டின் கடைசி 'வித்ட்ராய'லில் ஆழ்ந்திருந்தார். அப்புறம் மேற்கு ரெயில்வேயில் இன்ஜினியராக இருக்கும் தன் பழைய நண்பன் ஒருவர் மூலம் ஃப்ராண்டியர் மெயிலில் டில்லிக்கு ஒரு முதல் வகுப்பு டிக்கெட் ரிசர்வ் செய்து கொண்டார். டூத்பேஸ்ட் புதிதாக வாங்கினார். தன்பழைய கம்பளி ஸூட்டை ட்ரைக்ளீன் செய்யக் கொடுத்தார். டில்லிக்குச் செல்ல ஆயத்தமானார்.

ஃப்ராண்டியர் மெயில், டீசல் சக்தியின் இழுப்பில் ராஜஸ்தானத்துப் பாலை நிலங்களின் ஊடே புழுதி சிதறச் சென்று கொண்டிருந்தது.

'டைனிங் காரி'ல் தனியாக ஓர் ஓரத்தில் அமர்ந்து டோஸ்டின் மேல் வெண்ணெய் தடவிக் கொண்டிருந்த ராமநாதன் தன் பின்னால் அமர்ந்திருந்தவர்கள் பேச்சில் பாதி கவனத்தில் இருந்தார்.

அவர்கள் பேசிக்கொண்டிருந்ததன் சில வார்த்தைகளை ஒட்ட வைத்ததில் அவர்கள் குதிரைப் பந்தயத்தைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிந்தது.

"இரண்டரை லட்ச ரூபாய் சார். இரண்டரை லட்ச ரூபாய் எனக்குக் கிடைத்திருக்கவேண்டியது. விட்டேன் சார்."

"அப்படியா?"

"ஸார், உங்களுக்குக் கனவுகளில் நம்பிக்கை இருக்கிறதா?"

"ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்?"

"ரேஸுக்கு ஒரு நாள் முன்னே கனவு கண்டேன் ஸார் ஒரு சின்னப் பெண் ஸ்லேட்டில் எழுதி என்னிடம் காண்பிக்கிறாள். 'அங்கிள், இது சரியா பாருங்கள்' என்று சொல்கிறாள்."



"ஸ்லேட்டில் என்ன எழுதியிருக்கிறாள்?"

"ஐந்து எண்கள். 58216. நன்றாக ஞாபகம் இருக்கிறது. 5,8,2,1,6... எனக்கு எழுந்ததும் இதில் ஏதோ இருக்கிறது என்று பட்டது. அன்றைக்கு மஹாலட்சுமியின் இண்டியன் ஸென் லீகர் ஜாக்பாட்டுக்கு அப்படியே அந்த 58216'ஐக் கட்டினேன் ஸார்."

"ஜெயித்ததா?"

"ஜெயிக்கிறதாவது? ஒரு குதிரை கூட வரவில்லை. 5 வரவில்லை... எட்டு வரவில்லை... 2 வரவில்லை..."

"பின்னே?"

"ஆனால் அதே தினம், மெட்ராஸ் ரேஸில் ஜாக்பாட் நம்பர் என்ன தெரியுமா? 58216. இரண்டரை லட்ச ரூபாய்!"

"ச் ச் ச்!"

ராமநாதன் முள் கரண்டியைத் தவற விட்டு விட்டார்.

அவர் மூளைக்குள் மிகத் தெளிவாக அந்த 'கிளிக்' கேட்டது.

*சுநந்தாவின் டயரியிலிருந்து...*

உடம்பு எவ்வளவு ஒண்டர்புல்! நான் எண்ணெய் குளிக்கிறபோது எவ்வளவு தடவை தொட்டிருக்கிறேன் அண்ணா மேலே படும் போது ஒன்றும் தெரிவதில்லை.

கிருஷ் இன்றைக்கு என் கன்னத்தைத் தட்டி, கையை முழங்கைக்கு மேல் பிடித்து மெதுவாக அமுக்கினான் எவ்வளவு வித்தியாசமாக இருந்தது!

எனக்குப் பிடித்த வர்ணங்கள் என்ன? நீலம் நீலம் நீலம் வானம் நீலம்.ஆழமான ஜலம் நீலம். நாகப்பழம்கூட நீலம் விஷம் நீலம்.

## தவறாக வந்திருக்கிறீர்கள் மிஸ்டர்! 12

“நான் முட்டாள்களின் ராஜா,” என்று எண்ணிக் கொண்டார் ராமநாதன், என்ன ஒரு சுலபமான தடயம்! இதைத் தெரிந்து கொள்ள எத்தனை தினங்கள்! எத்தனை தினங்கள்! சே அந்த டெலிபோன் எண் பம்பாயைச் சேர்ந்ததல்ல, டில்லி எண் பம்பாய் என்று நம்பினதில் எவ்வளவு தப்பு! அந்தத் தொழிற் சாலையில் போய் ஆர்ப்பாட்டம் செய்து அதைச் சந்தேகித்து அதைக் கண்காணிக்கச் செய்து பரம வேஸ்ட்! ராமநாதன் ஏமாளி சக்ரவர்த்தி! தன் பின் மண்டையில் தட்டிக் கொண்டதை ‘வெயிட்டர்’ பார்க்கிறான். அந்த ‘ஜே’ டில்லியைச் சேர்ந்த ஆள் அவன் தான் ராமன். அவசர அவசரமாக பம்பாய்க்கு வந்து அதே அ. அவாகத் திரும்பிச் சென்றிருக்கிறான். அவன்



டெலிபோன் எண் தான் அந்த 551583. அது டில்லி நம்பர்! பம்பாய் நம்பர் இல்லை. டில்லி! டில்லி! வாடிக்கைக்கு அதிக மாகவே ‘டிப்’ செய்துவிட்டு எழுந்தார். சுத்தமான அந்த தினத் தில், ஃப்ராண்டியர் மெயில் வந்து நிற்க, டில்லியின் குளிரான ஜனவரி நடுக்கத்தில், நீலக்கோட் சிப்பந்திகளின் நடுவே ஸ்வெட்டர் (ரோகிணி பின்னியது) கோட் அணிந்து கொண்டு வரவேற்க வந்தவரைத் தேடினார். அவர் உடம்பில் பதற்றம் தெரிந்தது. மூன்று சீட்டில் இரண்டு ஏஸைப் பார்த்து விட்டு மூன்றாவது சீட்டைத் திறக்குமுன் ஏற்படும் பதற்றம். ஹோம் மினிஸ்ட்ரி ஆசாமியைச் சந்திக்க இரண்டு நாட்கள் இருக் கின்றன. இரண்டு நாள் அவனைத் தேட சந்திக்க பேச.. மிஸ்டர் ஜே! இதோ வந்து கொண்டிருக்கிறேன்.. இன்னும் என்ன அவரைக் காணோம்?... நான் நினைத்ததெல்லாம் சரியா? அந்தத் தொடர்ச்சி சரியா? மனவடிவங்களினாலும் மூளை ‘ஸெல்’ ரசாயனத்தினாலும் தயார் செய்த அந்த பேப்பர் பிம்பம் நாளை டெல்லியில் சதை எலும்புகளுடனும் உருவம் பெறப் போகி றானா! எனக்கு அதில்தான் ஆர்வமிருக்கிறது. அந்த காலத்தில் கால் கட்டை விரலை மட்டும் வைத்துக் கொண்டு முழு உருவத்தை யும் வரைவார்களாமே அது போல் வரைந்திருக்கிறேன். அதற்கு ஏற்ப ஒரு நிஜம் இங்கே உண்டு என்று காண என் ஆணவமும் தன்னம்பிக்கையும் துடிக்கின்றன. இருந்து தான் ஆகவேண்டும். என் இருபத்தொன்பது வருஷத்தின் ‘எஸென்ஸ்’ இது.

எதிர்பார்த்தவர் வரவில்லை. தந்தி சேர்ந்திருக்காது..

“கைலாஷ் காலனி,” என்றதும் சர்தார்ஜி - டாக்சி டிரைவர் திமிர்ந்தான். நிறையத் தூரம் - பணம் - சந்தோஷம்.

கனாட்ப்ளேஸ், பார்லிமெண்ட் தெரு, விஜய்சௌக், ஹேஸ்டிங்ஸூம் துக்ளக்கும் ரோடுகளாக சரித்திரத்தை ஞாபகப்

படுத்துகிறார்கள். வெள்ளைக்காரனின் சுத்தம் இன்னும் மிச்சமிருக்கிறது. சைக்கிள் சாகரங்கள்.

ஸஃப்தர்ஜங் மன்னன் கட்டிய தாஜ்மகாலின் முட்டாள்தனமான 'காப்பி.' அப்புறம் விமான நிலையம். அப்புறம் மத்திய சர்க்கார் மத்தியதரக் குடும்பங்களின் வீடுகள், நெருப்புப் பெட்டி நகரங்கள். பழமையும் புதுமையும் மாறி மாறித் தாக்கும் ஒரு கன்னா பின்னா தலைநகரம்.

நண்பர், "உங்கள் தந்தி அரை மணிக்கு முந்திதான் வந்தது" என்றார் தற்செயலான எதுகையில், மேலும் "என்ன ஏதாவது கேஸா."

"இல்லை, நான் இன்னும் மூன்று தினங்களில் ரிடையர் ஆகிறேன். ஹோம் மினிஸ்ட்ரியில் ஒரு டெபுடேஷன் விஷயமாக வந்தேன். ஐம்பத்தெட்டுவரை தாக்குப் பிடிக்கலாம்!"

"என்ன வேலை!"

"ஸி.பி.ஐ. யில்,"

"ஸி.பி.ஐ.யில் என்ன வேலை?"

"அது தற்போது ரகசியம்," என்றார்.

"பாகிஸ்தான் ஹை கமிஷனில் கேட்டால் சொல்லுவார்கள்," என்று சிரித்தார் நண்பர். ராமநாதன் சிரிக்கவில்லை. எதிரே இருந்த டெலிபோனைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"வேண்டாம். இப்பொழுது வேண்டாம்.'

மறுதினம் காலை. குளித்தார். (கடுகெண்ணெய், வெந்நீர், மகா நடுக்கம்) சாப்பிட்டார். நண்பரின் டெலிபோனை எடுத்தார். டைரக்டரி என்க்வைரியைக் கூப்பிட்டார்.

"குட்மார்னிங். என்னிடம் ஒரு டெலிபோன் எண் இருக்கிறது. அதற்கு உரிய பெயரையும் விலாசத்தையும் மறந்து விட்டேன். அதைக் கண்டுபிடிக்க வேண்டும்."



"யார் பேசுவது?"

"என் பெயர் ராமநாதன். பம்பாய் போலீஸ். ஒரு இன்வெஸ்டிகேஷனில் இது தேவையாக இருக்கிறது."

"ஒன் மினிட் ப்ளீஸ்."

அந்தப் பெண் பக்கத்தில் யாருடனோ பேசுவது கேட்டது. அந்த யாருடனோ, மற்றொரு யாருடனோ பேசுவதும், சில சில பெண் குரல்கள் 'சிப்மங்க்' இசைத்தட்டு போலக் கேட்டன.

அருகில் வந்தது மறுபடி குரல்.

"நீங்கள் டெலிபோன் ரெவின்யூ டிபார்ட்மெண்டுக்கு டெலிபோன் செய்யுங்கள். அவர்கள் தான் எண் வாரியாகப் பெயர்களை வைத்திருப்பார்கள். சுலபமாகக் கண்டுபிடிக்கலாம்."

"அப்படியா? அவர்கள் எண் என்ன என்று சொல்கிறீர்களா?"

சொன்னாள்.

அந்த எண்ணை டயல் செய்தார்.

"குட்மார்னிங். நான் ராமநாதன். பம்பாய் போலீஸ். என்னிடம் ஒரு டெலிபோன் எண் இருக்கிறது. அதற்கு உரியவரின் பெயரும் விலாசமும் எனக்குத் தெரியவேண்டும். அந்த எண் : 551583..."

ஒரு நிமிடத்தில் அந்த எண்ணுக்குரிய பெயரும் விலாசமும் கிடைத்தன.

ஆர். ஜெயராமன். 15ஏ - 17, வெஸ்டர்ன் எக்ஸ்டென்ஷன் ஏரியா, கரோல்பாக், (புதுடெல்லி) - 5.

ராமனாதன், "ஜெராமனுக்கு ஜே!" என்றார் விலாசத்தைக் குறித்துக் கொண்டு.

மாலை, அஜ்மல்கான் ரோடு சலனம் மூன்றரை அடி வடிவத்தில் ப்ரேஸியரை நியானில் எழுதிக் காட்டும் பஞ்சாபி யின் உரத்த சுவை எங்கும் தெரியும் இடம். பொங்கலுக்கு கரும்பு விற்கும் சேலம். வெற்றிலை விற்கும் திருநெல்வேலி. 'நம்கீன் பந்தர்' வைத்திருக்கும் கராச்சி அகதி. செக்கச் செவேல் என்று அழகாகச் சிரித்துக் கொண்டு ரோடு பெருக்கும் மலைஜாதி மெஸ்களில் டேபிள் துடைப்பதும் அவர்களே போட்டோ கடை வைத்திருக்கும் கேரளம். செருப்புக் கடை வைத்திருக்கும் முல்தான்.

நாள் ஓயாமல், வாய் ஓயாமல் சாப்பிடச் சளைக்காதவர்கள் பஞ்சாபிகள்.

(கேள்வி : எவ்வளவு நேரம் ஒரு பஞ்சாபியால் சாப்பிடா மல் இருக்க முடியும்?

பாபுராவ் படேல் : எட்டு மணி நேரம் ஒரு உலக ரிகார்ட்)

ராமநாதன் இந்தச் சந்தடிகளிலிருந்து திரும்பி நடந்தார் இரண்டு ஒரே வடிவமுள்ள நாய் - நாய்கள் அவரையே காதலு டன் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு அவர் கடந்ததும் மாமூலாக நாஸூக்காக, ஒரு தடவை குரைத்த வீடு 15ஏ - 51.

50, 49, 48 என்று குறையக் குறைய ராமநாதனுக்கு இதயத் துடிப்பு அதிகரிக்க அதிகரிக்க, "என் உடம்புக்கு நல்லதல்ல இது எல்லாம் தப்பாக இருக்கப் போகிறது. மகா ஸில்லியாக உணரப் போகிறேன்" என்று நினைத்தார்.

"இருந்தும் ஜெயராமன் ஆரம்பிப்பது ஜே - யில்"

"அந்தப் பெயர் ராமன்! உடனே வாய்க்கு வந்த சுருக்கமாக ராமன்!"

15ஏ - 17. சந்தின் கோடியில் அடுத்த இணைத் தெருவின் மூலையில் இருந்த நான்கு ப்ளாட்கள். சினிமாஸ்கோப்பில்



விரிந்த ஒரு வீடு. செடிகளின் நடுவே சிறிய தாழ்வாரம். நடுவே மேலே செல்லப் படி. வலது பக்கம் ஒரு ஃப்ளாட். இடது பக்கமும் அதே. மேலே வலது இடதில் அதே. அதற்கு மேல் சிகரம் போல் ஒரு பர்ஸாத்தி. எதிரே பார்த்தார். ஒரு சைக்கிள் கடை. ஒரு லாலாஜி டீக்கடை. அதில் நிலக்கரி அடுப்புப் புகையில் நிறம் மாறின ரேடியோ. அதிலிருந்து கிளம்பிய பலத்த விவித பாரதி ஒரு இருபது முப்பது அடிக்கு சாலையை நாசம் பண்ணிக் கொண்டிருந்தது. தள்ளி ஒரு நாயர் கடை. அதில் மிகப் பழைய 'அன்வேஷணம்' தொங்கிக் கொண்டிருந்தது. இந்தப் பக்கம் நாவல்ட்டி புக் ஸ்டோர். அங்கங்கே மாடிகளில் டெலிவிஷன் ஏரியல்கள். அதன் இணைப்புக் கேபிள் வரியாக வீட்டுக்குள் வழியும் பெருமை.

இரண்டு பெண்கள் ஸ்கிப்பிங் ஆடிக்கொண்டே மூன்றா வது (அங்கே இல்லாத) பெண்ணைப் பற்றிச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்தப் பெண்களின், ஓன், டூ. 'பக்ள் மை ஷ்யூ.'வுக்குக் குறுக்கே, "ஜெயராமன் எங்கே இருக்கிறார்?" என்று கேட்டார் ராமநாதன்.

"... ஃபர்ஸ்ட் ஃப்ளோர் தி ஹவுஸ் ஆன் யூர் ரைட்," என்றாள் அந்தப் பெண், ஸ்கிப்பிங் ஆடிக்கொண்டே.

வலது பக்கத்து ஃப்ளாட்டை அண்ணாந்து பார்த்தார். டெலிபோன் பீங்கான்கள் தெரிந்தன.

'தாங்க்யூ," என்று சொல்லி Z வடிவத்திலிருந்த படியில் ஏறினார்.

கதவு மூடியிருந்தது.

மஞ்சளில் ஆர். ஜெயராமன். டபிள்யூ. எச். ஓ என்று ஒரு நீண்ட சதுரக் காகிதத்தில் செவ்வனே டைப் அடிக்கப்பட்டு ஒட்டியிருந்தது .

பட்டன் இருந்தது. ராமநாதனிடம் விரல் இருந்தது. அழுத்தினார்.

உள்ளே 'ஊம்' என்றது பஸ்ஸர்.

"யெஸ்?" என்று பதில் வந்தது.

ஆண் பதில்.

ஷ்யூ ஒலி கதவருகில் வந்தது.

உள்ளே தாழ்ப்பாள் தொண்ணூறு டிகிரி திரும்பும் சப்தமும் அதையடுத்து மேற்படி பாள் இறங்கும் சப்தமும்.

அதையடுத்து கதவு திறந்தது.

அவன் உயரமாயிருந்தான். ஒரு ஐந்து நிமிஷத்திற்குள் தான் வந்திருக்க வேண்டும். உடுப்பைக் கழற்றாமல் கையில் ஒரு கடிதத்தைக் கிழிக்கும் செயலின் பாதியில் இருந்தான். ராஜேந்திர குமாரைச் சற்றே ஞாபகப்படுத்தினான். ராமநாதனைப் பார்த்த அந்தக் கண்களின் கோலிக்குண்டு, பூனைத் தன்மையுடன் அடையாளம் தேடின.

"என்ன வேண்டும் உங்களுக்கு?" என்றான் விரும்பத்தக்க குரலில்.

"மிஸ்டர் ஜெயராமன்?"

"எஸ்."

"என் பெயர் ராமநாதன். என்னை உங்களுக்குத் தெரியாது உங்கள் பெற்றோரை எனக்குத் தெரியும். நான் உங்களுடன் பேச வேண்டும்."

"என்ன விஷயம்?"

"உள்ளே வரலாமா? உட்கார்ந்து பேசலாமே?"

"சரி."



அவன் இப்பொழுது கதவை முழுவதும் திறந்தான். அறையின் நடுவில் இருந்த ஸோபாவின் நடுவில் காட்டினான். ராமநாதன் உட்கார்ந்தார். அவன் அந்தக் கடிதத்தை அவரைப் பார்த்துக் கொண்டே கிழித்தான். ராமநாதன் தன் எதிரே தெரிந்த படத்தையும் புத்தகங்கள் வழிந்த அலமாரியையும் அதன் கீழ் மேஜையில் இருந்த வெண் ரேடியோவையும் அதன் ஒற்றைக் கண்ணின் பச்சைத் துடிப்பையும் பார்த்துக் கொண்டிருந்தார்.

"என் பெற்றோர்களைத் தெரியும் என்கிறீர்கள், எப்படி?"

"ம்?" யோசித்தார்.

அவன் அந்தக் கேள்வியைத் திரும்பக் கேட்டான்.

"போர்ன்விடா. போர்ன்விடா... போன் வீ..... டா," என்றது ரேடியோ. மேலும் 'டிங் டிங்' என்றது.

"அந்த ரேடியோவை அணைத்து விடுகிறீர்களா? நாம் பேசப்போவது சற்றுத் தீவிரமான விஷயம்."

"சொல்லுங்கள்," என்றான் அணைக்காமல்.

"மிஸ்டர் ஜெயராமன், உங்களுக்குப் பம்பாயைச் சேர்ந்த ஜி.என். கிருஷ்ணன் என்பவரைத் தெரியுமா?"

ரேடியோவை அணைத்து விட்டான்.

கேட்டவுடன் அவன் அதிர்ந்தானா? தெரியவில்லை. அவன் கண்களில் வெளிச்சம் கம்மியாயிற்றா? கையில் இருந்த கடிதம் மிக மெலிதாக நடுங்குகிறதா? காற்றினாலா, இல்லை நடுக்கம்பினாலா? டில்லிக் குளிரா இல்லை, உள்ளக் குளிரா?

"ஜி.என்?"

"கிருஷ்ணன். ஃப்ளாட் எண் 503, பெட்டர் ரோடு, பம்பாய்."

"தெரியாது. ஏன்?"

"நான் நினைக்கிறேன் - உங்களுக்கு அவரைத் தெரிந்திருக்கும்."

"என்ன இது? நீங்கள் யார்?" சத்தியமாக அவன் கை நடுங்கியது. உட்கார்ந்திருந்த வாக்கில் கால்கள் மெதுவாகத் தாளம் போட ஆரம்பித்தன. இயல்பாக இருக்க முயலுகிறான்.

"நான் போலீஸ். பம்பாயைச் சேர்ந்தவன்."

"ஸோ?"

"கிருஷ்ணன் என்பவர் சென்ற மாதம் பதினெட்டாம் தேதி..."

"கிருஷ்ணன் என்பவரை எனக்குத் தெரியாதே."

"பொய் சொல்கிறீர்கள்."

"இன்ஸ்பெக்டர்!"

"நான் இன்ஸ்பெக்டர் இல்லை. ஸுபரின்டென்டெண்ட்."

"உங்கள் போலீஸ் முறைகளைப் பற்றி எனக்குத் தெரியாது. உங்களை இங்கே டில்லிக்கு எது கொண்டு வந்தது என்பதும் எனக்குத் தெரியாது. ஆனால் இந்த விதத்தில் என் வீட்டில் நுழைந்து என் அறையில் என் எதிரே எந்த ஆதாரமும் இல்லாமல் நேர்முகமாகத் தாக்கிக் கேட்பது தனிப்பட்டவனின் சுதந்திரத்தில் குறுக்கிடும் செயல். உங்கள் முறை சரியல்ல."

"நீங்கள் கிருஷ்ணனைக் கொன்றீர்கள்."

"வாட் டு யூ மீன்? எல்லை மீறுகிறீர்கள் நீங்கள். நீங்கள் பேசுவது எனக்குத் தலைகால் புரியவில்லை. உங்கள் கேள்விகளுக்கு பதில் அளிக்கவோ, உங்கள் அபத்தமான குற்றச்சாட்டுகளைக் கேட்டுக் கொண்டிருக்கவோ எனக்கு நேரமில்லை. நீங்கள் போகலாம்."



கை தட்டினார் ராமநாதன். "அழகாகப் பேசுகிறீர்கள் மிஸ்டர் ஜெயராமன். நீங்கள் அந்தப் பதினெட்டாம் தேதி காலை விமானத்தில் ராமன் என்ற பெயரில் பம்பாய் சென்றீர்கள்..."

"மேலே மேலே பேசிக்கொண்டே..."

"மாலை ஐ ஏ ஸி புக்கிங் ஆபீசுக்குப் போய் ரிடர்ன் டிக்கெட்டை கன்ஃபர்ம் செய்துவிட்டு டாக்ஸி ஏறி பெட்டர் ரோடு சென்றீர்கள்..."

இப்போது அவன் வாயை திறக்கவில்லை.

"சென்று, கிருஷ்ணனைச் சந்தித்து அவன் ஃப்ளாட்டில் அவனைக் கொன்றீர்கள். பலத்த சங்கீதத்தின் மத்தியில், அவன் கழுத்தைக் கயிறு கொண்டு இறுக்கி ஹையாய்ட் எலும்பு உடைய இறுக்கி இறுக்கி நீ! நீ! நீ கொன்றாய்! ஜெயராம்! நீ தான் கொன்றாய்!"

"இது தான் என் எல்லை" என்றான் ஜெயராமன்.

"கொன்று, மறுதினமே ப்ளேனில் திரும்பி வந்தாய்..." எப்போது ஏகவசனம் வந்தது என யோசித்தார்.

"வித்தியாசமாக ஏதும் நிகழ்வதற்குள் நல்லதனமாகப் போய் விடுங்கள். கெட் அவுட். யு இடியட்!"

ராமநாதன் அவன் சட்டையைப் பிடித்தார். கொத்தாக இறுக்கி. "நோபடி கால்ஸ் மி அன் இடியட், யங் மான்!" என்றார். அருகில், மிக அருகில் அவன் மூச்சின் உஷ்ணம் அவர்மேல் படும்போது, அவன் இதயத்தின் திடும் திடும் கேட்கும்போது. அவருக்குத் திடீரென்று அந்தச் சந்தேகம் வந்தது. இவன் தானா? இச் சங்கிலி தப்பு என்றால் எவ்வளவு அவமானம்! எவ்வளவு ரிஸ்க்! எவ்வளவு தூரம் சுதந்திரமாக நுழைந்திருக்கிறேன்? எவ்வளவு தூரம் வந்திருக்கிறேன்!

"இன்ஸ்பெக்டர்! (மறுபடி, மறுபடி இன்ஸ்பெக்டர் என்கிறான்) நான் ஐந்து எண்ணப் போகிறேன். அதற்குள் நீங்கள் இந்த இடத்தை விட்டு வெளியில் போக வேண்டும் இல்லை, உங்களுக்கும் எனக்கும் கை கலப்பு நிகழும். (தெரிகிறது, என் தயக்கத்தை உணர்ந்து விரட்டுகிறான்) என் உடலமைப்பைப் பார்த்துவிட்டு யோசியுங்கள்! சட்டையை விடுங்கள். சே!"

விட்டுவிட்டார். அரை நிமிஷம் என்ன பேசுவது என்ன செய்வது என்பது புரியவில்லை. ஆதாரங்களில் ஏதாவது தப்பு இருக்கிறதா? இது தப்பான இடமா? நிஜமாகவே இவனுக்குக் கிருஷ்ணனைத் தெரியாதா? சட்! என்ன ஒரு தயக்கம்! என்ன செய்யலாம்?

"நான் மறுபடி வருகிறேன்" என்று சொல்லி விட்டுக் கிளம்பினார்.

"இன்ஸ்பெக்டர்! உங்கள் கூலிங் கிளாஸ்!" என்று மேஜை மேல் அவர் மறந்துவிட்ட கண்ணாடியை எடுத்து, "காச்!" என்று சொல்லி எறிந்தான். அவர் பிடித்தார். மனத்தினுள் ரொம்ப அபத்தமாக உணர்ந்தார்.

"அடுத்த தடவை வரும்போது சரியாக விசாரித்துவிட்டு ஷ்யூராக வாருங்கள். மிட்டாய்க் கடையில் புத்தகம் கேட்காதீர்கள்!" என்றான் சிரித்து.

"வருகிறேன், நிச்சயம்," என்றார் ராமநாதன்.

கதவை ஓங்கிச் சாத்திக் கொண்டான். இறங்கி வந்த ராமநாதன் மேலே பார்த்தார். கதவு மூடியிருந்தது. ஜன்னல்களும் மூடியிருந்தன. சரேல் என ரோட்டைக் கடந்து எதிரே இருந்த டீக்கடையில் நுழைந்து ரொட்டி முதலியவை அடுக்கியிருந்த அலமாரிக்குப் பின் இருந்த நீல பெயிண்ட் அடித்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார். அங்கிருந்து அந்த மாடி தெரியவில்லை.



ஆனால் வீட்டின் பொதுவாசல் தெரிந்தது. ஒரு 'சாய்' ஆர்டர் செய்து விட்டு அந்த வாசலையே கவனித்துக் கொண்டிருந்தார்.

கண்ணை அந்த வாசலிலிருந்து பெயர்க்கவே இல்லை. மெதுவாகப் பத்து நிமிஷமாக இழுத்துக் குடித்தார் டீயை.

மற்றொரு டீ.

வைத்த கண் வாங்கவில்லை. பாதி டீயில் பையில் சில்லறை தேடி, அதை அப்படியே மேஜைமேல் வைத்து விட்டுக் கிளம்ப ஆயத்தமானார். காரணம்:

எதிர் வீட்டு வாசலில் ஒரு டாக்ஸி வந்து நின்றது. நின்றவுடன் ஜெயராமன் கீழே இறங்கி வந்தான்.

கையில் ஒரு ஸூட்கேஸுடன்.

டாக்சிக் கதவைத் திறந்த கையை ராமநாதன் பிடித்தார். "தப்பி ஓடுவதில் பயனில்லை. நான் விசிலடித்தால் ஐந்து போலீஸ்காரர்கள் வருவார்கள். எதற்கு நடுத்தெருவில் ஆர்ப்பாட்டம்? நீ பம்பாயில் நிறைய விரல் அடையாளங்கள் விட்டுச் சென்றிருக்கிறாய். என் கூலிங் கிளாஸில் உன் விரல் அடையாளங்கள் பதிந்து பத்திரமாக இருக்கின்றன... பிரயோசனமில்லாத போராட்டம் இது," என்றார்.

***சுநந்தாவின் டயரியிலிருந்து...***

*"டெமாரியர் புஸ்தகத்தைப் படித்து முடித்தேன். ரெபக்கா போல எதுவும் வராது! சுநந்தா, நீ ரொம்பக் கெட்டவள். உருப்பட மாட்டாய். உனக்கு தைரியம் ஜாஸ்தி ஆகி விட்டது. உனக்கு பயமில்லாமல் போய்விட்டது. இன்றைக்கு நடந்ததற்கு நீ சம்மதித்திருக்கக் கூடாது. என்ன நடந்தது. மாடிப்படியிலே இருட்டிலே... நீ எழுதாதே!"*

வேடிக்கை டூர் போயிருக்கிற அண்ணா என்னைக் கவனித்துக் கொள்ள கிருஷ்ணனைச் சொல்லியிருக்கிறான்! என் அன்புள்ள மடையா! என் அண்ணா!

ஆம்!

ஆம்!

ஆம்!

அன்புள்ள கடவுளுக்கு, உங்களுக்கு என் மகா மகா வந்தனங்கள் பல. என்னைப் படைத்ததற்கு. என்னை இந்த வருஷம் பதினெட்டு வயதாக்கி எனக்கு மனத்தைக் கொடுத்து தனிமையைக் கொடுத்து, கிருஷ்ணன் என்கிற அழகான அயோக்கியனைக் கொடுத்து, அவனுடைய மகா தீவிரமான ஆண்மை என்கிற வலிமைப் புயலிலே என்னை அலைக்கழிக்க வைத்து என்னை மறந்து நான் செந்தீயால் எரிந்த மூன்று இரவுகளுக்காக, வலித்த வலிகளுக்கு, சிந்தின கண்ணீருக்கு, சிரித்த சிரிப்புக்கு. என் இதயத்தின் படபடப்பை எனக்குக் கேட்க வைத்ததற்கு, என்னிடமிருந்து பிரவாகமாய்ப் பாய்ந்த ஆசைக்கு, நான் பிறவி எடுத்ததற்கு, தாங்க் யூ காட். நான் செய்தது தப்பா? எனக்குப் புரியவில்லை. பகவானே! தப்பிருந்தால் என்னை ப்ளீஸ் ப்ளீஸ்! மன்னித்து விடுங்கள். எனக்கு என்னவோ தப்பான காரியத்தில் இவ்வளவு பூர்ணமான சந்தோஷம் ஏற்படுமா என்று சந்தேகம் வருகிறது. சந்தோஷமா, துக்கமா அது? என் கண்கள் நனைந்தது எதனால்?

எதனால் நடந்தது? என் தனிமையாலா? எந்தச் சந்தர்ப்பத்தில் நான் விட்டுக் கொடுத்தேன்? மார்மேல் ஜாஸ் ரிக்கார்ட்களை அணைத்துக் கொண்டு வந்தானே, வந்து கதவில் ப்ரேம் போட்டாற்போல் நின்றானே? அப்போதா? ப்ளேயரில் அவைகளைப் போட்டு அந்த சங்கீதத்தின் துடிப்புக்கு ஏற்ப என் 'ஹார்ட்' துடிக்க ஆரம்பித்ததே அப்போதா? சாமர்த்தியமாக ஒவ்வொரு லைட்டையும்



அணைத்த போதா? என் காதருகே கேட்ட அந்த வார்த்தைகளின் போதா?

எப்போது?

கிருஷ்ணனின் பொன் மொழிகள்.

"ட்ரை எனிதிங் ஒன்ஸ்!"

"தப்பு, வரம்பு என்பதெல்லாம் மனுஷன் வகுத்த நியதி. அதற்கு நாம் கட்டுப்படவேண்டிய அவசியமில்லை. கடவுள் வகுத்த நியதி ஒன்றே ஒன்று. மற்ற உயிர்களுக்குத் துன்பம் கூடாது." (பெரிய புத்தர்).

"நாம் மூச்சு விடும் மிஷின்கள் இல்லை!"

"உடம்பு எதற்கு இருக்கிறது? இந்த மாதிரி பரிசோதனைகள் செய்ய."

("நோ! நோ!" - நான்)

"உன் தனிமையும் என் தனிமையும் ஒன்றுக்கொன்று ஆறுதல் தேடுகிறது. அதனால் தான் இது நேர்ந்தது."

"கிருஷ்ணா, என்னைத் தவிர நீ... என்னைத் தவிர நீ..."

"சீ! நான் என்ன அந்தக் கிருஷ்ணனா? சுநந்தா நான் எனக்கே வரம் தந்தேன். ஒரு புதிய அனுபவத்திற்கு உன்னை அறிமுகப்படுத்தினேன். ஒரு புதிய அக்னிக்கு..."

அக்கினிதான்!

தீக்குள் விரலை வைத்தால் நின்னைத் தீண்டுமின்பம் தோன்றுதடா நந்தலாலா!

லாலல்லலா! எனக்குப் பைத்தியம்!

"ஃபீவர்" என்கிற பாட்டைப் பத்துத் தடவை போட்டுக் கேட்டேன்.

அந்தக் கடைசி வரி என்ன உண்மை:

"வாட் எ லவ்லி வே டு பர்ன்!"

*

எவ்வளவு தினங்களுக்குப் பின் நான் மறுபடி எழுது கிறேன். இவ்வளவு நாட்கள் நான் எழுதாமல் இருந்ததற்குக் காரணம் எழுத வேண்டிய விஷயத்திலே உள்ள என் பயம்?

இரண்டு விஷயங்கள்:

ஒன்று : கிருஷ்ணன் எங்கே போய்விட்டான் சொல்லா மல் கொள்ளாமல்... அவன் செய்த சத்தியங்கள் என்ன ஆயின? அண்ணா சொல்கிறான்: "மட ராஸ்கல்! எங்கேபோகிறேன் என்று கூடச் சொல்லவில்லை. ந்யூஸ் பேப்பர் கணக்கைத் தீர்த்திருக்கிறான். மெஸ் பாக்கியைக் கொடுத்திருக்கிறான். என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை," என்னிடமும் சொல்ல வில்லையே? ஒருத்தரிடமும் சொல்லாமல் அழுகிறேன். ஊமையாய் மனம் பாரமாய் நெருப்பை விழுங்கி விட்டு அவஸ்தைப்படுகிறேன். அண்ணா புரியாமல் ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய் என்று 'பி.ஜி. பாஸ்' வாங்கிக் கொடுத்திருக் கிறான்.

அவனுக்கும் தெரியாதே?

இப்பொழுது என் தீர்மானம் ஏற்பட்டதும் எழுத வேண்டியது அவசியமாகி விட்டது. முதலில் அண்ணாவிடம் சொல்ல வேண்டும். பயப்படக் கூடாது. பயப்பட்டு என்ன பிரயோசனம்? எப்படிச் சொல்வது? அண்ணா, நான் மாறி விட்டேன். அந்தத் தப்பை நான் செய்து விட்டேன் என்றா? இங்கிலீஷிலா? இங்கிலீஷில் கொஞ்சம் நாஸூக்காகச் சொல்லலாம்.

ஏனோ எனக்கு இப்பொழுது அழுகை வரவில்லை. இதை நான் எதிர்பார்த்தேனா? விரும்பக்கூட விரும்பினேனா! கிருஷ்ணன் வந்து விடுவான். ஏற்றுக்கொள்வான் என்று நம்பினேனா? அவனிடமிருந்து கடிதமே இல்லையே! அவனுக்கு இது தெரிந்திருக்குமா? எப்படி? அண்ணா எப்படி எடுத்துக்கொள்ளப் போகிறான்? அவன் இதற்குத் தயாராகவே இல்லையே! என்னை அடிப்பானா! அடித்தால் என்ன! அடிப்



பானா? நானே அழவில்லையே! கண்ணாடி டம்ளரை உடைப் பானா? அவ்வளவு கோபத்திலே என்ன செய்வான்? அண்ணா, இது நடந்ததற்குக் காரணம் என் தனிமை. தனிமை தனிமை தனிமை என்று நூறு தரம் சொல்ல வேண்டும். என்னைப் புறக்கணித்து விட்டு நீ ஆடின பிரிட்ஜ்? என்னை விட்டு விட்டு நீ போன டூர். என் மூளைக்கு எட்டாமல் நீ பேசின நான் சென்ஸ்கள். நீ வைத்திருக்கும் புரியாத புஸ்தங்கள். நீ கேட்கும் சாய்காவ்ஸ்கியின் ஸிம்ப்பனி. என் தனிமை! தாயில்லாமல், அப்பனில்லாமல் நான் வாழ்ந்த ஒற்றை வாழ்க்கை. ஆதர வில்லாமல் அணைப்பில்லாமல் ஆண்களின் அகங்காரம் சூழ்ந்த வாழ்க்கை!

எப்படிச் சொல்லப் போகிறேன்?

*

சொன்னேன். கேட்டவுடனே கன்னத்தில் பளேர் என்று அறைந்தான். 'என்னைத் தனியாக விட்டுவிடு. மேலே பேசாதே' என்றான்.

நான் இருட்டிலே இந்த ரூமில் உட்கார்ந்து மெதுவாக அழுத்துக் கொண்டிருந்தேன். அரை மணிக்கப்புறம் என்னைக் கூப்பிட்டான். என் தலையைத் தடவிக் கொடுத்தான். கிருஷ்ணன் தான் என்று ஷ்யூராகத் தெரியுமா என்று கேட்டான். தலையை ஆட்டினேன். கிருஷ்ணனைத் தீரத் திட்டினான். அந்த மாதிரி வார்த்தைகள் நான் கேட்டதே இல்லை. அப்புறம் சொன்னான். 'சுநந்தா, உனக்கு வயசு பதினெட்டு. இப்பொழுது நாம் போய்க் கிருஷ்ணனைத் தேடிப் பிடித்து அவன் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள வைத்து இதை 'ரெகுலரைஸ்' பண்ணினாலும் கஷ்டப்படப் போகிறவள் நீதான். எத்தனை தடவை மிஸ் பண்ணியிருக் கிறாய்? சொன்னேன்.

"கிருஷ்ணனை நான் கவனிக்கிற விதத்திலே கவனித்துக் கொள்கிறேன். அது அப்புறம். இப்ப எனக்கு முக்கியம் நீ.

உனக்கு விடுதலை தர வேண்டும். உன் வாழ்க்கை இப்ப ஆரம்பிக்கக் கூடாது சத்தியமா! போய் ட்ரெஸ் பண்ணி கொள். என் கூட வா" என்றான்.

நான் புரிந்தும் புரியாமலும் அவனுடன் போனேன். சந் வழியாக அந்த இடத்துக்குப் போனேன். வெள்ளைத்திரை கண்ணாடியுமாக அழகாகத்தான் இருந்தது அந்த இட டாக்டர் இருக்கிறார். ப்ளீஸ் வெய்ட் என்று போர்டு போ ருந்தது. ஜெர்மனியில் படித்ததற்கு அத்தாட்சியாக சர் கேட் ப்ரேம் பண்ணியிருந்தது. புத்தகங்கள் பெரிது பெரி அலங்காரமாக அடுக்கியிருந்தது. அந்த டாக்டர் வந் அவருக்கு 45 வயது இருக்கும். கவனமாக அக்கறை அண்ணா மழுப்பி மழுப்பிச் சொன்னதைக் கேட் ஒவ்வொரு தடவையும் 'ஐ அண்டர்ஸ்டாண்ட்' என் அப்புறம் என்னைப் பார்த்து "நீ பயப்படக்கூடாது. ஐம் கோயிங் டு ஹர்ட் யூ... நான் உன்னை எக்ஸாமின் பண் போகிறேன். நீ என்னிடம் பயப்படவே வேண்டாம். நா உனக்கு அப்பா போல! என்னுடன் உள்ளே வா!" என் உள்ளே சில தேதிகள் எல்லாம் கேட்டார். பார்த்தார்.

வெளியே வந்ததும் அண்ணாவிடம் சன்னமாகச் சொ னார். சொன்னது கொஞ்சம்தான் கேட்டது. "ஷி இஸ் டு திங்கள்கிழமை வைத்துக்கொள்ளலாம். காலை ஏழு ம வந்து விடட்டும். ஒன்றும் சாப்பிட வேண்டாம். மாத் எழுதித் தருகிறேன். அதை ராத்திரி சாப்பிடட்டும். ஒரு மணி அனஸ்தீஸியா மயக்கத்தில் இருப்பாள். அவ்வளவு நான் செக் வாங்கிக் கொள்வதில்லை. எனக்கு 'காஷ்' வேண்டும். 7மணி ஞாபகமிருக்கட்டும்!

எனக்கு பயமாக இருக்கிறது!

எனக்கு பயமாக இருக்கிறது!

எனக்கு பயமாக இருக்கிறது!

## சுநந்தாவின் டயரி — 13

"**நா**ன் இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? கைகளை யரத் தூக்க வேண்டுமா?" என்றான் ஜெயராமன்.

"தேவையில்லை. டாக்ஸிக்கு உண்டான பணத்தைக் காடுத்துவிட்டு என்னுடன் மேலே வரவேண்டும். உன்னுடன் பேச வேண்டியது இருக்கிறது," என்றார் ராமநாதன்.

இந்தியில் பேசிப் பணம் கொடுத்துவிட்டு. "வாருங்கள்" என மேலே சென்றான்.

"எங்கே ஆரம்பிக்க வேண்டும்?"

மாடியில் தனிமையில் அவர்கள் எதிர் எதிரே உட்கார்ந்தி ந்தார்கள்.

"முதலில் ஹீட்டரைப் போடு. குளிர் தாங்கவில்லை... தட்ஸ் பட்டர்! ஜெயராமன், சொல்! நீ ஏன் கிருஷ்ணனைக் கான்றாய்?"

ஜெயராமன் சுதாரித்து உட்கார்ந்து கொண்டு தன் நகங் ளைப் பார்த்துக் கொண்டான். அவரைப் பார்த்தான். "காரணம்... காஞ்சம் இருங்கள். நான் ஏன் உங்களிடம் இதை எல்லாம் சால்ல வேண்டும்? நான் என் லாயரைப் பார்க்க வேண்டும். என் மேல் இந்தக் குற்றத்தை உங்களால் லேசில் நிரூபிக்க முடி து. உங்கள் சட்டங்களின் தேவைகளே உங்களைத் தோற் த்து விடும். மாட்டேன். நான் சொல்லமாட்டேன்."

"ஜெயராமன், இப்பொழுது மணி என்ன?"

"எட்டு பதினாறு."

"இப்பொழுதிலிருந்து நான் இந்த அறையை விட்டு வெளியில் செல்லும் வரை என்னிடம் நீ சொல்லப்போவது முழுவதும் ஆஃப் தி ரிகார்ட்! பேப்பர் கிடையாது. பென்சில் கிடையாது. டேப்ரிகார்டர் கிடையாது. எனக்கு இந்தக் கேஸ் தனிப்பட்ட கேஸ். உன்னைப்பற்றிய தடயங்களில் தடுக்கி தடுக்கி விழுந்து இங்கு வந்து சேர்ந்திருக்கிறேன். என்னிடம் நீ சுதந்திரமாகப் பேசலாம். நாளை யாராவது கேட்டால். 'அய்யோ, நான் ஒன்றுமே பேசவில்லையே,' என்று சாதிக்கலாம். எனக்குத் தெரிய வேண்டியவை நடந்த நிஜங்கள். போலீஸ் உபயோகத்துக் கல்ல. என் சொந்த உபயோகத்துக்கு. என் சித்திரம் பூரணமடைவதற்கு. உன்னுடன் பேசுவது ஒரு போலீஸ்காரன் அல்ல. செஸ் ஆட்டத்தில் வெற்றி கண்டவன் அவனிடம் தோற்றவனுடன் நடந்த ஆட்டத்தை விமரிசனம் செய்வது நம் சம்பாஷணை. சொல், ஏன் கொன்றாய்?"

"சுநந்தா" என்றான் ஜெயராமன்.

"யார் இந்த சுநந்தா?"

"ஒரு பெண்."

"அஃப்கோர்ஸ்."

"கொஞ்சம் இருங்கள்" என்று எழுந்தான் ஜெயராமன்.

அலமாரியைத் திறந்தான். திறந்து ஒரு சாவியை எடுத்தான். எடுத்து ஒரு பெட்டியைத் திறந்தான். திறந்து அதிலிருந்து நாஃப்தலின் மணக்கும் ஒரு டயரியை எடுத்தான். "இதைப் படியுங்கள். இது சுநந்தாவின் டயரி... அந்த நிகழ்ச்சியின் பின்னணிச் சம்பவங்கள் புரிவதற்கு நீங்கள் இதைப் படிப்பது தேவை!"



ராமநாதன் அதைப் புரட்டினார். முதல் பக்கத்தில் "இந்த டயரியை என் அனுமதி இல்லாமல் திருட்டுத்தனமாகப் படிக்கிறவர்கள் ஆயிரம் வருஷம் நரகத்தில் தலை கீழாகத் தொங்குவார்கள்" என்று எழுதியிருந்தது. நிமிர்ந்தார்.

"அனுமதி தருவதற்கு அவள் இல்லை. படியுங்கள்" என்றான். "மேலும் படிக்க அரை மணியாவது ஆகும். நான் எங்கும் தப்பிவிட மாட்டேன். அதற்கு ஒரு வழிதான் வாசலுக்குச் செல்லும் வழி. உள்ளே போய் உங்களுக்குக் காப்பி தயாரிக்கிறேன். சரிதானே?"

"சரி" என்றார்.

நிதானமாக அந்தப் பக்கங்களைப் புரட்டினார். தேதி போடாத டயரி. வலது பக்கம் சாய்ந்த எழுத்து. க்ச் எல்லாவற்றிற்கும் தலைமேல் ஆணி அடித்தாற் போலப் புள்ளி. ழ முதலிய எழுத்துக்களில் சில அனாவசியமான அலங்காரங்கள். சில பக்கங்களில் சுநந்தா, ஆர் சுநந்தா என்று தினுசு தினுசாகக் கையெழுத்து. அப்புறம் வத்ஸலா ஒரு ஃபூல் என்று ஒரு பக்கம் முழுவதும் எழுதியிருந்தது...

சுநந்தா!

அவள் டயரியின் அந்தப் பக்கங்களை ராமநாதன் மிக மெதுவாகப் படித்தார்...

ராமநாதன், படித்து முடித்தார். அதற்கு முன்பே வந்து உட்கார்ந்து காத்திருந்த ஜெய்ராமன், "அவள் அந்த ஆபரேஷன் நடந்த மூன்றாவது தினம் இறந்து போனாள்" என்றான்.

## சீட்டு மாளிகை — 14

"என்னா?"

"ஆம் மூன்று நாள்! துருப்பிடித்த பேராசை கொண்ட கத்தியில் அறுபட்டு உயிர் விட்டாள்... ஸெப்ஸிஸ். இண்டர்னல் ஹேமர்ரெஜ்! எனக்கு இது முதலில் தெரியாது..."

"கொஞ்சம் இரு... இதில் வருகிற 'ஜெ' என்பது..."

"நான் தான். சுநந்தாவை எனக்கு இவ்வளவு உயரத்திலிருந்து தெரியும். அவள் அண்ணனையும் தெரியும். அந்த மகாப் பிரபு! அவன் என்ன செய்திருக்கிறான்... ஒருவரையும் கேட்காமல்... அவனுக்குக் கேட்பதற்கு ஆசாமிகளும் இல்லை. தானே உற பில்... அந்த டாக்டரிடம் தீர்மானித்து தன் தங்கைக்கு நல்லது செய்கிறோம் என்று முட்டாள் தனமாக முடிவு செய்து கொண்டு போயிருக்கிறான்... எனக்கு இது முதலில் தெரியாது. அவள் அண்ணனை நான் முதல் நாள் பார்த்தேன். அவன் பெயர் நாராயணன்... வீட்டுக்குப் போயிருந்தேன். சுநந்தா எங்கே என்றால் ஆஸ்பத்திரியில் இருக்கிறாள் என்கிறான். அவனும் ஆஸ்பத்திரிக்குத் தான் கிளம்பிக் கொண்டிருந்தான். என்னடா உடம்பு என்றால் வயிற்று வலி என்று யோசித்துக் கூறுகிறான். கையைப் பிசைகிறான். பலி ஆடு போல விழிக்கிறான்.



"முதலிலேயே ஏதோ தப்பாக நடந்திருக்கிறது. மூன்று தினங்கள் பாதி மயக்கம் பாதி விழிப்பில் பேசாமலேயே அவஸ்தைப்பட்டு இறந்தாள். அந்த தினங்கள் நாங்கள் ஓடிய ஓட்டமும் அவனைச் சில டாக்டர்கள் திட்டின திட்டும், பிடித்த டாக்ஸிகளும், குடித்த சிகரெட்களும் கணக்கில் அகப்படாதவை!

"மறக்க முடியாத புதன்கிழமை ஸார்! சாஸ்திரிகள் சைக்கிளில் வந்து இறங்கினது ஞாபகம் இருக்கிறது. நம் சடங்குகளின் தில்லி தழுவலில் அவசரமா நடந்த காரியங்கள் ஞாபகம் இருக்கிறது. தூரத்து உறவினர் சிலரும். ஏராளமான நண்பர்களும் வந்து நின்றதும் அவர்கள் எல்லோர் முகத்திலும் தெரிந்த கேள்விக் குறியும் நாராயணன் ஒரு யந்திர மனிதன் போல நடந்ததும்...

"சுநந்தா, என் அருமை சுநந்தா, என் காதலி, வேளைக்கு வேளை என் கற்பனையில் வடிவம் மாறும் சுநந்தா. செத்துப் போனாள்! நல்ல நீல வானின் கீழ் எரிந்தாள்.

"சாம்பலைக் கிளறி எலும்பு பொறுக்கச் சொன்னார்கள் நாராயணனை. அன்றுதான் நாராயணனும் உடைந்தான். ஒரு ப்ளேடை உபயோகித்து ஜுகுலர்வீய்னை வெட்டிக் கொண்டு விட்டான். அறை முழுவதும் சிவப்பைக் கொட்டிவிட்டுத் தன் இருதயத்தைக் காலி செய்து விட்டுச் செத்தான்!"

ராமநாதன் சிலிர்த்துக் கொண்டார்.

"மூன்று இராக்கள்! மூன்று தினங்களில் இந்த ஆச்சரிய ரசாயனம் பூரணமடைந்திருக்கிறது. உயிருடனிருந்த இரண்டு பேர் அண்ணன் தங்கை! அவர்களை எரித்துக் காற்றில் பாஸ்பரஸாகக் கரைக்க வைத்த ரசாயனம்! சொல்லுங்கள் ராமநாதன், அவ்வளவு பெரிய சாதனை செய்தவனுக்குத் தகுந்த பரிசு

வேண்டாம்? கிருஷ்ணன்! டயரியில் சுநந்தா அப்படி உருகு கிறாளே அவனை நினைத்து. அவன் என்ன சொன்னான் தெரியுமா சுநந்தாவைப்பற்றி! 'ஷி இஸ் குட் இன் பெட்!' ராஸ்கல்! பணம் படைத்த பொறுக்கி!

"அவன் சுமார் ஐந்தரை அடி உயரமிருந்தான். ஆழமான கண்கள். முகத்தைப் பார்த்தால் குழந்தைமுகம். சற்றே பெண்மை தெரியும் முகம். அன்பையும் ஆதரவையும் எதிர்பார்க்கும் ஏக்கம் தெரிகிற முகம். தாய்மை விரும்பும் முகம். இந்த மாதிரி முகம் பெண்களை நிச்சயம் கவரும். சைக்காலஜியின் அப்பட்ட மான விதி இது. பெண்கள் ஆண்களை அணைத்துக் கொள்ளும் போது காதலுக்கும் முன்னே மிருக ஆசைக்கும் முன்னே ஏற் படும் உணர்ச்சி தாய்மை உணர்ச்சி என்று. அவன் குரலில் ஆழம் இருந்தது. பாலமுரளிகிருஷ்ணா போல உடம்புக்கு சம்பந்த மில்லாத குரல். வசீகரமான குரல். அவன் டில்லியில் ஆறுமாதம் தான் தங்கியிருந்தான். எங்களுடன் ப்ரிட்ஜ் ஆட வந்தான். சுநந்தாவைப் பார்த்தான். தன் ஆர்வத்தின் இலக்கை மாற்றிக் கொண்டு விட்டான். அவள் மாறினாள், மாற்றப்பட்டாள். டயரி யில் தெரிகிறது. அவன் அணுகல் முறை, அவள் தனிமையைப் பயன்படுத்திக் கொண்டு ஜாஸ் இசையின் மத்தியில் அவள் முடிவுக்கு ஆரம்பம் செய்திருக்கிறான். நாங்கள் எவரும் சந்தேகிக்காத வகையில் அவன் அண்ணனுக்கு நம்பிக்கை தரும் வகையில் நடந்திருக்கிறான். அவன் குறிக்கோள், ஒரே குறிக்கோள் அந்தப் பெண்ணின் உடம்பு! இல்லை, பெண் களின் உடம்பு! முதல் பரிச்சயம் ஏற்பட்டதும் அலுத்துவிடும் அயோக்கியன்!

"ஸார், இந்த மாதிரி செய்தவனை என்ன செய்வது? ஒரு பெண்ணையும் அவள் அண்ணனையும் (கையைச் சொடுக்கி)



இந்த நேரத்திற்குள் அழித்தவனை என்ன செய்வது? சட்டப்படி கேஸ் போடுவதா? என்ன கேஸ் போடுவது? ஒரு இளம் பெண்ணைப் பலாத்காரம் செய்தான் என்றா? சூப்ரென்டெண்ட் ஸார். நானும் ஐ.பி.ஸி. படித்திருக்கிறேன். 'ரேப்' என்பதை அதில் அறுதியிட்டவன் பெரிய ஆள்! எவ்வளவு விஷயங்கள் நிரூபிக்க வேண்டும் தெரியுமா? சம்பந்தமில்லாத தன்மை! வயதுக்கு சர்டிபிகேட்! சட்ட வார்த்தைகளின் ஈரமில்லாத தன்மையில் கோர்ட்டின் தேக்குமரச் சூழ்நிலையில், ஒரு பெண் இறந்ததற்குக் காரணம் அந்த ராஸ்கலின் செயலின் விளைவு தான் என்று நிரூபிக்க வேண்டாம்? எவ்வளவு சுலபமான காரியம்! அப்படி நிரூபித்தால் என்ன கிடைக்கும் அவனுக்கு? ஆறு மாதமா ஒரு வருடமா? போதுமா? போதுமா?

"சுநந்தாவின் டயரியை நான் அவளும் அவனும் இறந்த பின்தான் படித்தேன். நாராயணன் எனக்கு ஒரு ஒற்றை வரிக் குறிப்பு எழுதி வைத்துவிட்டுத்தான் செத்தான். "அலமாரியில் சுநந்தாவின் டயரி இருக்கிறது. படி, எல்லாம் புரியும்." நாரா யணன் ஒரு அப்பாவி. அப்பாவி. அவ்வளவு தீவிரமான பிரச் சினையைச் சமாளிக்கத் திணறியவன் சமாளித்த விதம் சரி யில்லை எனத் தெரிந்ததும் சுநந்தாவின் இறப்புக்குக் காரணம் தன் அவசர முடிவு தான் என்கிற சோகத்தில் உயிர் வாழப் பிடிக்க வில்லை.

"டயரியைப் படித்ததும் முடிவுக்கு வந்தேன். நான் கிருஷ்ணனுக்குத் தண்டனை கொடுக்கப் போகிறேன்! இதில் வஞ்சம் கொஞ்சமும் இல்லை. நான் யார்? சுநந்தா யார்? ஆனால் அவர்கள் சோக முடிவின் பரிச்சயம் ஏற்பட்ட எவனும் எந்த புத்தியுள்ளவனும் கடமையாக ஏற்கக் கூடியது கிருஷ்ணனைக் கொல்வது. அந்தக் கடமையை நான் ஏற்றுக் கொண்டேன்;

தேடினேன் அதுதான் அப்பொழுதைய என் மகா அப்ஸெஷன்! கிருஷ்ணன் உயிருடன் இருக்கிறான். இருக்கக் கூடாதவன் இருக்கிறான்.

"நீங்கள் போலீஸில் எப்படிச் செய்வீர்களோ அதை விட சீராக விசாரித்தேன். அவன் வேலை செய்த இண்டியன் ஆயில் கார்ப்பரேஷனில் விசாரித்தேன். அட்ரஸ் விட்டு வைக்காமல் சென்றிருந்தான். நண்பர்கள் முப்பது நாற்பது பேரை விசாரித்தேன். தகவல் இல்லை. முயன்று கொண்டே இருந்தேன்.

"மிகவும் தற்செயலாக எனக்கு அவனைப் பற்றித்தகவல் கிடைத்தது. என் நண்பர் ஒருவர் வீட்டில் ஒரு பெட்ரோலியம் கம்பெனியின் மாதாந்தர மாகஸின் பழைய பிரதி இருந்தது. டெலிவிஷன் பார்க்கச் சென்றிருந்தவன் காத்திருந்த போது அதைப் புரட்டிக் கொண்டிருந்தேன். திடீரென்று கிருஷ்ணனின் புகைப்படம் ஒரு பக்கத்தில் தென்பட்டது. அதன் அடியில் நம் கம்பெனியில் பம்பாய் ஆபீஸில் புதிதாக மானேஜ்மெண்ட் பிரிவில் சேர்ந்திருக்கும் திரு. ஜி. என். கிருஷ்ணன் என்று. அவன் படிப்பு விவரங்கள் அச்சிட்டிருந்தது.

"அப்புறம் என் வேலை சுலபமாகி விட்டது. பம்பாய் நண்பர் ஒருவருக்கு எழுதி டெலிபோன் டைரக்டரியில் அவன் பெயர் விலாசம் இருக்கிறதா என்று கேட்டேன். கிடைத்தது.

"எனக்கு இருப்புக் கொள்ளவில்லை. பறந்தேன் பம்பாய்க்கு. மாலை வந்தேன். மறுநாளைக்கு - ரிடர்ன் புக்கிங்கை கன்பர்ம் செய்துவிட்டு நேராக அவன் வீட்டுக்குச் சென்றேன். சொன்னேன். அதே ஜாஸ் சங்கீததின் மத்தியில், அவன் கழுத்தில் கயிறு இறுகும் போது, மூச்சுக்கான இலக்கு இல்லாமல் அவன் கைகள் அடித்துக்கொண்ட போது. என் ஆத்திரத்தின்



அபரிமிதமான சக்தியில் அவன் துவண்டபோது எனக்குச் சிரிப்பு வந்தது.

மறுநாளே திரும்பி வந்தேன்.

"நடந்தது நடக்கட்டும். என் வரையில் என்னைத் தொடராமல் இருப்பதற்கு உண்டான ஜாக்கிரதைகளைச் செய்து கொண்டேன். அதற்கப்புறம் ஆனால் சுலபமாக நடந்ததை மறந்து விட்டேன். பம்பாய்ப் பேப்பர்களைப் பார்க்கவில்லை. பதற்றப் படவில்லை. மேலும் கீழும், சிகரெட் பற்றவைத்துக் கொண்டு நடக்கவில்லை. பயப்படவில்லை. மறுநாள், நம்ப மாட்டீர்கள், மத்யானம் ஆபீஸ் போயிருந்தேன். என் மனத்தில் தெரிந்த உணர்ச்சி திருப்திதான்! ஆம். மித மிஞ்சிய திருப்தி.

"இப்பொழுது நீங்கள் வருவதைக்கூட ஒரு விதத்தில் எதிர்பார்த்து அதற்குத் தயாராகத்தான் இருந்தேன். அவர்களுக்கு சாமர்த்தியமிருந்தால் இங்கேவரட்டும். என்னை ஒருவரும் பார்க்கவில்லை. எனக்கும் கிருஷ்ணனுக்கும் இருந்த பரிச்சயத்தை ஒருவரும் காண முடியாது... பைதிவே, எப்படிக் கண்டு பிடித்தீர்கள் ?"

"உன் டெலிபோன் நம்பர் அவனிடம் இருந்தது."

"ஓ ஹெல்! ஸ்மார்ட் ஓர்க் ஸார்."

"அதை விடுங்கள்..."

"என்ன சொல்லிக் கொண்டிருந்தேன்... அ! போலீஸ் இங்கே வரட்டும். வந்தால் பரவாயில்லை. வந்தால் என்ன ஆகும்? என்னைக் கைது செய்வார்கள். என் காரணத்தைச் சொல்வேன். அல்லது ஒரு புத்திசாலியான வக்கீல் கேஸைப் பிய்த்து உதறி விட்டுத் தப்ப வைக்கலாம். தப்பாவிட்டாலும் என்ன ஆகும்? சிறைக்குப் போவேனா? பதினைந்து வருஷமா? அல்லது

தொங்குவேனா? எனக்கு இந்தத் தருணத்தில் ஒன்றைப் பற்றியும் கவலையில்லை. நான் மணமாகாதவன். என் தங்கை மணமாகி குவைத்தில் இருக்கிறாள். பெற்றோர்கள் கிடையாது... என்னைப் பற்றிக் கவலைப்பட ஆட்கள் கிடையாது. மனசு விரும்பிய ஒரு காரியம் செய்தேன். அந்தத் திருப்திக்காக ஆயிரம் வாழ்நாட்களைப் பலி கொடுக்கலாம். அவ்வளவுதான் இப்பொழுது என்ன செய்யப்போகிறீர்கள்? என் கையில் ஏதாவது மாட்டி எங்காவது அழைத்துச் செல்லப் போகிறீர்களா? அடடா. காப்பி அப்படியே ஆறிப் போய் விட்டது."

அந்தக் காப்பியின் மேல் தளத்தில் விளையாடிய ஏட்டின் மடிப்புக்களைச் சற்றுநேரம் பார்த்துக் கொண்டிருந்தார் ராம நாதன். மெதுவான பெருமூச்சுக்கப்புறம் கொஞ்ச நேரம் சும்மா இருந்தார்; அப்புறம் சொன்னார்.

"உன்னைப் பொறுத்தவரையில் நீ கிருஷ்ணனைத் தண்டித்து விட்டாய். இது ஒரு வினோதமான கேஸ்! நீ சொல்கிற மாதிரி சட்டத்தின் வழியில் அவனுக்கு இந்தத் தண்டனை கிடைத்திருக்காது. ஒரு புத்திசாலி வக்கீல் எல்லாவற்றையும் உடைத்திருப்பான். நீ கொடுத்த தண்டனை இந்த விஷயத்தில் அவனுக்குக் கிட்ட வேண்டிய தண்டனை. நீயே லாயராகவும், நீதிபதியாகவும் தண்டனை நிறைவேற்றுகிறவனாகவும், கொடுத்த துணிகரமான தண்டனை இந்தச் செயல், தைரியமும் முட்டாள் தனமும் கலந்த செயல்.

"ஒரு தனிப்பட்டவன் நம் சட்ட .ங்கள் போதவில்லை. என்று சொந்தமாகச் சட்டங்கள் அமைத்துக்கொண்டு இயங்குவது தப்பல்லவா? இருந்தும்..."

ராமநாதன் தன் கைக்கடியாரத்தைப் பார்த்தார்.



"என்னைப் பொறுத்தவரையில் இந்தக் கேஸ் பூர்ண மடைந்து விட்டது. பட்டுப்பூச்சிகள் சேகரிப்பவன் ஒரு ஸ்பெஷல் பூச்சியை. அரிதான பூச்சியைப் பார்த்து அதன் வர்ண வர்ணப் பறப்பின் பாதையில் அதை வலையுடன் துரத்தித் துரத்திக் கடைசியில் வலையில் மாட்டிய பின் ஏற்படும் உணர்ச்சி எனக்கு ஏற்பட்டிருக்கிறது. இனி உனக்குத் தண்டனை கொடுப்பதும் இந்த ஸ்பெஷல் கேஸில் ஒரு 'ஆண்டி க்ளைமாக்ஸ்' ஆகிவிட்டது.

"மேலும் இன்றைய தினம் நான் போலீஸ் ஆபீசரே இல்லையே! நான் ரிடையர் ஆகிவிட்டேன். உன்னைக் கைது செய்யாவிட்டாலும் என் மனச்சாட்சி சுத்தமாக இருக்கும்...

"உன்னுடைய கேஸ் நான் கட்டின சீட்டு மாளிகை. மேலே உள்ள முக்கோண சிகரம் வரை கட்டிவிட்டேன். அது உங்கள் முக்கோணம். சுநந்தா, நீ, கிருஷ்ணன்! இனி ஒரே ஊதில் இதைக் கலைத்து விடுகிறேன்.

"ஐ.பி.ஸிக்கு வெளியே ஒரு அழகான நியாயம் நடந்திருக்கிறது. இதில் எனக்குத் திருப்திதான். என்னைப் பொறுத்தவரை உன்னை எனக்குத் தெரியவே தெரியாது... குட் நைட்!"

ராமநாதன் சரேல் என்று எழுந்து வீட்டுக்கு வெளியில் வந்து படிகளில் இறங்கி ஜனவரி மாதத்தின் குளிருக்குள் டில்லி கிளப்பிய புகை மண்டலத்துக்குள் மறைந்தார்.

## சுஜாதாவின் பிற நூல்கள்

| | |
|---|---|
| என் இனிய இயந்திரா | |
| மீண்டும் ஜீனோ | |
| நகரம் | |
| நில் கவனி தாக்கு | |
| வீட்டுக்குள் வரும் உலகம் (Internet) | 100.00 |
| ஸ்ரீ ரங்கத்து தேவதைகள் | 28.00 |
| வைரங்கள் | 24.00 |
| அனிதாவின் காதல்கள் | 55.00 |
| என்றாவது ஒரு நாள் | |
| வசந்த காலக் குற்றங்கள் | 40.00 |
| அடுத்த நூற்றாண்டு | 40.00 |
| கனவுத் தொழிற்சாலை | 64.00 |
| கரையெல்லாம் செண்பகப்பூ | 39.00 |
| ஒரு பிரயாணம் ஒரு கொலை | 20.00 |
| கடவுள் வந்திருந்தார் | 20.00 |
| குரு பிரசாத்தின் கடைசி தினம் | 22.00 |
| ஆதலினால் காதல் செய்வீர் | |
| நிஜத்தைத் தேடி | 24.00 |
| இரயில் புன்னகை | 22.00 |
| ஆயிரத்தில் இருவர் | 25.00 |
| தங்க முடிச்சு | 28.00 |
| பிரிவோம் சந்திப்போம் - 1 | 35.00 |
| பிரிவோம் சந்திப்போம் - 2 | 52.00 |
| அப்பா அன்புள்ள அப்பா | 20.00 |
| திசை கண்டேன் வான் கண்டேன் | 29.00 |
| பதினாலு நாட்கள் | 25.00 |
| மறுபடியும் கணேஷ் | 30.00 |
| எதையும் ஒரு முறை | 24.00 |
| ஊஞ்சல் | 37.00 |
| ஜன்னல் மலர் | 28.00 |
| நிறமற்ற வானவில் | 40.00 |